# இஸ்லாம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 8

صلى الله عليه وسلم

சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# இஸ்லாம்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் 8

சமயக் கல்வித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
2009

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**இஸ்லாம்**

**தரம் 8 - ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

முதலாம் பதிப்பு 2008
இரண்டாம் பதிப்பு 2009

© தேசிய கல்வி நிறுவகம்

சமயத்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

ISBN 978 - 955 - 654 - 232 - 5

வெளியீடு
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
"நனிலா பப்லிகேஷன் (பிரைவேட்) லிமிட்டடினால"
அச்சிடப்பட்டு வெளியிடபட்டது.

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தற்போதைய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்கள் தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய அவசியமான கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஒரு வழியாட்டியாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது நீங்கள், உங்கள் வகுப்பறைச் செயற்பாடுகளை மாணவர் - மையக் கற்றலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைப்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மாணவர் மையமாக ஒழுங்கமைப்பதென்பது எமது இலங்கை ஆசிரியருக்கும் வகுப்பறைக்கும் ஒரு புதிய அனுபவமன்று. எவ்வாறாயினும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூலம் மாணவர் மையக் கற்றல் - கற்பித்தல் முறைமையியலுக்கு ஒரு புதிய பண்புக் கூறு கிடைக்கிறது.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது மாணவர்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கு அவசியமான பாதையை வழங்குவதோடு மட்டுமல்லாது அதற்கு அவசியமான சூழலை மதிநுட்பத்துடன் கட்டியெழுப்பவும் உதவுகிறது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த அடிப்படையானது ஆசிரியர் என்பவர் வெறுமனே அறிவை ஊடுகடத்துபவராக அல்லாது அறிவில் மாற்றத்தை ஏற்படுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்னும் தத்துவத்தைக் கொண்டுள்ளது. இச்செயற்பாடானது மாணவரை கற்பவர் என்னும் நிலையிலிருந்து அறிவைத் தேடுபவர் என்னும் நிலையை அடைவதற்கும், இதன் மூலம் புதிய அறிவை உருவாக்கவும் உதவுகின்றது. ஆகவே, ஆசிரியர் என்பவர் மாணவருக்கு புதிய அறிவை ஆய்ந்தறிந்து கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டியாகவும் தூண்டியாகவும் செயற்பட வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் உள்ளார்ந்த தத்துவமும் செயற்பாட்டு வடிவமைப்பும் பழமையான கற்பித்தல் முறைமையியலையும் சிந்தனைகளால் உண்டாகும் தடைகளையும் தகர்த்தெறிய ஆசிரியர்களைத் தூண்டும் என நம்பப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் அவசியம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ஆயிரமாம் ஆண்டானது மிகப் பரநத எல்லையற்ற புதிய அறிவின் தோற்றத்தையும் உருவாக்கத்தையும் கண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது புதிய செயற்பாடுகளை ஒரு முகப்படுத்தித் திட்டமிடுவதற்குப் பழைய முறைகளை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆசிரியர் தனது கற்பித்தல் பணியில் பயன்படுத்தக்கூடிய அடிப்படையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் உயர் அணுகுமுறைகளை நோக்கி அவரை வழிநடத்துவதும் இவ்வகையான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆசிரியர், இவ் அறிவுரைப்பு வழிகாட்டியை உரிய முறையில் கற்று அதனுடைய நோக்கங்களைக் கொண்டு வகுப்பறையில் உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம், வகுப்பறையை வினைத்திறன் மிக்கதும் தரமானதுமாக்குவதுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை உயர்வடையச் செய்வதற்கும் ஆசிரியர் பெரும் முயற்சி மேற்கொள்ளுவார் என்பது எனது நம்பிக்கையாகும்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் திறம்படத் தயாரித்து வெளியிடுவதற்கு தமது நேரத்தையும் சிறப்புத் திறமைகளையும் பங்களிப்பு செய்த தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த பாட நிபுணத்துவர்களுக்கும் வெளி வளவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் லால் பெரேரா
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

யாவருக்கும் கல்வி என்னும் நோக்கத்தை மையமாகக் கொண்டு எமது அரசு நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடநூல்களை வழங்கி வருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை ஆக்கி வழங்குவதானது கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பண்புத்தர விருத்தியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக்குள்ளும் அதற்கு வெளியேயும் மாணவர்களின் அறிவுவிருத்திச் செயற்பாட்டுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே. மேலும், பாடத்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் முக்கிய நபரும் ஆசிரியரேயாவார். இந் நோக்கத்தை அடைவதற்கு இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும். இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கற்றுப் பின்பற்றுவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை அதிக பயனுறுதியுடையதாக மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களைச் சார்ந்ததாகும். இப் பொறுப்பை உணர்ந்து செயற்படும் நீங்கள் பெறுமதிமிக்க ஒரு வளம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், தேர்ச்சிகள் என்பவற்றையும் வலிமையான சமூக மற்றும் உள்ளார்ந்த திறன்களையும் கொண்ட முழுமையான பிரசைகளை சமூகத்திற்கு வழங்கும் பொறுப்பு உங்களுடையதே. தற்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய எதிர்கால சந்ததியை நீங்கள் உருவாக்குவீர்கள் என்பதே என் எதிர்பார்ப்பாகும். உங்கள் ஆற்றலை உறுதியாக்குவதன் மூலம் அவ் எதிர்பார்ப்பை வெற்றிகரமாக்குவதற்கு இவ் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

டபிள்யு.எம்.என்.ஜே புஸ்பகுமார

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

'இசுருபாய'

பத்தரமுல்ல

12-11-2009

# முன்னுரை

இலங்கையின் கலைத் திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப, 2007ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்த கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில், குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும் வழங்கப்பட்டு அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்நடைமுறை காரணமாக ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வப்பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல, இனங்காணப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அணுகுமுறை மூலம் அதிக விடயங்களைக் கற்ற, அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள், இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன் அதில் விசேட கவனமும் செலுத்த வேண்டும். இந்நூலில் புதியதொரு கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கு விதந்துரைக்கப் பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், (இயலுமெனில்) இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காண முடிகின்றது.

இதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடப் புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ளலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும், ஒழுங்காகவும், முழுமையாகவும் மாணவர்களைச் சென்றடையச் செய்வது ஆசிரியர்களின் பணியாகும். இந்தவகையில் ஆசிரியரின் வகிபாகம் புத்தறிவு மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு, மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றல் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாள்வதற்கும், இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராகச் செயற்பட்டு, பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்த, புதிய வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறையின்போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக் கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர் சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற கஷ்டங்கள்/இடர்பாடுகளை நீங்கள் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிகளுக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்படும்போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயன்முறையானது, சிறந்த கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டினை விரிவுபடுத்துவதற்கான கருவிகள், ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை மேலும் பலப்படுத்தக் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் இதனை ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல்-கற்பித்தலை விரிவுபடுத்தும் கருவிகளைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாக புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்கலாம். அதற்குப் பொருத்தமானவாறு ஆசிரியர் வகிபாகமும், வகுப்பறையும், புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# அறிமுகம்

தேசிய கல்வி நிறுவகத்தினால் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மூன்று பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

- விரிவான பாடத்திட்டம்
- செயற்பாட்டுத் தொடரகம்
- கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்தலுக்கான கருவிகள்

இப்பாடத்திட்டமானது, விடயத் தலைப்புகள், உபதலைப்புகள் என்பவற்றையும் ஆசிரியர் பங்களிப்புக்குள் எடுக்கக் கூடிய பல்வேறு தீர்மானங்களையும் ஆசிரியர்களுக்கு விளக்கும் பயனுடைய ஓர் ஆவணமாகும்.

பாடச் சீர்திருத்தங்களுக்குரிய காரணிகளையும் பாட நோக்கங்களையும் அறிமுகஞ் செய்து ஆரம்பிக்கும் இவ்வேட்டில், பாடம் தொடர்பான தேர்ச்சிகளும், தேர்ச்சி மட்டங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான பாட உள்ளடக்கம் இங்கு குறிப்பிடப்பட்டிருத்தல் இவ்வேட்டின் சிறப்பியல்பாகும். இப்பாட உள்ளடக்கத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் நுட்பங்களைக் கருத்திற் கொண்டு அதற்குச் செலவாகும் நேரம் தீர்மானிக்கப்பட்டிருப்பது இப்பகுதியின் இன்னுமொரு சிறப்பியல்பாகும்.

இவ்விரிவான பாடத்திட்டம் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் தரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் முன்வைக்கப்பட வேண்டிய தர உள்ளீடுகள் தொடர்பாக தெளிவான விளக்கத்தை ஆசிரியர்களுக்கு வழங்க முனைந்துள்ளது. கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டுக்கு உதவும் பொருட்களை ஏற்கனவே கோரி உரிய நேரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கின்றது. பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டுள்ளன. "பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டமும்" என்ற பகுதியை பாடசாலைக் கல்வி சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்கு கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை ஒப்படைக்கும்போதும், பாடவிதானச் செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போதும், ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும்போதும் உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு பாடசாலை முகாமைத்துவத்தில் ஈடுபடுபவர்களுக்கு இது தேவையான விளக்கங்களை அளிக்கின்றது.

ஆசிரியர் வகிபாகத்தில் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தும் விதமாக சீர்திருத்தப்பட்ட பாடத்திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றிக் கொள்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியருக்குத் தேவையான உதவிகளை கூடியளவில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் பாடத்திட்டத்தை அமுலாக்குவதற்கு உரிய செயற்பாட்டுத் தொடரகத்தை அறிமுகம் செய்திருப்பது இதன் இன்னுமொரு சிறப்பம்சமாகும். இச்செயற்பாடுகளை அவ்வாறே ஆசிரியர்கள் செயற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான, ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனையாற்றல்களுக்கும் ஏற்ப செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. உதாரணமாக மூன்று குழுக்களை அமைக்க வேண்டும் என கூறியிருப்பினும் வகுப்பறையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதை மாற்றிக் கொள்ளலாம். சிறிய வகுப்புகளில் குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும்போது ஆசிரியர்கள் சாதுரியமாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

உரிய தேர்ச்சி மட்டம் நிறைவு பெறும் விதமாக, செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப் பட்டுள்ளது. 40 நிமிட பாடவேளைக்கு அப்பால் செல்வதற்கு ஆசிரியருக்கு நேரிடலாம். ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தந்தச் செயற்பாடுகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோடு நேரசூசியில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனிப்பாடவேளை, இரு பாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச்செயற்பாடுகளை பகுதிகளாகச் செய்து நிறைவு செய்து கொள்ளல் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை மேலும் தொடர்ந்து அடுத்த நாளும் செய்யும்போது முதல் நாள் நிறைவு செய்தவற்றை அறிமுகஞ் செய்து தொடர வேண்டும் என்பது உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. வகுப்பறையில் நிலவும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்களின்போது 40 நிமிட, 80 நிமிட நேரத்திற்கு உங்களால் கவனமாக வகுக்கப்பட்ட திட்டங்களைக் கூட நிறைவேற்றிக் கொள்வது கடினமானது என்பது இரகசியமல்ல.

யாதேனுமொரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என உங்களிடம் ஒருபோதும் எதிர்பார்க்கப்பட மாட்டாது. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, தேடல்களைக் கொண்ட கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை வளப்படுத்தக் கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி நடத்தும் சிறந்த கற்பித்தலையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம்.

புது விடயங்களை அறிமுகப்படுத்தும்போது நீங்கள் செயலிழப்பதை தவிர்ப்பதற்காக உங்களுக்கு வேண்டிய கையேட்டை வழங்குவதை மட்டும் தேசிய கல்வி நிறுவகம் செய்துள்ளது. ஆசிரியர் வகிபாகத்திலே சிறந்ததொரு மாற்றத்தை நாடு பூராவும் ஏற்படுத்துவதற்கு இவ்வேடு பெருந்துணை புரியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

அவ்வாறே இச்செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று புத்தாக்கங்களில் ஈடுபடும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பரிசளிப்பு முறை ஒன்றை அறிமுகஞ் செய்யவும் நாம் எதிர்பார்க்கின்றோம். அப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது உங்களால் திட்டமிடப்படும் செயற்பாடுகளை உதவிப் பணிப்பாளர் நாயகம் (பாடத்திட்ட அபிவிருத்தி) தேசிய கல்வி நிறுவகம், மகரகம எனும் முகவரிக்கு அனுப்பி வைப்பதாகும். அவ்வப்பாடக் குழுக்களினூடாக அச்செயற்பாடுகள் பரிசீலனை செய்யப்பட்டு பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மூன்றாம் பகுதியில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்கு உதவும் கருவித் தொகுதிகள் அடங்குகின்றன. செயற்பாட்டுத் தொகுதி ஒன்றை மையமாகக் கொண்டு வழங்கப்படும் இக்கருவிகள் வகுப்பறைக்கு வெளியேயும் தொடர்ச்சியாக மாணவர்கள் கற்பதற்கு துணை புரியும். அக்கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலை பரிசீலனை செய்து உரிய மீளவலியுறுத்தல்களைச் செய்வது உங்கள் பணியாகும். இம்மீளவலியுறுத்தல்கள் கற்றல் அனுபவங்களை விருப்புடன் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கு துணை புரியும். கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. பொதுப் பரீட்சைகளில் கல்வி மட்டங்களுக்கு ஏற்ப முன்மாதிரி வினாக்களின் தன்மையை அறிமுகஞ் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகம் முயற்சிப்பதற்கான காரணம் அதுவாகும். இதன் பரீட்சை வினாக்களின் தன்மை தொடர்பாக எதிர்பார்க்கும் மாற்றத்தை விளங்கிக் கொள்ளும் நீங்கள் வழமையான முறையிலிருந்து விடுபட்டு மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

## எழுத்தாளர் குழு

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் வழிகாட்டியும்** | : | பேராசிரியர் ஜே.டபிள்யூ. விக்கிரமசிங்ஹ<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| | | திரு. விமல் சியம்பலாகொட<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **பணிப்பு** | : | கலாநிதி மாம்புல்கொட சுமனரத்ன தேரர்<br>பணிப்பாளர்<br>சமயக் கல்வித் துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **இணைப்பாக்கம்** | : | அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி<br>பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>சமயக் கல்வித் துறை<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **விடய ஆலோசனை** | : | கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி - பணிப்பாளர்<br>நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை |
| | : | அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்<br>பிரதிப் பணிப்பாளர்,<br>நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை |
| | | மௌலவி எம்.எச்.எம். லாபிர்<br>பிரதிநிதி, அகில இலங்கை ஜம்இயதுல் உலமா |
| **எழுத்தாளர் குழு உள்ளக** | : | அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி (தே.க.நி)<br>ஜனாப் எஸ்.எம்.ஆர். சுதீன் (தே.க.நி) |
| **வெளியக** | : | ஜனாப் எம்.எச்.எம். நாளிர்<br>அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். அனஸ்<br>அஷ்ஷெய்க் எம்.எம். பஸ்லுர் ரஹ்மான்<br>மௌலவி நூர்தீன் யாகூப்<br>செல்வி எம்.இஸட்.எப். தாஹிரா |
| **பதிப்பு** | : | அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி<br>பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **கணினி வடிவமைப்பு** | : | எம்.டபிள்யூ.ஏ. அஸார் |

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | | iii |
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | | v |
| முன்னுரை | | vi |
| அறிமுகம் | | viii |
| எழுத்தாளர் குழு | | x |
| **பாடத்திட்டம்** | | |
| 8.1 | அறிமுகம் | 3 |
| 8.2 | பாடக் குறிக்கோள்கள் | 4 |
| 8.3 | வகுப்புக்குரிய தேர்ச்சிகள் | 5 |
| 8.4 | பாடத்திட்டம் | 6 |
| | தேர்ச்சி | |
| | தேர்ச்சி மட்டம் | |
| | விடய உள்ளடக்கம் | |
| | உத்தேச பாடவேளைகள் | |
| 8.5 | கற்றல்-கற்பித்தல் முறை | 11 |
| 8.6 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 12 |
| 8.7 | கணிப்பீடும் மதிப்பீடும் | 13 |
| **செயற்பாட்டுத் தொடரகம்** | | |
| 8.8 | கற்றல்-கற்பித்தல் முறை | 15 |
| 8.9 | தர விருத்தி உள்ளீடுகள் | 18 |
| 8.10 | செயற்பாட்டுத் தொடரகம் | 19 |
| 8.11 | கணிப்பீடும் மதிப்பீடும் | 150 |
| 8.12 | கற்றல் கற்பித்தலை மேலும் விரிவுபடுத்துவதற்கான கருவிகள் | 152 |

# பாடத்திட்டம்

பிரபஞ்சம், வாழ்வு, மனிதன் பற்றிய இஸ்லாமிய உலகநோக்கு மிகத் தெளிவானது. அதனை அல்குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையில் விளங்கி, இஸ்லாமிய அறிவும், சிந்தனைத் தெளிவும், ஒழுக்க மாண்பும் பெற்ற செயற்றிறன் மிக்க முஸ்லிமை உருவாக்குதல். அதே நேரத்தில் அவர் நாட்டுக்குப் பயனுள்ள குடிமகனாகவும், மனித சமூகத்திற்குப் பயன்படத்தக்க நல்ல மனிதனாகவும் பணியாற்றுவார்.

## 8.1 அறிமுகம்

மனிதன் இரு கூறுகளைக் கொண்டவன். உடல் (Physical Body), உள்ளம் அல்லது ஆத்மா (Spiritual Mind) ஆகிய இரண்டுமே அவையாகும். உடல் போசிக்கப்படுவது போலவே உள்ளமும் போசிக்கப்பட்டு வளர்க்கப்படவேண்டியது இன்றியமையாததாகும். உடல், உள்ளம் - அகம், புறம் ஆகிய இவ்விரண்டுக்குமிடையிலான சமநிலை பேணப்பட்டுப் போசிக்கப்படும் போது தான், மனித ஆளுமைவிருத்தி முழுமை பெறுகின்றது என்பது இஸ்லாத்தின் உறுதியான நிலைப்பாடாகும். இந்தவகையில் உணவு, உடை, உறையுள், சுகாதாரம் முதலான மனிதனது புறத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பது போலவே அவனது ஆன்மீக, தார்மீகத் தேவைகளும் நிறைவாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்ற வகையிலேயே இஸ்லாத்தின் போதனைகளும் வழிகாட்டல் களும் அமையப்பெற்றுள்ளன.

ஆனால் இன்றைய உலகில் சடவாத சிந்தனைகளின் அதீத செல்வாக்கினால் மனிதனது சூட்சும உடம்பு (ஆத்மா) புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. இதன் விளைவாகப் புறவாழ்வில் மனிதன் அடைந்துள்ள முன்னேற்றங்கள் அவன் எதிர்பார்த்த மகிழ்ச்சியையும், நிறைவையும் அவனுக்கு வழங்கத் தவறிவிட்டமையை நாம் உணர்கின்றோம். இன்றைய மனிதன் மனித வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு கவலைகள், மன இறுக்கம், தளர்ச்சி, விரக்தி முதலான உள நோய்களால் பாதிக்கப்படுகிறான். ஆன்மீக வறுமையும் (Spiritual Poverty) வெறுமையுமே இந்த அவல நிலைக்கான காரணம் என்பதை இப்போது உலகம் உணரத் தலைப்பட்டிருக்கிறது. இதனால்தான் அண்மைக் காலங்களாக உலகளாவிய ரீதியில் ஆன்மீகத்தின் அவசியத்தை அறிஞர்கள், சிந்தனையாளர்கள், கல்வியாளர்கள் அனைவரும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

இப்பின்னணியில் எமது தாய் நாட்டிலும் சமயம் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வில் கூடிய முக்கியத்துவம் பெற வேண்டும் என்ற கருத்து இப்போது வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பின்புலத்தில்தான் நமது கல்விக் கூடங்களில் சமய பாடம் கட்டாயமாக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருகின்றது. இதனூடாக, நலிவுற்றுப் போயுள்ள தார்மீகப் பண்புகளையும், ஆன்மீகப் பண்புகளையும் மேலோங்கச் செய்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன. இன்று வேகமாக மாறி வரும் உலகின் சவால்களுக்கு முன்னால் மனிதனின் சமய ரீதியான ஆளுமைப் பண்புகளைத் தளர்ந்து விடாமல் காப்பற்றுவதற்காக கவர்ச்சிகரமான முறையில் சமய போதனைகள் முன்வைக்கப் பட வேண்டுமென உணரப்பட்டிருக்கிறது. இதனால்தான் புதிய பாடத்திட்டத்தில் சமய பாடமும் எப்போதும் போல் இணைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இஸ்லாம் பாடத்தினூடாகவும் மாணவரிடையே அறிவு, திறன், மனப்பாங்குகள் வளர்க்கப்படுவதோடு அவற்றைச் செயற்படுத்தும் பக்குவமும் விருத்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதனை அடையக் கூடிய விதத்தில் இஸ்லாம் கற்றல்-கற்பித்தல் செயன்முறை நிகழவேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைத் தொகுதியிலுள்ள எல்லாப் பாடத்திட்டங்களும் மாற்றியமைக்கப்படுகின்றன. விருத்தியுற்றுவரும் விஞ்ஞான தொழிநுட்பத்துறைகளோடு ஒன்றியுள்ள மனித வாழ்க்கைக்கு சாந்தியும், சமாதானமும் ஏற்படக் கூடியவாறும் நடைமுறையில் பின்பற்றியொழுகத்தக்க விதத்திலும் இப்பாடத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இஸ்லாம் நிலையானது; காலத்தால் மாறாதது. ஆதலால் மாணவர்களின் தேவைக்கேற்ப அதனைக் கவர்ச்சிகரமாகவும் நவீன முறையிலும் உள்ளத்தில் ஆழ்ந்த தாக்கத்தையும் நடைமுறையில் உறுதியான பற்றுதலையும் ஏற்படுத்தக் கூடிய முறையிலும் வழங்க முயற்சித்துள்ளோம். மாணவர்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்பவர்கள் என்ற வகையில் ஆசிரியர்கள் எமது நல்ல நோக்கங்களை அடைவதற்குத் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார்களெனவும், தமது கருத்துக்களையும் ஆலோசனை களையும் தெரிவித்து இளம் சந்ததியை நெறிப்படுத்துவதற்கு உதவுவார்கள் எனவும் நம்புகிறோம்.

## 8.2 பாடக் குறிக்கோள்கள்

- இஸ்லாத்தின் மீது பூரண நம்பிக்கையும், அதன் கோட்பாடுகள் பற்றிய அறிவும் அதன் நடைமுறைகள் பற்றிய பயிற்சியும் உடைய இளம் சந்ததியை உருவாக்குதல்.

- கலிமா, தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் முதலான அடிப்படை இபாதத்களின் தத்துவங்களையும் நல்லதை ஏற்றல், கூடாததைத் தவிர்த்தல் என்ற அமைப்பில் வாழ்க்கையை நடாத்திச் செல்வதன் அவசியத்தையும் விளங்கி நடத்தையில் பிரயோகிப்பதற்கான பயிற்சியை வழங்குதல்.

- நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளக் கூடிய, பிறருடன் பிணங்கிக் கொள்ளாமல் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்லக் கூடிய போதிய அறிவும், பயிற்சியும், விரும்பத்தக்க பக்குவமும் கொண்ட முஸ்லிம் சந்ததியை உருவாக்குதல்.

- இஸ்லாமியக் குடும்ப வாழ்க்கை பற்றிய விளக்கங்களை அறிந்து குடும்ப உறுப்பினர் என்ற வகையில் குடும்பப் பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்து பங்களிப்புச் செய்கின்ற சந்ததியை உருவாக்குதல்.

- இஸ்லாத்தின் மூலாதாரங்களை அறிந்து, அதன்படி வாழ்ந்து பிறருக்கு முன்மாதிரியாக அமையக் கூடிய தனி நபர்களையும் சமூகத்தையும் உருவாக்குதல்.

- இஸ்லாம் உலகில் அறிமுகமானது முதல் அதன் படிமுறையான வளர்ச்சிக் கட்டத்தில் பல்வேறு துறைகளில் பங்களிப்புச் செய்த தனி நபர்களை விளங்கி எதிர்காலத்தை நடத்திச் செல்வதற்கான அறிவையும் திறனையும் பெற்ற மாணவர் சந்ததியை உருவாக்குதல்.

- ஓய்வு நேரத்தை சரியாகப் பயன்படுத்தி, உழைப்பில் நேர்மையைக் கையாளுகின்ற இஸ்லாமிய அடிப்படையில் வழிநடாத்தக் கூடிய தலைமைப் பண்புடைய மாணவர்களை உருவாக்குதல்.

- கல்வி, மரணிக்கும் வரை தேடப்பட வேண்டும் என்ற இஸ்லாத்தின் கோட்பாட்டை விளங்கிக் கற்பதைத் தொடராக மேற்கொள்கின்ற நடைமுறை விவகாரங்கள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்கின்ற பரம்பரையை உருவாக்குதல்.

## 8.3 வகுப்புக்குரிய தேர்ச்சி

1. (அல் அகாஇத்)
ஏகத்துவம், தூதுத்துவம், இறுதி நாள் ஆகியவற்றை நம்பி ஒழுகுவார்.

2. (அல் இபாதா)
வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.

3. (அல் அக்லாக் வஸ்ஸுலூக்)
நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார்.

4. (பிக்ஹுல் உஸ்ரா)
இஸ்லாமிய குடும்ப வாழ்க்கைக்கான வழிகாட்டல்களைப் பெற்று ஒழுகுவார்.

5. (பிக்ஹுல் மாலிய்யாத்)
உழைப்பிலும், வருமானத்திலும் ஹலால், ஹராம் பேணி நம்பிக்கை நாணயத்தோடு நடப்பார்.

6. (உஸுலுல் பிக்ஹ்)
வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் ஒளியில் அணுகுவார்.

7. (அஸ்ஸீரா வத்தாரீஹ்)
வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு பின்பற்றி ஒழுகுவார்.

8. (மபாஹிமுல் இஸ்லாமிய்யா)
நடைமுறை விவகாரங்கள் பற்றிய இஸ்லாமிய நோக்குகளை அறிந்து கடைப்பிடிப்பார்.

## 8.4 பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | முதலாம் தவணை | | |
| 1.0 ஏகத்துவம், தூதுத்துவம், இறுதிநாள் ஆகியவற்றை நம்பி ஒழுகுவார். | 1.1 அஸ்மாஉல் ஹுஸ்னாவுக்கூடாக தவ்ஹீதை விளங்கி ஒழுகுவார். | • அஸ்மாஉல் ஹுஸ்னா<br>- படைத்தலுடன் தொடர்பானவை<br>- அன்புடன் தொடர்பானவை<br>- அறிவுடன் தொடர்பானவை<br>- மகத்துவத்துடன் தொடர்பானவை<br>- வல்லமை/சக்தி தொடர்பானவை | 02 |
| | 1.2 நபிமார்களின் வரலாற்றுக் கூடாக ரிஸாலத்தை விளங்கி நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்து நடப்பார். | • அன்பியாஉ<br>இப்றாஹீம் (அலை)<br>மூஸா (அலை)<br>ஈஸா (அலை)<br>- வாழ்க்கை குறிப்புக் களும் பணிகளும்<br>- ஹுப்புர் ரஸூல் | 02<br><br>02 |
| | 1.3 சுவனத்தை ஆசித்து, நரகத்தை அஞ்சி, வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வார். | • சுவர்க்கவாசிகளின் பண்புகளும் சுவனத்தின் இன்பங்களும்<br>• நரகவாசிகளின் அடையாளங்களும் நரகத்தின் வேதனைகளும். | 02 |
| 2.0 வாழ்வே இபாதத் என்ற கண்ணோட் டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார். | 2.1 இஸ்லாத்தின் சிறப்பியல்புகளை அறிவதற் கூடாக இஸ்லாத்தின் மகிமையை அறிந்து அதன் கோட்பாடுகளை பின்பற்றுவார். | • இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்<br>- இஸ்லாம் என்பது சாந்தி, சமாதானம்<br>- எல்லா நபிமார்களுக்கும் கொடுக்கப்பட்டது மனித சமுதாயம் முழுவதற்கும் உரியது. | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| | | - நெகிழும் நெகிழாத் தன்மைகள்<br>- சமத்துவம், சகோத ரத்துவம், சுதந்திரம்<br>- உயிர், உடல், கற்பு, பொருள், பாதுகாப்பு | |
| | 2.2 தொழுகையின் சிறப்பை யும் அதனை நிறைவேற்றும் முறையினையும் தெரிந்து தொழுது வருவார். | • ஜமாஅத் தொழுகை<br>- சிறப்பும் முறையும்<br>• ஜும்ஆத் தொழுகை<br>- சிறப்பும் முறையும் பயனும்<br>• தொழுகையைத் தொடர்ந்து ஓதும் ஓதல்கள் | 02<br>01<br>02 |
| | 2.3 ஸகாத்தின் நடைமுறையினை விளங்கி அதனை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குவார். | • ஸகாத் பெற உரிமையுடையோர்<br>• ஸகாத் பெற உரிமையற்றோர்.<br>• விதியாகும் பொருள்கள்<br>• ஸகாத்துல் பித்ர் | 02 |
| | 2.4 ரமழானின் சிறப்பை அறிந்து நோன்பு நோற்பதோடு நற்காரியங்களிலும் ஈடுபடுவார். | • ரமழானின் சிறப்பு<br>- அல்குர்ஆன் அருளப்படல்<br>- லைலதுல் கத்ர்<br>- சிறப்பான இபாதத்து கள் (கியாமுல் லைல், ஸதகா, திலாவதுல் குர்ஆன், தவ்பா) | 02 |
| | 2.5 ஹஜ்ஜின் முக்கியத்துவத்தை விளக்கி அதனை நிறைவேற்றுவோருக்கு உதவுவார். | • ஹஜ்<br>- சிறப்பு<br>- முக்கியத்துவம்<br>- பயன்<br>• உம்ரா | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| **இரண்டாம் தவணை** | | | |
| | 2.6 குர்பானின் பயன்களை விளக்கி அதனை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குவார். | • உழுஹிய்யா<br>• அகீகா<br>• தப்ஹு செய்யும் முறை | 03 |
| | 2.7 நத்ர், கப்பாரா பற்றிய விளக்கங்களை அறிந்து நடைமுறைப்படுத்துவார். | • நத்ர்<br>• கப்பாரா | 02 |
| 3.0 நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார். | 3.1 வாழ்வில் இடம்பெறும் பாவங்களை இனங்கண்டு அவற்றிலிருந்து தவிர்ந்து வாழ்வார். | • பாவங்களும் பாவ மன்னிப்பும்<br>- பெரும் பாவங்கள்<br>- சிறு பாவங்கள்<br>- தவ்பா<br>- இஸ்திஃபார் | 02 |
| | 3.2 வாழ்வின் தேவைகளுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார். நபி (ஸல்) அவர்கள் ஓதிய துஆக்களைக் கற்று ஓதி வருவார். | • துஆக் கேட்டல்<br>- முக்கியத்துவம்<br>- ஒழுங்குகள்<br>- பயன்கள்<br>• நபி (ஸல்) அவர்கள் ஓதிய சில துஆக்கள் | 02 |
| | 3.3 வாழ்வை எளிமையாக அமைத்துக் கொள்வார். | • எளிமை<br>• சிக்கனம்<br>• சேமிப்பு | 02 |
| | 3.4 சொல்லாலும் செயலாலும் மனோபாவத்தாலும் பிறருக்கு உதவி வாழ்வார் | • தர்மம் செய்தல்<br>• நல்லவற்றை நேசித்தல்<br>• பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்கல் | 02 |
| | 3.5 கெட்ட நட்புகளைத் தவிர்த்து நல்ல நட்புக்களை ஏற்படுத்திக் கொள்வார். | • நல்ல நண்பர்களின் தொடர்பும் பயன்களும் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளை |
|---|---|---|---|
| 4.0 இஸ்லாமிய குடும்ப வாழ்க்கைக்கான வழிகாட்டல்களைப் பெற்று ஒழுகுவார். | 4.1 குடும்ப உறுப்பினர் களுக்கு மதிப்பளித்து குடும்பத்தின் சீரான போக்கிற்கு உதவுவார். | • குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்புடன் இயங்குதல்<br>- குடும்ப விவகாரங்களில் ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல்<br>- நல்ல காரியங்களைத் தூண்டுதல், பாவ காரியங்களிலிருந்து விலகுதல்<br>- இக்ராம் | 04 |
| 5.0 உழைப்பிலும் வருமானத்திலும் ஹலால் ஹராம் பேணி நம்பிக்கை நாணயத்துடன் நடப்பார். | 5.1 உழைப்பையும் செலவினங்களையும் அனுமதிக்கப்பட்ட வழிகளில் அமைத்துக் கொள்வார். | • உழைப்பின் முக்கியத்துவம்<br>• செலவிடுவதில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள்<br>• பணம், பொருள் முதலானவற்றைக் கையாளுவது தொடர்பான ஹலால், ஹராம் வரையறைகள். | 02<br>01<br>01 |
| 6.0 வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் ஒளியில் அணுகுவார். | 6.1 அல்குர்ஆனின் முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார். | • அல்குர்ஆனின் சிறப்பு | 01 |
| | 6.2 அல்குர்ஆனின் போதனைகளை விளங்கிப் பின்பற்றுவார். | • ஸூறாக்களின் பொருளும் போதனைகளும்<br>- ஸூறா அல்-அஸ்ர்<br>- ஸூறா அந்நஸ்ர் | 02 |
| | 6.3 ஸுன்னாவின் முக்கியத்துவத்தை விளங்கி நடைமுறைப்படுத்துவார். | • ஸுன்னாவின் முக்கியத்துவம்<br>• சமூக உறவு தொடர்பான ஐந்து சிறிய ஹதீஸ்களும் பொருளும் | 02<br>01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | உள்ளடக்கம் | பாட வேளை. |
|---|---|---|---|
| | **மூன்றாம் தவணை** | | |
| 7.0 வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு பின்பற்றி ஒழுகுவார். | 7.1 நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கையில் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப எடுத்த முயற்சிகளை அறிந்து நடைமுறைப்படுத்துவார். | • நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கை (சமூகத்தை உருவாக்கிக் கட்டியெழுப்பல்) | 03 |
| | 7.2 கலீபாக்களதும் (ஸஹாபாக்களதும்) வாழ்க்கை முன்மாதிரிகளைக் கடைப்பிடிப்பார். | • கலீபா உஸ்மான் (ரழி)<br>• கலீபா அலி (ரழி) இருவரதும் வாழ்க்கை வரலாறு | 04 |
| | 73. அஷரதுல் முபஷ்ஷராக்களை அறிந்து அவர்களின் வரலாற்றைக் கற்று முன்மாதிரிகளைக் கடைப்பிடிப்பார். | • அஷரதுல் முபஷ்ஷரா (அறிமுக வரலாறு) | 03 |
| | 7.4 அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் வரலாற்றைப் படித்து அவர்களின் நெறிமுறைகளைப் பின்பற்றுவார். | • அன்னை ஆயிஷா (ரழி) | 02 |
| 8.0 நடைமுறை விவகாரங்கள் பற்றிய இஸ்லாமிய நோக்குகளை அறிந்து கடைப்பிடிப்பார். | 8.1 பொதுச் சொத்து பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்குவார். | • பொதுச் சொத்து<br>- பயன்படுத்தல்<br>- பாதுகாத்தல் | 02 |
| | 8.2 பொழுதுபோக்குச் சாதனங்கள் பற்றியும் அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளங்கி அதன்படி செயற்படுவார். | • நவீன பொழுதுபோக்குச் சாதனங்களும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும். | 02 |

## 8.5 கற்றல்-கற்பித்தல் முறை

கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவு மட்டம் பயனுறுதிமிக்க கற்றல்-கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதிமிக்க கற்றல்-கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் கட்டுருவாக்கவியல் (Constructivism) சிந்தனையில் உருவான 5E மாதிரி மிகச் சிறப்பான ஓர் அம்சமாகும். மாணவர்கள் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலைக் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படையாகும். மாணவர்களது ஆக்கத்திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூகத்திறன் என்பவற்றை வளர்த்து விடக் கூடிய ஒரு கற்றல் முறையாக அமைந்துள்ளது.

குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்குகளினூடாக மாணவரது நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான ஒரு மாற்றத்தை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. சமய பாடத்தைப் பொறுத்தமட்டில் மாணவர்களின் மூளையை அறிவால் போசித்து. கைகளில் திறன்களை வளர்த்துவிடுவது போதுமானதல்ல. சமய பாடத்தின் மூலம் முக்கியமாக எதிர்பார்ப்பது நடத்தை மாற்றமேயாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாக தேர்ச்சிமையக் கற்றல்-கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவான ஒரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவருக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் அறிவை இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் ஆதிக்க மிகைப்பு, மாற்றப்பட வேண்டியதாகும்.

தேர்ச்சி மையக் கல்வியில் மாணவரின் ஈடுபாடு மிகைத்து நிற்கிறது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடைய வேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவுமட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்வது ஆசிரியரது கடமையாகும். மாணவரைச் சரியாக இனங்கண்டு கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழிகாண்பது ஆசிரியரது கடமையாகும்.

உதாரணமாக, எட்டாந் தரத்தில் "நபி (ஸல்) அவர்கள் ஓதிய துஆக்கள்" என்ற அலகைக் கற்பிக்கும்போது அவை உள்ளடங்கிய, ஒலிநாடாக்களைத் தேடிப் பெற்று அவற்றைச் செவிமடுக்கச் செய்யலாம். அவ்வாறே, உழைப்பின் முக்கியத்துவம், சமூக உறவு என்பவற்றைப் போதிக்கும் ஹதீஸ்களைக் கற்பிக்கும்போது சமூக உறவுகளை எடுத்துக் காட்டும் பத்திரிகைச் செய்திகளை காட்சிப்படுத்துவதன் மூலம் மாணவரில் நிறைந்த செல்வாக்குச் செலுத்தலாம்.

## 8.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

எமது நாட்டுக் கலைத்திட்டம் பரீட்சையை இலக்காகக் கொண்ட ஏட்டுக் கல்விக்கு முதலிடம் வழங்கி நடைமுறைப்படுத்தப்படுகின்றமையால் திறன்களும், மனப்பாங்குகளும், நற்பழக்கங்களும் அரிதாகவே உருவாகும் நிலை காணப்படுகின்றது. இந்நிலைமையை நிவர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பின்னணி பாடசாலைகளில் உருவாகத்தக்க வகையில் பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் வேண்டும்.

இஸ்லாம் பாடத்திட்டத்தினூடாக மாணவரின் திறன்களையும், மனப்பாங்குகளையும் நற்பழக்கங் களையும் விருத்தி செய்துகொள்வதற்கு உதவுவதற்காக பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும் பல்வேறு பாடசாலைச் செயற்பாடுகளைத் துணையாகக் கொள்ளல் சிறந்ததாகும். இப்புதிய கலைத் திட்டத்தைப் பாடசாலையில் அமுல்படுத்துவதற்காக பின்வரும் வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

1. சமய, கலாசார விழுமியங்களை மேம்படுத்த விரும்பும் அமைப்புக்களை பாடசாலையில் நடத்தச் செய்தல்
2. மத்ரஸாக்கள், ஜாமிஆக்கள், பயிற்சி முகாம்கள் போன்றவற்றைப் பார்வையிடுவதற்காக கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தி மாணவரைப் பங்குபற்றச் செய்தல்
3. பாடசாலைக்குத் தேவையான இஸ்லாமிய நடைமுறைகளை மாணவர் தாமாகத் திட்டமிட்டு அமைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்
4. புத்தாக்கச் செயற்றிட்டங்களை உள்ளடக்கிய போட்டிகள், நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை நடத்தல்
5. இனங்காணப்பட்ட புத்தாக்கம் படைத்த மாணவர்களையும் அவர்களுக்கு வளப்பங்களிப்புச் செய்தோரையும் அழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும், அவர்களின் சேவைகளைப் பாடசாலைக்குப் பெற்றுக் கொள்ளலும்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானவையாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்தினதும் மாணவ மாணவியரதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கையில் இருந்து சற்று விலகி பாடசாலைக்கெனச் சிறப்பான ஒரு கொள்கைக் கோவையை வகுத்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறான ஒரு கொள்கைக் கோவையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக, பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் அறிவையும் ஆலோசனைகளையும் பெற்றுப் பயனடையலாம்.

மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்காக தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்துதலும், பயனுறுதிமிக்க நேர முகாமையும் மிக முக்கியமானவையாகும். எனவே இஸ்லாம் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள இரண்டு பாடவேளைகளையும் தொடர்ச்சியாக அமையும் வகையில் ஒதுக்கி வழங்க முடியுமாயின் அது பெரிதும் நன்மை பயக்க இடமுண்டு. மேலும் இப்பாடத்துக்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்போது பின்வரும் நியதிகள் குறித்துக் கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.

- இஸ்லாம் பாடத்துக்கென பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்
- மௌலவி/அஷ்ஷெய்கு தராதரம் பெற்ற ஆசிரியர்கள்
- இஸ்லாமிய கலாசாரத்தை, பட்டப்படிப்புக்கு ஒரு பாடமாகக் கற்றவர்கள்

பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்போந்தவாறாக நடைமுறைப்படுத்துவதால் இஸ்லாமிய அறிவும் சிந்தனைத் தெளிவும் ஒழுக்க மாண்பும் பெற்ற, செயற்றிறன் மிக்க, சமூகத்திற்கும் நாட்டுக்கும் உலகுக்கும் பயனுடைய நல்ல மனிதர்களை உருவாக்கும் பணியில் வெற்றி காணலாம் என்பதில் ஐயமில்லை.

## 8.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையினூடாக மாணவர் அடைய வேண்டிய தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கான எளிய வழிமுறைகளாக கணிப்பீடும், மதிப்பீடும் அமைந்துள்ளன. இஸ்லாம் பாட உள்ளடக்கம் மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், வணக்க வழிபாடுகள் மீது கொண்டுள்ள அக்கறை, சமய சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வகுப்பறைக்குள்ளும், வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறைசார், முறைசாரா வகைகளில் இடம்பெற வேண்டும்.

பாடம் தொடர்பான மதிப்பீடு, தேர்ச்சி மட்டத்தினை கற்றல் - கற்பித்தல் முடிவுற்ற பின்பும், மாத, தவணை, ஆண்டு இறுதிகளில் வாய்மொழி வினாக்கள் மூலமாகவோ, எழுத்து வினாக்கள், வேலைத்திட்டங்கள் போன்றன மூலமாகவோ நடத்தப்படலாம்.

இவை தவிர ஸூறாக்கள், அத்கார்கள், ஹதீஸ்கள், துஆக்கள் முதலியவற்றில் எழுத்துக்கள் சரியாக உச்சரிக்கப்படுகின்றனவா, குறித்த சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகின்றனவா, சரியாக மனனமிடப்பட்டுள்ளனவா என்பவற்றையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஜமாஅத்துத் தொழுகைக்காக மாணவரை பள்ளிவாசலுக்கு அழைத்துச் சென்று மாணவரை நேரடியாக ஜமாஅத் தொழுகையில் பங்குபற்றச் செய்து பின்னர் வகுப்பறைக்குச் சென்று கலந்துரையாடலுக்கூடாக குறைநிரப்புச் செய்தும் கணிப்பீடு செய்யலாம். றமழானின் சிறப்பு பற்றி கற்பிக்கும்போது றமழானில் நிறைவேற்றப்பட வேண்டிய நற்செயல்களை உள்ளடக்கிய -மாணவர் தாமாகவே அடையாளப்படுத்தி வரக் கூடிய முஹாஸபா அட்டவணை ஒன்றைத் தாயரித்துக் கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்களிடையே பரஸ்பரம் நல்லுறவு ஏற்படுவதற்காகவும் சுயமதிப்பேடுகளைத் தயாரித்துக் கொடுக்கலாம். ஸகாத் வசூலித்தல், விநியோகித்தல் தொடர்பாக களவேலைகளை ஏற்படுத்த அவற்றில் ஈடுபடுத்தலாம். கலீபாக்கள், ஸஹாபாக்கள் தொடர்பான பாடங்களைக் கற்பிக்கும்போது அறிஞர்களைச் சந்தித்தோ நூல்களை வாசித்தோ தகவல் பெறக் கூடிய ஒப்படைகளை வழங்கலாம். செயற்பாடுகளினூடாக கணிப்பீடு செய்யும் முறையிலமைந்த வேலைத் திட்டங்களையும் வழங்கலாம்.

# செயற்பாட்டுத் தொடரகம்

## 8.8 கற்றல்-கற்பித்தல் முறை

இக்கற்கை நெறிக்குரிய கற்றல்-கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில், தேடியாய்தலை அடிப்படையாகக் கொண்டு, மாணவரிடத்தே தேர்ச்சிகளை உருவாக்கத்தக்க வகையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடுவது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தேர்ச்சி சார் கல்விக்காக ஆயத்தமாகும்போது, ஆசிரியரது வகிபாகத்திலும் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பண்டைக் காலந்தொட்டு பரவலாக நடைமுறையில் இருந்த மரபு ரீதியான கடத்தல் வகிபாகமும் (Transmission Role) பிற்காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட கொடுக்கல்-வாங்கல் வகிபாகமும் (Transaction Role) எமது வகுப்பறைகளில் தற்போதும் கூட அரசோச்சுவதைக் காண முடிகின்றது. இன்று பாடசாலையை விட்டுச் செல்லும் பிள்ளைகளின் கற்பனைத் திறன்கள், தனிப்பட்ட திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவையெல்லாம் சீர்குலைந்துள்ள நிலையில், கற்றல்-கற்பித்தல் முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அதனை எவ்வாறு செய்வது என்பதையும் இனங்காணல் கடினமாகவுள்ளது.

கடத்தல் வகிபாகத்தில், 'தாம் கற்க வேண்டிய அனைத்தையும் அறிந்தவர் ஆசிரியரே' என மாணவர் ஏற்றுக் கொள்வர். 'மாணவருக்கு எதுவுமே தெரியாது' எனக் கருதும் ஆசிரியர் தமது அறிவை மாணவருக்கு கடத்துபவராகச் செயற்படுகின்றார். ஆசிரியரிடத்திலிருந்து மாணவருக்கு அறிவு கடத்தப்படுதல் மாத்திரம் இடம்பெறும். இவ்வகிபாகம் விரிவுரை போன்றதாகவே அமையும். இக்கற்றல்-கற்பித்தற் செயன்முறை மாணவரது சிந்தனையை - கற்பனையைத் தட்டியெழுப்புவதிலோ அவர்களது ஆளிடை மற்றும் சமூகத் திறன்களை விருத்தி செய்வதிலோ கணிசமான பங்களிப்பைச் செய்வதில்லை.

ஆசிரியர் வகுப்பறையில் நடத்தும் கலந்துரையாடல், கொடுக்கல்-வாங்கல் வகிபாகத்தின் தொடக்கமாகும். ஆசிரியருக்கும் மாணவருக்கும், பின் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றமும், அதனைத் தொடர்ந்து உருவாகும் மாணவருக்கும் மாணவருக்கும் இடையிலான இடைத் தொடர்புகளும் படிப்படியாக ஓர் உரையாடலாக மாற்றம் பெறும். அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றுக்கும், எளிமையானவற்றில் இருந்து சிக்கலானவற்றுக்கும் தூல நிலையில் இருந்து படிப்படியாகக் கருத்து நிலைக்கும் மாணவரை இட்டுச் செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்து வினாக்களை விடுப்பார்.

தேர்ச்சிசார் கல்வியில் மாணவரது பணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அந்தந்தத் தேர்ச்சியில் குறைந்தபட்சம் அண்ணளவுப் பாண்டித்திய மட்டத்தையேனும் அடையத்தக்க வகையில் தலையிட்டு, வளவாளராக (Resource Person) ஆசிரியர் செயற்படுவார். கற்றலுக்குத் தேவையான உபகரணங்களையும் ஏனைய வசதிகளையும் கொண்ட கற்றல் சூழலை உருவாக்குதல் மாணவரது இயலுமைகளையும் இயலாமைகளையும் இனங்காணல். தேவையான முன்னூட்டலும் பின்னூட்டலும் வழங்கி மாணவரது கற்றலை மேம்படுத்தல், வகுப்பறைக்கு அப்பாலும் கற்றல்-கற்பித்தலை இட்டுச் செல்வதற்காக, பொருத்தமான கருவிகளைத் தயார்படுத்தல் போன்றவை எல்லாம் ஆசிரியரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பணிகளாகும். மேற்போந்தவாறான பணிகளை உள்ளடக்கிய ஆசிரியர் வகிபாகமே நிலைமாற்ற வகிபாகம் (Transformation Role) எனப்படுகின்றது.

இதன் முதலாம் பகுதியில் பாடத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க செயற்பாட்டுத் தொடர் இரண்டாம் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்பாடும் குறைந்தபட்சம் மூன்று படிமுறைகளில் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரைக் கற்றலின்பால் ஈர்ப்பதே செயற்பாட்டின் முதலாவது

படிமுறையாகும். இதனால் இப்படிமுறை தொடர்புறுத்தும் அதாவது இணைக்கும் படிமுறை (Engagement Step) எனப்படுகிறது. இதன் தொடக்கத்தில் ஆசிரியர் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தின் பண்புகளை வெளிக்காட்டியவாறு மாணவருடன் சம்பாசிப்பார். இச்சம்பாசணையில் பின்னர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படும். மேலும் செயற்பாடுகள் குறித்த கோடிகாட்டல்களும் வழங்கப்படும். இவ்வாறான கருத்துப் பரிமாற்றத்துக்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கள் கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் நறுக்குகளை முன்வைத்தல், காட்டி மறைக்கும் அட்டைகளைக் (Flash Cards) காட்டுதல் போன்ற தூண்டல் முறைகளைக் கையாளல், பிரச்சினைகள், புதிர்கள், விவகார ஆய்வு (Case Study) போன்றவற்றை முன் வைத்தல், சம்பாசணைகள், போலச் செய்தல்கள், படங்கள், செய்துகாட்டல்கள் (Demonstration) போன்றவற்றை முன்வைத்தல், ஒலிநாடாக்கள், ஒலி-ஒளி நாடாக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தல் போன்ற பல்வேறு உத்திகளை இதற்காக ஆசிரியர் பயன்படுத்தலாம். சுருக்கமாகக் கூறுவதெனின், பின்வரும் மூன்று நோக்கங்களையும் அடைவதை இலக்காகக் கொண்டே செயற்பாட்டின் முதலாவது படிமுறை நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

- வகுப்பின் கவனத்தைக் கவர்ந்தீர்த்தல்
- தேவையான முன்னறிவை நினைவுகூர்வதற்கு மாணவருக்கு வாய்ப்பளித்தல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையின்போது மாணவரை ஈடுபடுத்த எதிர்பார்க்கும் தேடியாய்வின் அடிப்படை அம்சங்களை அம்மாணவருக்கு அறிமுகஞ் செய்தல்.

மாணவருக்கு தேடிக் கண்டறியும் வாய்ப்பை வழங்குவதற்காகவே செயற்பாட்டின் இரண்டாம் படிமுறை திட்டமிடப்பட்டுள்ளது. கண்டறிதலுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தற் படிவத்தை அடிப்படையாகக் கொண்டே மாணவர் கண்டறிகையில் ஈடுபடுவர்.

பிரச்சினையின் வெவ்வேறு அம்சங்களைக் குழுநிலையில் கண்டறிந்து ஒத்துழைத்துக் கற்கத்தக்க வகையில் இக்கண்டறிகையை (Exploration) ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். தரப்பட்டுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் குழுக் கலந்துரையாடலை நடத்தியவாறு மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபடுவதே இப்படிமுறையின் சிறப்பியல்பாகும். தொடர்ந்தும் இவ்வாறான குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தன்னடக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் ஒற்றுமையாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவி புரிதல், நேர முகாமை, உயரிய தரமுடைய உற்பத்திகளைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான பல தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இப்படிமுறையூடாக மாணவருக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

கண்டறிகைக்காக மாணவரை வழிப்படுத்துகையில் மாணவர் குழுக்களின் தலைமைத்துவம் குறித்து ஆசிரியர் முடிவெடுத்தலாகாது. மாறாக மாணவர் குழுவில் ஒருவர் தலைவராக உருவெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் ஆசிரியரின் பொறுப்பாகும். இலைமறை காயாகக் காணப்படும் ஆற்றல்கள் வெளிக் கொணரப்பட்டு தருணத்திற்கு ஏற்ப தலைமைத்துவத்தை ஏற்கும் வாய்ப்பு மாணவருக்குக் கிடைக்க இது வழிகோலும்.

செயற்பாட்டின் மூன்றாம் படிமுறையின்போது ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கண்டறிந்தவற்றை அதாவது தமது கண்டறிகையின் பெறுபேறுகளை ஏனையோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு முன்வைப்புக்கான வாய்ப்பு வழங்கப்படும். அவ்வாறான முன்வைப்புக்களைச் செய்ய மாணவரைத் தூண்டுவதே இங்கு ஆசிரியரின் பணியாகும்.

ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் பொறுப்புக்களை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் முன்வைப்பைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்தல் பயனுடையதாகும். வழக்கமாக ஆசிரியரின் குரல் ஒலிக்கும் வகுப்பறையில், மாணவ மாணவியரின் குரல் ஓங்கி

ஒலிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தலானது, மாணவர் தாம் கண்டறிந்தவற்றுக்கு விளக்கமளித்தலுடன் (Explanation) தொடர்புடைய இப்படிமுறையின் சிறப்பியல்பாகும்.

இரண்டாம் படிமுறையில் கண்டறிந்தவற்றை விரிவுபடுத்தும் (Elaboration) வாய்ப்பு மூன்றாம் படிமுறையின்போது வழங்கப்படும். ஒவ்வொரு குழுவும் தத்தமது முன்வைப்பை நிறைவு செய்த பின்னர், அது தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு முதலில் அந்தந்தக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் பின்னர் ஏனைய குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கப்படும். இறுதியில் முழுவதையும் மீட்டும் (Review)' பொறுப்பு ஆசிரியரையே சாரும். மாணவரது கண்டறிகையில் அடங்கும் முக்கியமான சகல விடயங்களும் தெளிவுபடுத்தப்படும் வகையில் எண்ணக்கருக்களும் கொள்கைகள் கோட்பாடுகளும் மாணவரது மனதில் தெளிவாகப் பதியும் வகையிலும் மீட்டாய்வை முன்வைத்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறை எதிர்பார்க்கப்பட்ட வகையில் வெற்றிகரமாக நிகழுகின்றது என்பதை இடையறாது தேடியறிதல் இச்செயன்முறையை நடைமுறைப்படுத்தும் ஆசிரியரின் பிரதான பொறுப்பாகும். இதற்காக கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும். திட்டமிடப்பட்ட செயற்பாடு தொடர்பாக கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் போது இதற்காக போதிய அவகாசத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. செயற்பாட்டின் இரண்டாவது படிமுறையின்போது மாணவர்கள் கண்டறிகையில் ஈடுபட்டிருக்கையில் கணிப்பீட்டையும் (Assessment) செயற்பாட்டின் மூன்றாவது படிமுறையின்போது மாணவர் தாம் கண்டறிந்தவற்றை விளக்குகையில் மதிப்பீட்டையும் (Evaluation) நடத்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கணிப்பீடு, மதிப்பீடு ஆகியன பற்றிய விரிவான விளக்கம் இவ்வாவணத்தில் பிறிதோர் இடத்தில் தரப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட கற்றல்-கற்பித்தல் முறையியல், நிலைமாற்ற வகிபாகத்தை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பை ஆசிரியருக்கு வழங்குகின்றது. இச்செயன்முறையின் போது குழுநிலைக் கண்டறிகை முதலிடம் பெறுகின்றது. கொடுக்கல் வாங்கல், உரையாடல், சிற்றுரை போன்றவற்றில் ஈடுபடுவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. முதலாவது படிமுறையின்போது கொடுக்கல் வாங்கலுக்கும் உரையாடலுக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இறுதிப் படிமுறையின்போது மீட்டாய்வை நடத்துகையில் சிற்றுரை நடத்துதல், எண்ணக்கருக்களை வலியுறுத்திப் பதித்தல் ஆகியவற்றுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது கல்வி மறுசீரமைப்பிற்கு அமைவாக முன்வைக்கப்படும் இக்கலைத்திட்டத்துடன் தொடர்புடைய கற்றல்-கற்பித்தல் முறையியலை அபிவிருத்தி செய்யும்போது ஆசிரியரின் நிலைமாற்ற வகிபாகம் தொடர்பாக மட்டுமன்றி, கடத்தல் வகிபாகம், கொடுக்கல் வாங்கல் வகிபாகம் ஆகியவற்றின் நல்லம்சங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

## 8.9 தரவீருத்தி உள்ளீடுகள்

### பின்வரும் பொருள்கள்

- டிமை கடதாசி
- ஃபெல்ற் (Felt) பேனாக்கள்
- எழுது கடதாசி
- பென்சில்
- அடிமட்டம்
- றிஜிபோம்
- பிறிஸ்டல் (கடதாசி) போர்ட்
- ஒலி/ஒளி நாடாக்கள்
- ஒளிப்பதிவு நடாக்கள், இறுவட்டுக்கள் (CD)
- பசைநாடா (செலொடேப்)

### பின்வரும் நூல்கள்

- தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி
- ரியாழுஸ் ஸாலிஹீன் - இமாம் நவவி (பதிப்பு 1999)
- முன்மாதிரி முஸ்லிம் - முஹம்மது அலி அல் ஹாஷிமி (2007)
- இஸ்லாம் பாடநூல் - தரம் 8 (2000), (2008) க.வெ.தி.
- இஸ்லாம் பாடநூல் - தரம் 9 (2000) க.வெ.தி.
- இஸ்லாம் பாடநூல் - தரம் 7 (2000) க.வெ.தி.
- அமல்களின் சிறப்புகள் - மவ்லானா ஸகரிய்யா ஸாஹிப் (ரஹ்)
- கலீபாக்கள் - எஸ்.எம். அப்துல் கப்பார் (உலவி)
- இஸ்லாத்தில் மனித உரிமைகள் - மௌலவி ரூஹுல் ஹக்
- துஆயே மஸ்னூன்
- தொழுகையின் பின் துஆ ஓதுவோம் - மௌலவி எஸ்.எல். நவ்பர்
- பெரும் பாவங்கள் - இமாம் தஹபி
- தொழுகைக்குப் பின்னால் ஓதும் ஓதல்கள் அட்டவணை (வெளியீடு: அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா)
- அல்குர்ஆனின் சிறப்பு - மௌலானா ஸகரிய்யா ஸாஹிப்
- அஷரதுல் முபஷ்ஷரா - எம்.எஸ். முஹம்மத் தம்பி
- அன்னை ஆயிஷா - எஸ். முஹம்மத் பஷீர்

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 1.0** | : | **ஏகத்துவம், தூதுத்துவம், இறுதிநாள், ஆகியவற்றை நம்பி ஒழுகுவார்.** |
| **தேர்ச்சி மட்டம் 1.1.** | : | அஸ்மாஉல் ஹுஸ்னாவுக்கூடாக தவ்ஹீதை விளங்கி ஒழுகுவார். |
| **செயற்பாடு 1.1.** | : | **"அஸ்மாஉல் ஹுஸ்னாவைப் பொருளறிந்து மொழிவோம்."** |
| **நேரம்** | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • அஸ்மாஉல் ஹுஸ்னா உள்ளடங்கிய ஒலிநாடா இறுவட்டு (CD) அல்லது இணைப்பு 1.1.1 இலுள்ள பிரதி.<br>• இணைப்பு 1.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரம் - 4 பிரதிகள்.<br>• இணைப்பு 1.1.3 இலுள்ள அஸ்மாஉல் ஹுஸ்னா பட்டியல்கள்<br>• இஸ்லாம் பாடநூல் - தரம் 9 (க. வெ. தி - 1998)<br>• தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி<br>• டிமை கடதாசி, நிறப் பேனாக்கள். |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 1.1.1 :

- அஸ்மாஉல் ஹுஸ்னாவும் பொருளும் உள்ளடங்கிய ஒலிநாடாவைப் பயன்படுத்தியோ இணைப்பு 1.1.1. இல் தரப்பட்டுள்ள அஸ்மாஉல் ஹுஸ்னா பிரதியை இரண்டு மாணவர்களைக் கொண்டு வாசிக்கச் செய்தோ அஸ்மாஉல் ஹுஸ்னாவையும் அதன் மொழியெர்ப்பையும் மாணவர் யாவரும் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அது பற்றி கேட்டு கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்களுள் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை முதன்மையானது.
> - அல்லாஹ்வைப் பற்றி அறிந்து கொள்ள அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் வந்துள்ள அவனது அழகுத் திருநாமங்கள் (அஸ்மாஉல் ஹுஸ்னா) துணை நிற்கின்றன.
> - இத்திருநாமங்களை இஸ்லாமிய அறிஞர்கள், பல பிரிவுகளாகப் பிரித்து விளக்கியுள்ளனர்.
> - இத்திருநாமங்களை விளங்குவது ஈமானில் ஆழமான தாக்கத்தை ஏற்படும்.

(20 நிமிடங்கள்)

படி 1.1.2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் தேடியாய்வு அறிவுறுத்தற் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், டிமை கடதாசி, நிறப் பேனா என்பவற்றை வழங்குங்கள்.
- குழுச் செயற்பாட்டில் ஒவ்வொரு குழுவையும் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 1.1.3

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்
- குறைநிரப்புச் செய்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - ஈமானின் பிரதான அம்சமான அல்லாஹ் பற்றிய நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ள அஸ்மாஉல் ஹுஸ்னா துணை நிற்கின்றது.
> - 'அல்லாஹ்வுக்கே மிக்க அழகான திருநாமங்கள் உரியன. ஆகவே அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள். அவனுடைய திருநாமங்களில் தவறிழைப்போரை விட்டுவிடுங்கள், அவர்கள் தம் வினைக்குரிய கூலியை சீக்கிரத்தில் அடைவார்கள்' (7:180).
> - 'நபியே! நீர் கூறும்: 'நீங்கள் அல்லாஹ் என்றழையுங்கள்; அல்லது ரஹ்மான் என்றழையுங்கள்; (இவ்விரண்டில்) எப்பெயர் கொண்டு நீங்கள் அவனை அழைத்தபோதிலும் அவனுக்கு அழகான இன்னும் பல திருநாமங்கள் இருக்கின்றன.' (17:110)
> - 'அல்லாஹ்வுக்கு 99 திருநாமங்கள் உள்ளன. யார் அவற்றை மனனமிடுகின்றாரோ அவர் சுவனத்தில் நுழைவார்' (புஹாரி).
> - அல்லாஹ் என்ற நாமம் தனித்துவமானது. ஏனையன அல்லாஹ்வின் பண்புகளை விளக்குகின்றன.
> - அல்லாஹ்வின் திருநாமங்களை அல்குர்ஆன், ஹதீஸ் ஆகிய வழிகளினூடாக மாத்திரமே தெரிந்து கொள்ள வேண்டும்.
> - அல்லாஹ்வின் திருநாமங்களை அவனது
>   - படைப்பாற்றல் (காலிக், பாரிஉ....)
>   - அன்பு (ரஹ்மான், ரஹீம்...)
>   - அறிவு (அலீம், லதீப்...)
>   - சக்தி (கவிய்யுன், மதீன்...)
>   - மகத்துவம் (கபீர்...) என்ற நிலையில் அறிஞர்கள் தொகுத்துத் தந்துள்ளனர்.
> - இத்திருநாமங்களை விளங்கிக் கொள்வது மு'மினின் வாழ்வில்
>   - அல்லாஹ்வையே முழுமையாக சார்ந்திருத்தல்
>   - அவனது திருப்தியை எதிர்பார்த்தே எப்போதும் தொழிற்படல்
>   - எந்த நற்செயலும் வீண்போகாது என்ற நம்பிக்கையோடு தொழிற்படல்
>   - எந்த தீய செயலையும் அற்பமாகக் கருதாது கருமமாற்றல்
>   - எத்தியாகத்தையும் செய்ய முன்வருதல்
>
> போன்ற நல்ல தாக்கங்களை ஏற்படுத்தும்.

(20 நிமிடம்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அஸ்மாஉல் ஹுஸ்னாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- அஸ்மாஉல் ஹுஸ்னாவினூடாக அல்லாஹ்வைப் பற்றி தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- அஸ்மாஉல் ஹுஸ்னாவை பல தொகுதிகளாகப் பிரித்துக் காட்டுவார்.
- அஸ்மாஉல் ஹுஸ்னாவை பொருளுடன் மனனமிட்டுக் கூறுவார்.
- அல்குர்ஆன், ஹதீஸ் மூலமே அஸ்மாஉல் ஹுஸ்னாவை அறிய முடியும் என்பதை எடுத்துரைப்பார்.

**இணைப்பு 1.1.1**

| | |
|---|---|
| அவளவற்ற அருளாளன் - | اَلرَّحْمٰنُ |
| நிகரற்ற அன்புடையோன் - | اَلرَّحِيْمُ |
| அரசன் - | اَلْمَلِكُ |
| மிகவும் பரிசுத்தமானவன் - | اَلْقُدُّوْسُ |
| சாந்தியளிப்பவன் - | اَلسَّلَامُ |
| அபயமளிப்பவன் - | اَلْمُؤْمِنُ |
| அவதானித்துக் கண்காணிப்பவன் - | اَلْمُهَيْمِنُ |
| யாவரையும் மிகைத்தவன் - | اَلْعَزِيْزُ |
| அதிகாரத்தால் சீர்திருத்துபவன் - | اَلْجَبَّارُ |
| பெருமைக்குரியவன் - | اَلْمُتَكَبِّرُ |
| சிருஷ்டிகர்த்தா - | اَلْخَالِقُ |
| உருவாக்குபவன் - | اَلْبَارِئُ |
| உருவமைப்பவன் - | اَلْمُصَوِّرُ |
| மிகவும் மன்னிப்பவன் - | اَلْغَفَّارُ |
| அடக்கி ஆள்பவன் - | اَلْقَهَّارُ |
| கொடையளிப்பவன் - | اَلْوَهَّابُ |
| தாராளமாகக் கொடுப்பவன் - | اَلرَّزَّاقُ |
| தாராளமாக திறந்து கொடுப்பவன் - | اَلْفَتَّاحُ |
| யாவற்றையும் அறிந்தவன் - | اَلْعَلِيْمُ |
| சுருக்குபவன் - | اَلْقَابِضُ |
| விரிவாக்குபவன் - | اَلْبَاسِطُ |
| தாழ்த்துபவன் - | اَلْخَافِضُ |
| உயர்த்துபவன் - | اَلرَّافِعُ |
| கண்ணியமளிப்பவன் - | اَلْمُعِزُّ |
| இழிவுபடுத்துபவன் - | اَلْمُذِلُّ |
| யாவற்றையும் செவியுறுபவன் - | اَلسَّمِيْعُ |
| யாவற்றையும் பார்ப்பவன் - | اَلْبَصِيْرُ |
| தீர்ப்பளிப்பவன் - | اَلْحَكَمُ |
| நீதியானவன் - | اَلْعَدْلُ |
| நுண்ணறிவுடையவன் - | اَللَّطِيْفُ |
| நன்கறிந்தவன் - | اَلْخَبِيْرُ |
| சகிப்புத் தன்மையுடையவன் - | اَلْحَلِيْمُ |
| மகத்துவமிக்கவன் - | اَلْعَظِيْمُ |
| மிக்க மன்னிப்பவன் - | اَلْغَفُوْرُ |

| | |
|---|---|
| நன்றி பாராட்டுபவன் - | اَلشَّكُوْرُ |
| உயர்ந்தவன் - | اَلْعَلِيُّ |
| பெரியவன் - | اَلْكَبِيْرُ |
| பாதுகாப்பவன் - | اَلْحَفِيْظُ |
| உணவளிப்பவன் - | اَلْمُقِيْتُ |
| விசாரிப்பவன் - | اَلْحَسِيْبُ |
| மகத்தானவன் - | اَلْجَلِيْلُ |
| தாராளமாகக் கொடுப்பவன் - | اَلْكَرِيْمُ |
| கண்காணிப்பவன் - | اَلرَّقِيْبُ |
| பதிலளிப்பவன் - | اَلْمُجِيْبُ |
| (அருளாலும் அறிவாலும்) வியாபித்தவன் - | اَلْوَاسِعُ |
| ஞானம் நிறைந்தவன் - | اَلْحَكِيْمُ |
| நேசம் கொண்டவன் - | اَلْوَدُوْدُ |
| கீர்த்திமிக்கவன் - | اَلْمَجِيْدُ |
| மீள எழுப்புபவன் - | اَلْبَاعِثُ |
| அனைத்தையும் அறிந்தவன் - | اَلشَّهِيْدُ |
| உண்மையானவன் - | اَلْحَقُّ |
| பொறுப்பேற்றுள்ளவன் - | اَلْوَكِيْلُ |
| பலம் மிக்கவன் - | اَلْقَوِيُّ |
| திடமானவன் - | اَلْمَتِيْنُ |
| காவலன் - | اَلْوَلِيُّ |
| புகழுக்குரியவன் - | اَلْحَمِيْدُ |
| அனைத்தையும் சூழ்ந்தவன் - | اَلْمُحْصِيْ |
| உண்டாக்குபவன் - | اَلْمُبْدِئُ |
| மீட்டுபவன் - | اَلْمُعِيْدُ |
| உயிர்ப்பிப்பவன் - | اَلْمُحْيِيْ |

| | |
|---|---|
| மரணிக்கச் செய்பவன் - | اَلْمُمِيْتُ |
| நித்திய ஜீவன் - | اَلْحَيُّ |
| நிலையானவன் - | اَلْقَيُّوْمُ |
| நாடியதைப் பெறுபவன் - | اَلْوَاجِدُ |
| கீர்த்தியானவன் - | اَلْمَاجِدُ |
| ஒருவன் - | اَلْوَاحِدُ |
| தேவைகள் அற்றவன் - | اَلصَّمَدُ |
| சக்தி மிக்கவன் - | اَلْقَادِرُ |
| கடும் சக்தி உடையவன் - | اَلْمُقْتَدِرُ |
| முற்படுத்துபவன் - | اَلْمُقَدِّمُ |
| பிற்படுத்துபவன் - | اَلْمُؤَخِّرُ |
| ஆரம்பமானவன் - | اَلأَوَّلُ |
| இறுதியானவன் - | اَلآخِرُ |
| வெளிப்படையானவன் - | اَلْبَاطِنُ |
| அந்தரங்கமானவன் - | اَلظَّاهِرُ |
| பொறுப்பாளன் - | اَلْوَالِيْ |
| மேன்மையானவன் - | اَلْمُتَعَالِيْ |
| நன்மை செய்பவன் - | اَلْبَرُّ |
| மிக்க மன்னிப்பு வழங்குபவன் - | اَلتَّوَّابُ |
| தண்டிப்பவன் - | اَلْمُنْتَقِمُ |
| மிக மன்னிப்பவன் - | اَلْعَفُوُّ |
| மகத்தான கிருபையுடையோன் - | اَلرَّؤُوْفُ |
| ஆட்சிக்குரியவன் - | مَالِكُ الْمُلْكِ |
| சங்கையும்* அருளும் உடையவன் - | ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ |
| நேர்மையானவன்/நியாயம் தீர்ப்பவன் - | اَلْمُقْسِطُ |
| ஒன்று திரட்டுபவன் - | اَلْجَامِعُ |

| | | |
|---|---|---|
| செல்வந்தன் | - | اَلْغَنِيُّ |
| கொடுப்பவன் | - | اَلْمُعْطِيْ |
| செல்வந்தனாக ஆக்குபவன் | - | اَلْمُغْنِيُّ |
| தடுப்பவன் | - | اَلْمَانِعُ |
| தீங்கு செய்பவன் | - | اَلضَّارُّ |
| பயனளிப்பவன் | - | اَلنَّافِعُ |
| பிரகாசமானவன் | - | اَلنُّوْرُ |
| நேர்வழி காட்டுபவன் | - | اَلْهَادِى |
| புதிதாக உண்டாக்குபவன் | - | اَلْبَدِيْعُ |
| நிலைத்திருப்பவன் | - | اَلْبَاقِي |
| சொந்தமாக்கிக் கொள்பவன் | - | اَلْوَارِثُ |
| சீரானவன், சீரசெய்பவன் | - | اَلرَّشِيْدُ |
| மிகப் பொறுமையாளன் | - | اَلصَّبُوْرُ |

**இணைப்பு 1.1.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"அஸ்மாஉல் ஹுஸ்னாவை பொருளறிந்து மொழிவோம்."**

- வழங்கப்பட்ட தலைப்பில் முழுமையாக கவனம் செலுத்துங்கள்.
- கலந்துரையாடிய பின் அறிக்கைகளைத் தயாரியுங்கள்.
- அறிக்கை சமர்ப்பிக்க ஆயத்தமாகுங்கள்.

குழு-1 அஸ்மாஉல் ஹுஸ்னாவின் முக்கியத்துவத்தை விவரமாக எழுதுங்கள். (இஸ்லாம் பாடநூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 1998)

குழு-2 ஸூறா அல்-ஹஷ்ரின் 22-24 வரையான வசனங்களிலுள்ள அன்பு, மகத்துவம், படைப்பாற்றல் ஆகியவற்றுடன் தொடர்பான திருநாமங்களை பொருளுடன் அட்டவணைப்படுத்துங்கள். (தர்ஜமதுல் குர்ஆன்; இணைப்பு 1.1.3 இலுள்ள அஸ்மாஉல் ஹுஸ்னா)

குழு-3 அறிவு, சக்தி ஆகியவற்றுடன் தொடர்பான திருநாமங்களை பொருளுடன் அட்டவணைப்படுத்துங்கள். (இணைப்பு 1.1.3 இலுள்ள அஸ்மாஉல் ஹுஸ்னா)

குழு-4 அல்லாஹ்வின் திருநாமங்களை நம்புவதனால் ஏற்படுகின்ற தாக்கங்களை கலந்துரையாடி எழுதுங்கள்.

இணைப்பு 1.1.3

அஸ்மாஉல் ஹுஸ்னா

1. படைப்பாற்றலுடன் தொடர்பானவை

| | | |
|---|---|---|
| சிருஷ்டிகர்த்தா | - | اَلْخَالِقُ |
| உருவாக்குபவன் | - | اَلْبَارِئُ |
| புதிதாக உண்டாக்குபவன் | - | اَلْبَدِيْعُ |
| உருவமமைப்பவன் | - | اَلْمُصَوِّرُ |
| வழிகாட்டுபவன் | - | اَلْهَادِى |
| உண்டாக்குபவன் | - | اَلْمَبْدِئُ |
| மீட்டுபவன் | - | اَلْمُعِيْدُ |
| மீள எழுப்புவன் | - | اَلْبَاعِثُ |
| உயிர்ப்பிப்பவன் | - | اَلْمُحْيِ |
| மரணிக்கச் செய்பவன் | - | اَلْمُمِيْتُ |
| அதிகாரத்தால் சீர்திருத்துபவன் | - | اَلْجَبَّارُ |
| அடக்கியாள்பவன் | - | اَلْقَهَّارُ |
| நிலையானவன் | - | اَلْقَيُّوْمُ |
| பாதுகாப்பவன் | - | اَلْحَفِيْظُ |
| அபயமளிப்பவன் | - | اَلْمُؤْمِنُ |

2. அன்புடன் தொடர்பானவை

| | | |
|---|---|---|
| அளவற்ற அருளாளன் | - | اَلرَّحْمٰنُ |
| நிகரற்ற அன்புடையோன் | - | اَلرَّحِيْمُ |
| மகத்தான கிருபையுடையோன் | - | اَلْعَظِيْمُ |
| நேசம் கொண்டவன் | - | اَلْوَدُوْدُ |

3. அறிவுடன் தொடர்பானவை

| | | |
|---|---|---|
| யாவற்றையும் அறிந்தவன் | - | اَلْعَلِيْمُ |
| நுண்ணறிவுடையவன் | - | اَللَّطِيْفُ |
| நன்கறிந்தவன் | - | اَلْخَبِيْرُ |

அனைத்தையும் அறிந்தவன் / பிரசன்னமாயிருப்பவன் / விசாரிப்பவன் - اَلْحَسِيْبُ

அனைத்தையும் சூழ்ந்தவன் - اَلْمُحْصِيْ

யாவற்றையும் செவியுறுபவன் - اَلسَّمِيْعُ

யாவற்றையும் பார்ப்பவன் - اَلْبَصِيْرُ

கண்காணிப்பவன் - اَلرَّقِيْبُ

வியாபித்தவன் (அறிவாலும் அருளாலும்) - اَلْوَاسِعُ

4. **வல்லமை / சக்தி தொடர்பானவை**

பலம் மிக்கவன் - اَلْقَوِيُّ

திடமானவன் - اَلْمَتِيْنُ

சக்தி மிக்கவன் - اَلْقَادِرُ

கடும் சக்தி உடையவன் - اَلْمُقْتَدِرُ

நாடியதைப் பெறுபவன் - اَلْوَاجِدُ

யாவரையும் மிகைத்தவன் - اَلْعَزِيْزُ

உணவளிப்பவன் - اَلْمُقِيْتُ

ஆட்சிக்குரியவன் - مَالِكُ الْمُلْكُ

அரசன் - اَلْمَلِكُ

சொந்தமாக்கிக் கொள்பவன் - اَلْوَارِثُ

5. **மகத்துவத்துடன் தொடர்பானவை**

மகத்துவமிக்கவன் - اَلْعَظِيْمُ

உயர்ந்தவன் - اَلْعَلِيُّ

மேன்மையானவன் - اَلْمُتَعَالِيْ

பெருமைக்குரியவன் - اَلْمُتَكَبِّرُ

பெரியவன் - اَلْكَبِيْرُ

மிகக் கொடையாளன் - اَلْكَرِيْمُ

புகழுக்குரியவன் - اَلْحَمِيْدُ

கீர்த்தி மிக்கவன் - اَلْمَاجِدُ

வெளிப்படையானவன் - اَلْبَاطِنُ

சங்கையும் அருளும் உடையவன் ذُو الْجَلَالِ وَالإِكْرَامِ

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | : | ஏகத்துவம், தூதுத்துவம், இறுதிநாள், ஆகியவற்றை நம்பி ஒழுகுவார். |
| தேர்ச்சி மட்டம் 1.2 | : | நபிமார்களின் வரலாற்றுக்கூடாக ரிஸாலத்தை விளங்கி நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்து நடப்பார். |
| செயற்பாடு 1.2.1 | : | **'நபிமார்களின் பணிகளை அறிந்து தெளிவு பெறுவோம்'** |
| நேரம் | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • இணைப்பு 1.2.1.1 இலுள்ள கதை<br>• இணைப்பு 1.2.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரம்<br>• தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி<br>• இஸ்லாம் பாடநூல் - தரம் 08 (க. வெ. தி - 2005)<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி **1.2.1.1** :

- இணைப்பு 1.2.1.1இல் உள்ள கதையை வாசித்துக் காட்டுங்கள்.
- மூஸா (அலை) அவர்களது வரலாறு சம்பந்தமாக மேலதிக தகவல்களை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

> - அல்லாஹ்வின் கட்டளைகளை பூமியில் நிலைநாட்ட அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல மனிதர்களே நபிமார்களாவர்.
> - இவர்களுள் இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகியோர்களும் ஏகத்துவத்தை நிலைநாட்ட பல வழிகளில் முயற்சித்தார்கள்.
> - வழிகெட்ட சமூகத்தினரை சீர்திருத்துவதிலும் கடுமையாக உழைத்தார்கள்.

(15 நிமிடங்கள்)

படி **1.2.1.2** :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு பத்திரத்தை வழங்குங்கள்.
- குழுச் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- அறிக்கையை வகுப்பறையில் முன்வைக்கத் தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

(45 நிமிடங்கள்)

படி **1.2.1.3** :

- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கையை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்
- முதலில் முன்வைத்த அதே குழுவினருக்கு விரிவுபடுத்துவதற்கு இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

- நபி இப்றாஹீம் (அலை), நபி மூஸா (அலை), நபி ஈஸா (அலை) ஆகியோரது த.்வா பணி பற்றி அல்குர்ஆன் விளக்கமாகக் கூறியுள்ளது.

**இப்றாஹீம் (அலை)**

- சிலைகளை வணங்குபவர்கள் நிறைந்திருந்த சூழலில் பிறந்து வளர்ந்தார்கள்.
- தனது தந்தைக்கும் மக்களுக்கும் தவ்ஹீதைப் போதித்தார்கள்.
- அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவது ஷிர்க் என்ற கருத்தை முன்வைத்தார்கள்.
  (06 : 75-79)
- நும்றூத் மன்னன் இப்றாஹீம் (அலை) அவர்களின் பிரசாரத்துக்கு தடையாக நின்றான்.
  (02 : 258, 260)
- அதனால் குறிப்பிட்ட பிரதேசத்தில் பிரசாரம் நிறைவடைய வில்லை. எனவே அவ்வூரை விட்டும் ஹிஜ்ரத் சென்றார்கள்.
  (60 : 04)
- அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பிறந்த குழந்தையான இஸ்மாஈலையும் அவரது தாய் ஹாஜரையும் மக்காவில் நிறுத்தி விட்டு வந்தார்கள்.
  (14 : 37-38)
- பின்னர் இறைவனால் கடுமையான ஒரு சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.
  (37 : 103-112)
- இப்றாஹீம் (அலை) அவர்கள் மகன் இஸ்மாஈல் (அலை) அவர்களுடன் இணைந்து க.்பாவைக் கட்டினார்கள்.
  (2 : 125-127)
- இப்றாஹீம் (அலை) அவர்களிடமிருந்து நாம் கற்க வேண்டிய சில படிப்பினைகளாவன,
  1. தாராள மனம்
  2. கொண்ட கொள்கைக்காக எதையும் செய்யும் துணிவு
  3. அல்லாஹ்வின் கட்டளை எதுவாக இருந்தாலும் கட்டுப்படல்
  4. விருந்தோம்பல்

**மூஸா (அலை)**

- எகிப்திய மன்னன் பஹா இஸ்ராஈல்களில் பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொலை செய்து விடுமாறு கட்டளை பிறப்பித்திருந்த சந்தர்ப்பத்தில் மூஸா (அலை) அவர்கள் பிறந்தார்கள்.
  (28 : 07)
- கொலை செய்ய விரும்பாத மூஸாவின் தாய் குழந்தையை ஒரு பெட்டியிலிட்டு ஆற்றில் மிதக்க விட்டார். பிர்அவ்னின் மனைவி மிதந்து வந்த குழந்தையை கண்டெடுத்து தனது மாளிகையில் வளர்த்து வந்தார்.

- வாலிபத்தை அடைந்த அவர் மற்றொருவரைக் காப்பாற்ற எடுத்த முயற்சி கைமோசக் கொலையாக முடிந்ததால் நகரை விட்டு வெளியேறினார்கள்.
- மத்யனுக்கு சென்று சுஐப் (அலை) அவர்களிடத்தில் தங்கியிருந்தார்கள்.

  (28 : 22-28)
- பின்னர் சுஐப் (அலை) அவர்களது மகளை மணந்தார்கள். மத்யனிலிருந்து எகிப்துக்கு திரும்பும் வழியில் நபியாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

  (20 : 9-47)
- அவருக்கு ரிஸாலத் கொடுக்கப்பட்டபோது இரண்டு விசேட அற்புதங்கள் வழங்கப்பட்டன.
- அவரது அற்புதம் அவரோடு போட்டியிட்ட சூனியக்காரர்களை யெல்லாம் மிகைத்துவிட்டது.

  (7 : 106-126)
- பிர்அவ்னையும் அவனது சகாக்களையும் நேர்வழிப்படுத்த பல்வேறு வழிமுறைகளைக் கையாண்ட போதிலும் அவர்கள் அதிலிருந்து படிப்பினை பெறவில்லை.

  (7 : 130-135)
- ஈற்றில் பிர்அவ்ன் அவனது சேனையுடன் அழிக்கப்பட்டான்

  (44 : 23-31), (10 : 90-92)
- மூஸா (அலை) அவர்களது வரலாறு தரும் சில படிப்பினைகளாவன,

  1. சமூக சீர்திருத்தம் என்பது கடின உழைப்பை வேண்டி நிற்கின்றது.
  2. அநியாயம் அழிவையே தேடித் தரும்.
  3. எத்தகைய சோதனைகள் வந்தபோதிலும் ஆட்டம் காணாத ஈமான் அவசியம்.
  4. பிரசாரப் பணியில் நுட்பம் தேவை.

**ஈஸா அலை**

- ஈஸா (அலை) அவர்களின் பிறப்பு மூலம் அல்லாஹ் தந்தையில்லாமலும் மனிதனை பிறக்கச் செய்ய முடியும் என்ற அற்புதத்தை காண்பித்தான்.
- அவரது தாய் மர்யம் (அலை) தூய்மையானவர் என்பதை தனது குழந்தைப் பருவத்திலேயே வெளிப்படுத்தினார்.
- அவர் நபியாக தெரிவு செய்யப்பட்டபோது பல அற்புதங்கள் வழங்கப்பட்டன.

  (3 : 49-50), (5 : 112-115)
- ஹவாரிய்யூன்கள் அவருக்கு பக்க பலமாக இருந்தனர்.
- அவரது பிரசாரத்தை ஏற்க மறுத்தோர் அவரை சிலுவையில் அறைய முற்பட்டபோது அல்லாஹ் அவரை வானத்திற்கு உயர்த்தினான்.

  (3 : 55)

- மறுமை நாள் இடம்பெற முன்னர் ஈஸா (அலை) மீண்டும் இறங்கி வருவார்கள்; நல்லாட்சி புரிவார்கள்.
- ஈஸா (அலை) அவர்களது வரலாறு தரும் சிலபடிப்பினைகளாவன:
  1. தக்வா உள்ளவர்களுக்கு இறைவனின் உதவி உண்டு.
  2. அல்லாஹ்வின் தீனுக்கு உதவியாளர்கள் தேவை.
  3. அல்லாஹ்வின் அபார சக்தி
- அல்லாஹ்வின் வழிகாட்டலைப் பின்பற்றிய இம்மாமனிதர்களின் வாழ்வில் எமக்கு நிறைய முன்மாதிரிகள் உள்ளன.

  (6 : 90)

(20 நிமிடம்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகியோரது வரலாற்றை சுருக்கமாகக் கூறுவார்.
- இப்றாஹீம் (அலை), மூஸா (அலை) ஆகிய இரு தூதர்களினதும் வரலாற்றை ஒப்பு நோக்குவார்.
- நபிமார்கள் காண்பிக்கும் அற்புதங்கள் அல்லாஹ்வின் புறமிருந்தே வெளியாகின்றன என்பதை ஏற்றுக் கொள்வார்.
- நபிமார்களை முன்மாதிரியாகக் கொள்வதோடு பிறரையும் அதற்குத் தூண்டுவார்.

**இணைப்பு 1.2.1.1**

முன்னொரு காலத்தில் எகிப்தில் பிர்அவ்ன் என்ற மன்னன் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். அவனது ஆட்சியின் கீழ் அங்கு வாழ்ந்த பனூ இஸ்ராஈல் என்ற பிரிவினர் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்தனர். அவனது ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய ஒரு குழந்தை பிறக்கப் போகின்றது என சோதிடர்கள் கூறினர். எனவே பிர்அவ்ன் பனூ இஸ்ராஈல்களில் பிறக்கும் ஒவ்வோர் ஆண் குழந்தையையும் கொலை செய்து விடுமாறு கட்டளையிட்டான்.

ஆண் குழந்தைகள் கொல்லப்படுகின்ற இத்தகைய சூழ்நிலையில்தான் மூஸா (அலை) பிறந்தார்கள். ஆனால், அவர்கள் கொல்லப்படவில்லை. ஆண் குழந்தைகளைக் கொல்லுமாறு கட்டளையிட்ட ஆணவம் மிக்க மன்னனின் மாளிகையில் செல்லப் பிள்ளையாக அவர்கள் வளர வேண்டுமென்பது இறைவனின் ஏற்பாடாக இருந்தது.

அரசனின் மாளிகையில் வளர்ந்த மூஸா (அலை) அவர்கள் வாலிபப் பருவத்தை அடைந்தார்கள். அநீதிகளையும் அநியாயங்களையும் கண்டு வருந்தினார்கள். அவற்றை ஒழிக்க முயற்சி செய்தார்கள். இதனால் எகிப்தை விட்டே வெளியேற வேண்டிய நிலை வந்தது.

மத்யனில் பல வருடங்களை கழித்தார்கள். அங்கே திருமணமும் செய்தார்கள். எகிப்து திரும்ப வேண்டுமென்ற ஆசையோடு வரும் வழியில் இறைவனது மிகப் பெரும் அருள் அவர்களுக்கு கிடைத்தது. நபியாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இறைவனது தூதைச் சுமந்து கொண்டு பிர்அவ்னிடம் சென்றார்கள். அவனை இறைவனின் பால் அழகிய முறையில் அழைத்தார்கள். ஆனால் பயன் கிடைக்கவில்லை. மூஸா (அலை) அவர்கள் நம்பிக்கை இழக்கவில்லை. தொடர்ந்தும் அவனை நேர்வழியின் பால் கொண்டு வர முயற்சித்தார்கள். எவ்வளவுதான் முயற்சித்தாலும் எதிர்ப்பே அதிகமாகியது. பிர்அவ்ன் மூஸா (அலை) அவர்களை சூனியக்காரன் என்றான். அவரை வெற்றி கொள்ள எகிப்தின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் பெரும் பெரும் மந்திரவாதிகள், சூனியக்காரர்கள் அழைத்து வரப்பட்டார்கள். குறிப்பிட்ட தினத்தில், குறிப்பிட்ட நேரத்தில் மூஸா (அலை) அவர்களுக்கும் இந்த சூனியக்காரர்களுக்கும் இடையில் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

மக்கள் வெள்ளம் திரண்டது. பிர்அவ்னும் அவனது சகாக்களும் மூஸா (அலை) அவர்களது தோல்வியைக் காணும் நம்பிக்கையோடு ஒன்று கூடியிருந்தனர். சூனியக்காரர்களோ மூஸா (அலை)

அவர்களை வெற்றி கொண்ட பின்னர் தமக்கு கிடைக்கவிருக்கும் அந்தஸ்துக்களையும் சுகபோகங்களையும் பற்றி எண்ணிக் கொண்டிருந்தனர்.

போட்டி ஆரம்பமாகியது. சூனியக்காரர்களுக்கு முதலில் தமது திறமைகளைக் காட்ட மூஸா (அலை) இடமளித்தார்கள். அவர்கள் கயிறுகளை வீசினர். அவை பாம்புகள்போல் காட்சியளித்தன. இறைவனிடமிருந்து மூஸா (அலை) அவர்களுக்கு கட்டளை வந்தது. "மூஸா! உமது கையிலுள்ள தடியை எறியும்." எறிந்தார்கள். அது உண்மையான பாம்பாக மாறியது. சூனியக்காரர்களின் போலிப் பாம்புகளை அது விழுங்கியும் விட்டது.

சூனியக்காரர்களுக்கு உண்மை புரிந்தது. இந்த மூஸா எம்மைப் போன்ற ஒரு சூனியக்காரரல்ல. எம்மால் தடியை உண்மையான பாம்பாக்க முடியாது. ஆனால் இவர் எறிந்த தடியோ உண்மையான பாம்பாகி விட்டதே. நிச்சயம் இவர் அல்லாஹ்வின் தூதர்தான் என முடிவு செய்தனர். பிர்அவ்னின் கொலை அச்சுறுத்தலைக் கூட பொருட்படுத்தாது அவர்கள் ஈமான் கொண்டனர்.

மூஸா (அலை) அவர்களை விட்டு வைப்பது தனது ஆட்சிக்கு ஆபத்து என பிர்அவ்ன் கருதினான். எனவே அவர்களையும் அவர்களது சமூகத்தையும் பூண்டோடு ஒழித்து விடத் தயாரானான். இந்நிலையில் இரவோடிரவாக எகிப்தை விட்டு வெளியேற மூஸா (அலை) அவர்களும் அவர்களது சமூகத்தினரும் முடிவு செய்தனர். அவர்கள் வெளியேறும் செய்தியை அறிந்த பஹிர்அவ்ன் பெரும் பட்டாளத்துடன் பின்னால் துரத்தி வந்தான். முன்னால் செங்கடல், பின்னால் பிர்அவ்ன் என்ற கொடுங்கோலனின் படை இடையே மூஸா (அலை) அவர்களும் அவர்களது சகாக்களும் இந்த நிலையில்தான் 'இறைவனுக்காக வாழ்பவர்களை அவன் அற்புதத்தின் மூலமாகவாவது காப்பாற்றுவான்' என்ற நம் பிக்கையைத் தரும் பாரிய அற்புதம் அடுத்து நடந்தது. மூஸா (அலை) அவர்கள் தடியால் கடலில் அடித்தார்கள். அது பிளந்து வழிகொடுத்தது. மூஸா (அலை) அவர்களும் அவர்களது சகாக்களும் அடுத்த கரையை அடைந்தனர். 'மூஸாவினால் கடக்க முடியுமானால் எம்மால் முடியாதா?' என்ற செருக்கோடு பிர்அவ்னும் அவனது படைகளும் கடலில் இறங்கினர். ஆனால் மூஸா (அலை) அவர்களுக்கும் அவர்களது சகாக்களுக்கும் உதவிய அதே கடல் பிர்அவ்னையும் அவனது பட்டாளத்தையும் விழுங்கிக் கொண்டது.

இறைவனின் ஏற்பாடு எப்படியிருக்கின்றது? ஆணவத்துக்கு உரிய முடிவு இதுதான்!

**இணைப்பு 1.2.1.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"நபிமார்களின் பணிகளை அறிந்து தெளிவு பெறுவோம்"**

- உங்கள் குழுவுக்குரிய தலைப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- செயற்பாடு பற்றிக் குழுநிலையில் கலந்துரையாடுங்கள்.
- டிமைத் தாள், பேனாக்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- அறிக்கைகளை வகுப்பறையில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்.

**குழு-1** இப்றாஹீம் (அலை) அவர்கள் ஏகத்துவத்தை பிரசாரம் செய்த முறையினை அல்குர்ஆனின் 6 : 75-79ம் வசனங்களின் உதவியோடு எழுதுங்கள்.
(தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி)

**குழு-2** அல்குர்ஆனின் 28 : 1-13 வரையிலான வசனங்கள் குறிப்பிடுகின்ற மூஸா (அலை) அவர்களது குழந்தைப் பருவத்தை ஒரு கதை போன்று எழுதுங்கள்.
(தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி)

**குழு-3** ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அல்குர்ஆனின் 3 : 49-50 வசனங்கள் குறிப்பிடுகின்ற அற்புதங்களை அட்டவணைப்படுத்துங்கள்.
(தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி)

**குழு-4** இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை) ஆகிய மூவரிடமுமிருந்தும் நாம் பெற வேண்டிய படிப்பினைகளை அட்டவணைப்படுத்துங்கள். (இஸ்லாம் பாடநூல், தரம்-8, கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 2005)

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **1.0** | : | **ஏகத்துவம், தூதுத்துவம், இறுதிநாள், ஆகியவற்றை நம்பி ஒழுகுவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **1.2** | : | நபியவர்களின் வரலாற்றினூடாக ரிஸாலத்தை விளங்கி நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு வைத்து நடப்பார். |
| **செயற்பாடு** | **1.2.2** | : | **'முஹம்மது (ஸல்) அவர்களை நேசிப்போம்.'** |
| **நேரம்** | | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | | : | • இணைப்பு 1.2.2.1 இலுள்ள வரலாற்றுச் சம்பவம்<br>• இணைப்பு 1.2.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரம்<br>• தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி<br>• இஸ்லாம் பாடநூல் - தரம் 08 (கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - 2005)<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 1.2.2.1** :

- இணைப்பு 1.2.2.1இல் உள்ள வரலாற்றுச் சம்பவத்தை வாசித்துக் காட்டுங்கள்.
- இச்சம்பவம் உணர்த்தும் படிப்பினைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • ஒருவரைப் பின்பற்றி வாழ, அவர் மீது கொள்ளும் நேசமே அடிப்படையாக அமையும்.<br>• மனிதர்களுள் நேசிக்கப்படுவதற்கு மிகப் பொருத்தமானவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களாவார்.<br>• முஹம்மத் (ஸல்) அவர்களை நேசிப்பதை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது.<br>• அவர்களை நாம் எவ்வாறு நேசிக்க வேண்டும் என்பதற்கு ஸஹாபாக்கள் முன்மாதிரியாக இருந்துள்ளனர்.<br>• முஹம்மத் நபி (ஸல்) அவர்களை உறுதியாக நேசிக்கும் ஒருவரது வாழ்வு ஏனையோரது வாழ்வை விட சிறப்புற்று அமையும். |

(20 நிமிடங்கள்)

**படி 1.2.2.2** :

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்
- இணைப்பு 1.2.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- தமது அறிக்கையை வகுப்பறையில் முன்வைக்கத் தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 1.2.2.3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கையை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்
- முன்வைக்கப்பட்ட கருத்துக்களை விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- ஒரு முஸ்லிம் ஏனைய அனைவரையும் விட, அனைத்துப் படைப்புக்களையும் விட அல்லாஹ்வையும் அவனது தூதரையுமே அதிகமாக நேசிக்க வேண்டும்.
- முஹம்மது நபி (ஸல்) அவர்களை நேசிப்பதை 'ஹுப்புர் ரஸூல்' அல்லது 'மஹப்பதுர் ரஸூல்' என அரபு மொழியில் வழங்குவர்.
- "திண்ணமாக நபிக்கையாளர்களுக்கு அவர்களின் உயிர்களை விட நபிதான் முன்னுரிமை பெற்றவராவார். மேலும் நபியின் மனைவியர் அவர்களின் அன்னையராவர்" (33:06)
- 'எனது ஆத்மா யாரின் கையில் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக உங்களில் ஒருவருக்கு தன் பெற்றோரை விட, பிள்ளைகளை விட, மனிதர்கள் அனைவரையும் விட நான் விருப்பத்துக்குரியவனாக மாறும்வரை அவர் விசுவாசியாக முடியாது' (புஹாரி) என முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
- முஹம்மது நபி (ஸல்) அவர்களை நேசிக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள்
  - அவர் அல்லாஹ்வின். இறுதித் தூதர்
  - அல்லாஹ் அவர்களை நேசித்தமை
  - அவர்களிடம் உயர்ந்த பண்புகள் காணப்பட்டமை
  - குறுகிய காலத்தில் அவர்கள் தனது பணியில் வெற்றி கண்டமை
  - அறபு சமூகத்தை ஒற்றுமைப்படுத்தியமை
  - சிறந்த பண்புகளைக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கியமை
  - மூடநம்பிக்கைகளில் இருந்து சமூகத்தை விடுவித்தமை
- ஸஹாபாக்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த அன்புக்கு ஆதாரமாக பல நிகழ்வுகள் காணப்படுகின்றன.
  - ஹிஜ்ரத்தின்போது அபூபக்ர் (ரழி), அலி (ரழி) ஆகியோர் நடந்து கொண்ட முறை
  - உஹத் யுத்தத்தில் தனது மகன், தந்தை, கணவன், சகோதரன், ஆகியோரை இழந்த ஸஹாபிப் பெண்மணி நபியவர்கள் உயிரோடு இருப்பதைக் கண்டு, அல்லாஹ்வின் தூதரே! உங்களை உயிருடன் கண்டபின் எனக்கு ஏற்பட்ட அனைத்து இழப்புகளும் அற்பமானவையே எனக் கூறியமை. (அல் பிதாயா வன்னிஹாயா)

- அபூசுப்யான் காபிராக இருந்தபோது "முஹம்மதை அவரது தோழர்கள் நேசிப்பது போன்று உலகில் எவரும் யாரையும் நேசிப்பதை நான் காணவில்லை" என வியப்படைந்தார். (அல் பிதாயா வன்னிஹாயா)
- முஹம்மது (ஸல்) அவர்களை நேசிக்கும் ஒரு முஸ்லிமிடம் காணப்பட வேண்டிய பண்புகளுள் சில:
  - நபி (ஸல்) அவர்களை தன் வாழ்க்கைக்கு முன்மாதிரியாகக் கொள்வார். (33:21)
  - நபி (ஸல்) அவர்களது வழிகாட்டலைப் பின்பற்றுவார். (4:65)
  - நபி (ஸல்) அவர்களது குடும்பத்தினரையும் ஸஹாபாக்களையும் நேசிப்பார் (42:23)
  - நபி (ஸல்) அவர்களது நற்பெயரைப் பாதுகாக்க உழைப்பார். "யார் எம் சார்பாக அவர்களுக்குப் பதிலளிக்கிறாரோ அவருக்கு சுவனம் உண்டு" (முஸ்லிம்)
  - நபி (ஸல்) அவர்களது ஸீராவைப் படித்து வாழ்வில் பின்பற்றுவார்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நபி (ஸல்) அவர்களை ஏன் நேசிக்க வேண்டும் என்பதற்கான ஆதாரங்களைத் தேடி எழுதுவார்.
- நபி (ஸல்) அவர்களை நேசிப்பது ஏனையவர்களை நேசிப்பதை விட உயர்வானது என்பதற்கான ஆதாரங்களை தர்க்க ரீதியாக முன்வைப்பார்.
- நபி (ஸல்) அவர்களை நேசிப்பதில் இன்பம் காண்பார்.
- அன்றாட வாழ்வில் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி ஒழுகுவார்.
- நபி (ஸல்) அவர்களை நேசிப்பது என்பது அவர்களது வழிமுறையை வாழ்வில் ஏற்படுத்திக் கொள்வதே என்பதனை விளங்கி பிறருக்கும் எடுத்துரைப்பார்.

**இணைப்பு 1.2.2.1**

ஒரு முறை காபிர்கள், ஸைத் இப்னு தஸினா (ரழி) அவர்களைக் கொலை செய்வதற்காக இழுத்துச் சென்றார்கள். அப்போது காபிர் தலைவர்களுள் ஒருவரான அபூ ஸுப்யான் "ஸைதே! நீ இருக்கும் இதே இடத்தில் முஹம்மத் (ஸல்) அவர்கள் நிறுத்தப்பட்டு அவர்களது கழுத்து துண்டிக்கப்படவும் நீ பாதுகாப்புடன் உமது குடும்பத்தவருடன் சேரவும் விரும்புகிறாயா?' எனக் கேட்டார். உடனே ஸைத் (ரழி) அவர்கள், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் எனது குடும்பத்தவருடன் பாதுகாப்பாக இருக்க, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்தில் அவர்களது பாதத்தில் ஒரு முள் தைப்பதைக் கூட நான் விரும்ப மாட்டேன்" (பைஹகி) எனப் பதிலளித்தார்கள்.

இணைப்பு 1.2.2.2

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"முஹம்மது (ஸல்) அவர்களை நேசிப்போம்".**

- உங்கள் குழுவுக்குக் கிடைத்த தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- குழுவாகக் கலந்துரையாடி தகவல்களைத் திரட்டுங்கள்.
- தேவையான காகிதாதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- அறிக்கைகளை வகுப்பறையில் சமர்ப்பிக்க தயாராகுங்கள்.

குழு-1 முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதான எமது நேசத்தை எவ்வழிகளில் வெளிப்படுத்தலாம் என்பதை கலந்தாலோசித்து பட்டியல் படுத்துங்கள்.

குழு-2 "முஹம்மது நபி (ஸல்) அவர்களை நேசிப்பது கடமையானது" என்பதற்கான காரணங்களை கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-3 முஹம்மது நபி (ஸல்) அவர்களை ஸஹாபாக்கள் நேசித்த முறையினை எடுத்துக் காட்ட இரு உதாரணங்களைத் தேடி எழுதுங்கள். (இஸ்லாம் பாடநூல், தரம்-8, க.வெ.தி. 1999)

குழு-4 முஹம்மது நபி (ஸல்) அவர்களை நேசிக்கும் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகளைக் கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-5 முஹம்மது நபி (ஸல்) அவர்களை நேசிப்பது சம்பந்தமாக இரண்டு ஹதீஸ்களைத் தேடி எழுதுங்கள். (இஸ்லாம் பாடநூல், தரம்-8, க.வெ.தி. 1999)

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 1.0 | : | **ஏகத்துவம், தூதுத்துவம், இறுதிநாள், ஆகியவற்றை நம்பி ஒழுகுவார்.** |
| தேர்ச்சி மட்டம் 1.3 | : | "சுவனத்தை ஆசித்து நரகத்தை அஞ்சி வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வார்." |
| செயற்பாடு 1.3 | : | **'சுவனம் புகுவதை வாழ்வின் இலட்சியமாகக் கொள்வோம்.'** |
| நேரம் | : | 80 நிமிடங்கள் |
| தரவிருத்தி உள்ளீடுகள் | : | • இணைப்பு 1.3.1 இலுள்ள ஹதீஸ்<br>• இணைப்பு 1.3.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரம்<br>• தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி<br>• பிரிஸ்டல் போர்ட், டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 1.3.1 :

- இணைப்பு 1.3.1இல் உள்ள ஹதீஸின் கருத்தை சுவைபட உணர்வுபூர்வமாக மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லுங்கள்.
- சுவனம் அதன் இன்பங்கள் சம்பந்தமாக மாணவர் அறிந்து வைத்துள்ள விடயங்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

  - ஒருவர் பெறுகின்ற மிகப் பெரிய வெற்றி சுவனம் நுழைவதாகும்.
  - சுவனத்தை அடைய தீராத ஆசையும் கடின உழைப்பும் தேவை.
  - சுவனத்தை ஆசிக்கும் மக்கள் நல்லமல்கள் புரிபவர்களாக இருப்பர்.
  - சுவனம் சிறந்த இன்பங்கள் கொண்ட உயர்ந்த ஓர் இடமாகும்.
  - ஒருவன் அடையும் மிகப் பெரிய தோல்வி நரகில் நுழைவதாகும்.
  - நரகம் மிகப் பயங்கரமானது; அதன் வேதனைகள் மிகக் கொடூரமானவை.
  - நரகின் வேதனையிலிருந்து காத்துக் கொள்வதற்காக பாவங்களில் இருந்து விலகி இருப்பதும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவதும் அவசியமாகும்.

(15 நிமிடங்கள்)

படி 1.3.2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 1.3.2 இலுள்ள குழுத் தேடியாய்வு பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து நெறிப்படுத்துங்கள்.
- தமது அறிக்கையை வகுப்பறையில் முன்வைக்கத் தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 1.3.3 :

- தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- குறை நிரப்புச் செய்வதற்கு முதலில் அதே குழுவுக்கு வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- நல்லடியார்களுக்காக இறைவன் தயார்படுத்தி வைத்துள்ள இடமே சுவனமாகும்.
- சுவனம் மனிதனின் கற்பனைக்கு அப்பாற்பட்ட இன்பங்களைக் கொண்டது.
- அவர்கள் செய்த (நற்)காரியங்களுக்குக் கூலியாக, அவர்களுக்காக (ச் சித்தப்படுத்தி) மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்குளிரக் கூடிய (சன்மானத்)தை எவராலும் அறிந்து கொள்ள முடியாது. (32:17)
- "எனது நல்லடியார்களுக்காக எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த உள்ளத்திலும் உதித்திராதவற்றை நான் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறேன்" என அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (புஹாரி)
- சுவனம் விசாலமானது.
  - "உங்கள் இறைவனின் மன்னிப்புக்கும், வானங்கள் பூமியின் அகலத்திற்கொப்பான சுவனபதிக்கும் விரைந்து கொள்ளுங்கள். அது பயபக்தி உடையவர்களுக்காக(வே) சித்தப்படுத்தப்பட்டுள்ளது." (3:133)
- சுவனம் மிகவும் பெறுமதி வாய்ந்த இடமாகும்.
  - "சுவனத்தில், ஒரு கசையை வைக்குமளவிலான சிறிய இடம் கூட இவ்வுலகமும் அதில் உள்ள அனைத்தையும் விட சிறந்ததாகும்" (புஹாரி)
- சுவன இன்பங்களுள் சில அல்குர்ஆனின் (47:15), (83:22-28), (56:27-32) ஆகிய ஆயத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- சுவனத்தைப் பெற ஆசை வைப்பதும் அதற்காக உழைப்பதும் அவசியம் என்பதை (7:42), (20:75-76) ஆகிய அல்குர்ஆன் வசனங்கள் குறிப்பிடுகின்றன.
- சுவனம் செல்வோரின் பண்புகளில் சில (13:19-24), 23:1-11) ஆகிய ஆயத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
  - "சுவனத்தில் சில மாளிகைகள் உள்ளன. அவற்றின் உள்ளிருந்து பார்த்தால் வெளிப்பகுதி தெரியும். வெளியில் இருந்து பார்த்தால் உட்பகுதி தெரியும். யார் உணவளிக்கின்றார்களோ, மிருதுவாகப் பேசுகின்றார்களோ, தொடர்ந்து நோன்பு நோற்கின்றார்களோ, இரவில் மனிதர்கள் தூங்கும்போது தொழுகின்றார்களோ அத்தகையவர்களுக்காக அல்லாஹ் அவற்றை ஆயத்தப்படுத்தி வைத்துள்ளான்" (ஸஹீஹுல் ஜாமி∴ அஸ்ஸகீர்).

- பாவிகளுக்கு தயார் செய்து வைக்கப்பட்டுள்ள இடமே நரகமாகும்.
- நரகம் மிகவும் பயங்கரமானது. பாவிகள் அதிலிருந்து தப்ப முயற்சிப்பார்கள். (70:11-16), (3:91) ஆகிய ஆயத்துக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.
- நரக வேதனைகளுள் சிலவற்றை (4:56, (22:19-22), (14:50), (18:29) போன்ற வசனங்கள் குறிப்பிடுகின்றன.
- நரகத்திலிருந்து பாதுகாக்கப்படுவதும் சுவனத்தை அடைவதுமே ஒரு முஸ்லிம் பெறுகின்ற மகத்தான வெற்றியாக இருக்கும்.

اَللّٰهُمَّ إِنَّا نَسْئَلُكَ رِضَاكَ وَالْجَنَّةَ

وَنَعُوْذُ بِكَ مِنْ سَخَطِكَ وَالنَّار

"இறைவா உன் திருப்தியையும் சுவர்க்கத்தையும் உன்னிடம் நான் கேட்கிறேன். உன் கோபத்திலிருந்தும் நரகிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்" இது நபியவர்கள் ஓதி வந்த ஒரு பிரார்த்தனையாகும்.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- சுவன இன்பங்களையும் நரக வேதனைகளையும் இஸ்லாமிய மூலாதாரங்களில் இருந்து எடுத்துக் கூறுவார்.
- சுவனம் நுழைவதற்கு அவசியமான பண்புகளை இனங்கண்டு கூறுவார்.
- சுவனம் நரகம் பற்றி விசுவாசித்து தனது செயற்பாடுகளை நெறிப்படுத்திக் கொள்வார்.
- சுவனத்தைப் பெற்றுத் தரும் நற்செயல்களில் ஈடுபடுவார்.
- நரகத்தில் நுழைவிக்கக் கூடிய செயல்களை விட்டும் தவிர்ந்து நடப்பதோடு ஏனையோரையும் அவ்வாறு நடக்கத் தூண்டுவார்.

**இணைப்பு 1.3.1**

**சுவனம்**

"தங்கத்தினால் ஒரு கல், வெள்ளியினால் ஒரு கல், அதன் சாந்து தூய்மையான கஸ்தூரியினால் ஆனது. அதில் காணப்படும் சிறு கற்களோ முத்துக்களும் இரத்தினங்களுமாகும். அதன் மண் குங்குமமாகும். யார் அதில் நுழைகின்றார்களோ அவர்கள் இன்பமாக இருப்பார்கள். துன்பத்துக்கு உள்ளாக மாட்டார்கள். நிலையாக இருப்பார்கள். மரணிக்க மாட்டார்கள். அவர்களது ஆடைகள் இற்றுப் போவதில்லை. அவர்களது இளமை மாறுவதில்லை" (அஹ்மத்).

இணைப்பு 1.3.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

"சுவனம் புகுவதை வாழ்வின் இலட்சியமாகக் கொள்வோம்"

- உங்களது குழுவுக்கு வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- கலந்துரையாடிப் பெற்ற தகவல்களை அறிக்கைப்படுத்தி அவற்றை வகுப்பிலே சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

குழு-1 ஸூரா அத்தஹ்ரின் (அல்-இன்ஸான்) மொழிபெயர்ப்பை வாசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள சுவன இன்பங்களைத் தொகுத்து எழுதுங்கள்.

குழு-2 ஸூரா ஹாக்காவின் மொழிபெயர்ப்பை வாசித்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள நரக வேதனைகளைத் தொகுத்து எழுதுங்கள்.

குழு-3 ஸூரா முத்தஸ்ஸிரின் மொழிபெயர்ப்பை வாசித்து நரகத்துக்கு இட்டுச் செல்லக் கூடிய செயல்கள் யாவை எனக் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-4 நரகத்தில் இருந்து பாதுகாப்புப் பெற்று சுவனத்துக்குரிய அடியார்களாக மாறுவதற்கு யாது செய்ய வேண்டும் என்பதை கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0** | : | **வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **2.1** | : | இஸ்லாத்தின் சிறப்பியல்புகளை அறிவதனூடாக இஸ்லாத்தின் மகிமையை அறிந்து அதன் கோட்பாடுகளைப் பின்பற்றுவார். |
| **செயற்பாடு** | **2.1** | : | **'இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை அறிந்து பின்பற்றுவோம்.'** |
| **நேரம்** | | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | | : | • இணைப்பு 2.1.1 இலுள்ள உரைப் பகுதி<br>• இணைப்பு 2.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் 3 பிரதிகள்.<br>• நூல், இஸ்லாம் கூறும் மனித உரிமைகள் (மௌலவி ருஹுல் ஹக்)<br>• இஸ்லாம் தரம்-8, பாடநூல் (பதிப்பு 2005)<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 2.1.1 :

- இணைப்பு 2.1.1இல் உள்ள உரைப் பகுதியை எல்லோரும் செவிமடுக்கக் கூடியதாக வாசியுங்கள். அல்லது தாமாக முன்வந்து வாசிக்கக் கூடிய ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கப்பட்ட உரைப் பகுதியை வைத்துக் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - இஸ்லாம் என்ற அரபு வார்த்தைக்கு சரணடைதல், அடிபணிதல், அமைதி, தூய்மை, ஏற்றுக் கொள்ளல், ஒப்படைத்தல், சாந்தி, சமாதானம் என்ற பல அர்த்தங்கள் உள்ளன.
> - இஸ்லாம் ஒரு புதிய வாழ்க்கை முறையன்று. அது ஆதம் (அலை) அவர்கள் முதல் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்களும் ரஸூல்மார்களும் போதித்த வாழ்க்கை முறையாகும்.
> - இஸ்லாம் ஒரு பூரணமான வாழ்க்கை முறையாகும். அது நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் காலம் முதல் எல்லாக் காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் பொருத்தமான முறையில் இறுதிநாள் வரை நிலைத்திருக்கக் கூடியதாக அமைந்துள்ளது.
> - அந்த வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதால் சாந்தி, சமாதானம், அமைதி நிலவுமென்பதையே 'இஸ்லாம்' என்ற சொல் உணர்த்தி நிற்கின்றது.

(15 நிமிடங்கள்)

படி 2.1.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.

- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பறையில் முன்வைக்கத் தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 2.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- இஸ்லாம் இறைவனால் மனித சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒரு வாழ்க்கை நெறியாகும்.
- "அது அல்லாஹ்வினால் ஒப்புக் கொள்ளப்பட்ட மார்க்கம்" என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. (3:19)
- அது அல்லாஹ்வினால் அருளப்பட்டதாக இருப்பதனால் எல்லாக் காலத்துக்கும் எல்லா சமூகத்துக்கும் பொருத்தமானதாகக் காணப்படுகிறது.
- அது வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் வழிகாட்டுகின்றது.
- நபி (ஸல்) அவர்களையும் அவர்கள் உருவாக்கிய ஸஹாபா சமூகத்தையும் அது முன்மாதிரியாகக் காண்பிக்கிறது.
- இஸ்லாம் முழு வாழ்வையும் ஓர் இபாதத்தாகவே கருதுகின்றது.
- அது வணக்க வழிபாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நெறி பிறழாமல் இருக்க வழிகாட்டுகிறது.
- "இஸ்லாம் என்றால் என்ன?" என்று ஜிப்ரீல் (அலை) அவர்கள் கேட்டபோது நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைச் சுட்டிக் காட்டிப் பதிலளித்தார்கள்.
- "ஆரம்பத்தில் மனிதர்கள் யாவரும் ஒரே சமூகத்தினராகவே இருந்தனர்" (2:213).
- இஸ்லாம் மனிதர்கள் அனைவரும் சமஉரிமை உள்ளவர்கள் என்ற கருத்தைப் பிரகடனப்படுத்தி அன்றாட வாழ்வில் அதனை அமுல்படுத்த வைத்து வழிகாட்டியுமுள்ளது.
- "மக்கள் மத்தியில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்" என்ற விடயத்தில் அது கண்டிப்பாக இருக்கிறது. (6:152)
- அது ஆண், பெண் இரு பாலாரது உரிமைகளையும் நியாயமான அடிப்படையில் வழங்கி அவற்றைச் சமூகம் பேணி வர வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்தியிருக்கின்றது.
- இஸ்லாத்தின் சிறப்பியல்புகள், அது உலகில் பரவி வருவதற்குக் காரணமாக உள்ளன.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்பதற்கான ஆதாரங்களை முன்வைப்பார்.
- இஸ்லாத்தில் காணப்படுகின்ற சிறப்பம்சங்களை இனங்கண்டு எழுதுவார்.
- இஸ்லாம் உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் மார்க்கம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- இஸ்லாத்தை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவார்.
- இஸ்லாத்தை மற்றவர்களுக்கும் எடுத்துரைப்பார்.

**இணைப்பு 2.1.1**

இஸ்லாம் அல்லாஹ்வினால் அருளப்பட்ட ஒரு பொதுவான வாழ்க்கை முறையாகும். அது ஆதம் (அலை) அவர்களது காலம் முதல் வெவ்வேறு நபிமார்களால் கால சூழ்நிலைக்கேற்ப போதிக்கப்பட்டு இறுதியாக கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆனை இறக்கியதன் மூலம் முழுமையடைந்தது. மேலும் அது எல்லாக் காலத்திற்கும் எல்லாச் சமூகங்களுக்கும் எல்லா பிரதேசங்களுக்கும் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான வாழ்க்கை முறையாக இருப்பதால் முழுமைத் தன்மை பெற்ற வாழ்க்கை முறையாக ஏற்கப்பட்டுள்ளது. அது ஆன்மீக வாழ்வை மட்டுமன்றி உலகியல் வாழ்வையும் நெறிப்படுத்துகின்றது. தனிநபர் வாழ்வை மட்டுமன்றி சமூக வாழ்வையும் ஒழுங்குபடுத்துகின்றது. அதனை சரிவரப் பின்பற்றி வாழ்வதால் உலகில் அமைதியைக் காணலாம். மறுமையில் சுவர்க்கத்தை அடையலாம்.

**இணைப்பு 2.1.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை அறிந்து பின்பற்றுவோம்."**

- உங்களது குழுவிற்கு வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்பட்ட நூலின் பிரதியைப் பெற்று குறிக்கப்பட்ட தலைப்பினை/ பக்கங்களை வாசித்து அதனூடாகத் தகவல்களைக் கண்டறிய முயற்சி செய்யுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்.
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பறையில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புக்கள்**

குழு-1 இஸ்லாத்தை நீங்கள் விரும்பிப் பின்பற்றுவதற்கான காரணங்களைக் கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-2 இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை அட்டவணைப்படுத்துங்கள்.
(இஸ்லாம் தரம்-8, பதிப்பு 2005)

குழு-3 இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளைப் பற்றிக் கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

(இஸ்லாம் கூறும் மனித உரிமைகள் (மௌலவி ரூஹுல் ஹக்) என்ற நூலை வாசிக்கவும்.)

தேர்ச்சி 2.0 : **வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.**

தேர்ச்சி மட்டம் 2.2 : தொழுகையின் சிறப்பையும் அதனை நிறைவேற்றும் முறையினையும் தெரிந்து தொழுது வருவார்.

செயற்பாடு 2.2.1 : **'தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவோம்.'**

நேரம் : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 2.2.1.1 இலுள்ள சம்பவம்
- இணைப்பு 2.2.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் 3 பிரதிகள்.
- இஸ்லாம் பாடநூல் தரம் 9-10, கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (1980) 21ஆவது பாடம்
- இஸ்லாம் பாடநூல் தரம் 8, கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (1999) 10ஆவது பாடம்
- ரியாழுஸ் ஸாலிஹீன் பதிப்பு (1999) மூன்றாம் பாகம், பாடம் ஜமாஅத் தொழுகையின் சிறப்பு.
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 2.2.1.1 :

- இணைப்பு 2.2.1.1இல் உள்ள சம்பவத்தை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கப்பட்ட சம்பவத்திலிருந்து மாணவர்கள் உள்வாங்கிய விடயங்களை வினவி அறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • ஸலாதுல் ஜமாஆ என்பது ஒரு இமாமைப் பின்பற்றி கூட்டாகத் தொழுவதைக் குறிக்கும்.<br>• ஜமாஅத் தொழுகையின் முக்கியத்துவத்தை அல்குர்ஆனும், சுன்னாவும் வலியுறுத்துகின்றன.<br>• தனியாகத் தொழுவதை விட ஜமாஅத்தாக தொழுவது பல சிறப்புக்களை உடையது.<br>• ஐவேளைத் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவது பர்ளு கிபாயாவாகும்.<br>• வேறு சில தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழுவது சுன்னத்தாக்கப்பட்டுள்ளது. |

(10 நிமிடங்கள்)

படி 2.2.1.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.

- குழு அறிக்கையை வகுப்பறையில் முன்வைக்கத் தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

(45 நிமிடங்கள்)

படி 2.2.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - "நீங்கள் தொழுகையைக் கடைபிடித்தொழுகுங்கள். ஸகாத்தும் கொடுத்து வாருங்கள். தொழுகை யில் (ஒன்று சேர்ந்து குனிந்து) 'ருகூஉ' செய்பவர்களுடன் நீங்களும் (குனிந்து) ருகூஉ செய்யுங்கள்" (2:43)
> - "ஜமாஅத்துடன் தொழுவது தனித்துத் தொழுவதை விட 27 மடங்கு சிறந்தது" (புஹாரி).
> - "தொடர்ந்து 40 நாட்கள் ஜமாஅத்தாகத் தொழுது வருபவர்களுக்கு இரண்டு விடுதலைகள் கிடைக்கின்றன. அவை, நரகத்திலிருந்து விடுதலையும் நயவஞ்சகத்திலிருந்து விடுதலையுமாகும்" (திர்மிதி)
> - ஜமாஅத் தொழுகைக்கான இமாமைத் தெரிவு செய்யும் போது சில தகைமைகளைக் கருத்திற் கொள்ள வேண்டும்.
> - அல்லாஹ்வின் அழைப்புக்கு அடிபணிதல்; முஸ்லிம்களோடு ஒன்றிணைதல்; தலைமைத்துவத்துக்கு கட்டுப்படல்; விட்டுக் கொடுத்தல், சகிப்புத் தன்மை, பரஸ்பர அறிமுகம், ஒத்துழைப்பு போன்ற நல்ல பண்புகளை வளர்க்கவும் ஜமாஅத் தொழுகை உதவுகின்றது.
> - மஃமூம்கள் இமாமை பின்தொடர்வது பற்றிய வரையறைகள் உள்ளன.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ஜமாஅத்தாகத் தொழும் தொழுகைகளையும் தனித்துத் தொழும் தொழுகைகளையும் இனங்கண்டு எழுதுவார்.
- ஜமாஅத்தாகத் தொழுவதால் அளப்பரிய நன்மைகளைப் பெறலாம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஜமாஅத்தாகத் தொழுவதால் கிடைக்கும் நன்மைகளை அறிந்து வாழ்வில் கடைப்பிடிப்பார்.
- தொழுகைகளை ஜமாஅத்தாக நிறைவேற்ற மற்றவர்களைத் தூண்டுவார்.

**இணைப்பு 2.2.1.1**

வரலாற்றுச் சம்பவம்

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் முஸ்லிம்கள் மஸ்ஜிதுந் நபவிக்குச் சென்று ஜமாஅத்தாகவே தொழுது வந்தனர். அதான் ஒலி கேட்டதும் எல்லோரும் மஸ்ஜிதில் கூடுவர். நபி (ஸல்) அவர்களின் தலைமையில் தொழுகையை நிறைவேற்றுவர். இருந்தாலும் சிலர் ஜமாஅத்துக்கு வராமல் பாராமுகமாயிருந்தனர். இதனை அவதானித்த நபி (ஸல்) அவர்கள் கோபமடைந்தார்கள். "தகுந்த காரணமின்றி மஸ்ஜிதுக்கு வராதவர்களின் வீடுகளுக்கு வாலிபர்களைக் கொண்டு தீ மூட்ட விரும்புகிறேன்" என கடுமையாகக் கூறினார்கள். பின்னர் "பெண்களும் சிறுவர்களும் அங்கு வாழ்வதால் அதனைத் தவிர்த்துக் கொள்கிறேன்" எனவும் குறிப்பிட்டார்கள்.

**இணைப்பு 2.2.1.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவோம்."**

- உங்களது குழுவிற்கு வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்பட்ட நூலின் பிரதியைப் பெற்று குறிக்கப்பட்ட பக்கங்களை வாசித்து அதனூடாகத் தகவல்களைக் கண்டறிய முயற்சி செய்யுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்.
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பறையில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 ஜமாஅத்தாக தொழக் கூடிய தொழுகைகளையும் தனித்துத் தொழக் கூடிய தொழுகைகளையும் அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-2 ஜமாஅத் தொழுகை மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகளை தொகுத்து எழுதுங்கள். (ரியாழுஸ் ஸாலிஹீன் என்ற நூலைப் பயன்படுத்துங்கள்)

குழு-3 ஜமாஅத் தொழுகை தொடர்பான சட்ட விதிகளை இரு ரக்அத்துக்கள் கொண்ட ஒரு தொழுகையினூடாகச் செய்து காட்டுங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 2.0 | : | **வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.** |
| தேர்ச்சி மட்டம் 2.2 | : | தொழுகையின் சிறப்பையும் அதனை நிறைவேற்றும் முறையினையும் தெரிந்து தொழுது வருவார். |
| செயற்பாடு 2.2.2 | : | **'ஜும்ஆவின் சிறப்பை அறிந்து அதனை நிறைவேற்றுவோம்.'** |
| நேரம் | : | 40 நிமிடங்கள் |
| தரவிருத்தி உள்ளீடுகள் | : | • இணைப்பு 2.2.2.1 இலுள்ள குர்ஆன் வசனம்<br>• இணைப்பு 2.2.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• ரியாழுஸ் ஸாலிஹீன் பதிப்பு (1999) மூன்றாம் பாகம், பாடம் ஜும்ஆவின் சிறப்பு.<br>• இஸ்லாம் பாடநூல் தரம் 9-10, கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (1980) 27ஆவது பாடம்<br>• இஸ்லாம் பாடநூல் தரம் 8, கல்வி வெளியீட்டுத் திணைக்களம் (1999)<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.2.2.1** :

- இணைப்பு 2.2.2.1இல் உள்ள ஸூரத்துல் ஜும்ஆவின் 9 முதல் 11 வரையுள்ள வசனங்களை ஒரு மாணவனைக் கொண்டு ஓத வைத்து மற்றொரு மாணவனைக் கொண்டு அதன் பொருளை வாசிக்குமாறு கூறுங்கள்.
- குர்ஆன் வசனத்திலிருந்து மாணவர்கள் உள்வாங்கிய விடயங்களை வினவி அறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - ஜும்ஆ முஸ்லிமின் வாழ்வில் சிறப்பிடம் பெறுகின்றது.
> - ஜும்ஆ தினம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டுள்ளது.
> - ஜும்ஆவின் சிறப்பு பற்றி அல்-குர்ஆனும் ஸுன்னாவும் வலியுறுத்துகின்றன.
> - ஜும்ஆ கடமை தனிமனித வாழ்விலும், சமூக வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

(05 நிமிடங்கள்)

**படி 2.2.2.2** :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.

**(25 நிமிடங்கள்)**

படி 2.2.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- 'ஜும்ஆ' என்ற அரபிச் சொல்லுக்கு 'ஒன்றுகூடுதல்' என்பது கருத்தாகும்.
- ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் முஸ்லிம்கள் தாம் வாழும் கிராமங்களில், நகரங்களில் ஒன்று கூடி மஸ்ஜிதுகளில் நிறைவேற்றும் விசேட கடமையே ஜும்ஆவாகும்.
- ஜும்ஆ தொழுகையின் சிறப்பு பற்றி குர்ஆன்: "விசுவாசிகளே (வெள்ளிக் கிழமையாகிய) ஜும்ஆ தினத்தன்று தொழுகைக் காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால் வர்த்தகத்தை விட்டு விட்டு அல்லாஹ்வை தியானிக்க நீங்கள் விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிவுடையோர்களாக இருந் தால், இதுவே உங்களுக்கு மிக்க நன்று" (அல்குர்ஆன் 62:9)
- ஜும்ஆ நாளின் சிறப்பு பற்றி ஸுன்னா: "நிச்சயமாக வெள்ளிக் கிழமையானது நாட்களுக்கு நாயகமாகும். அல்லாஹ்விடம் எல்லா நாட்களையும் விட மிகவும் கண்ணியம் வாய்ந்ததாகும். ஹஜ்ஜுப் பெருநாள், நோன்புப் பெருநாள் ஆகியவற்றை விடவும் அல்லாஹ்விடம் அது மிகக் கனதியுடையதாகும். அதில் ஐந்து சிறந்த காரியங்கள் உள்ளன. அந்நாளில்,

  1. அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான்.
  2. ஆதம் (அலை) அவர்களைப் பூமிக்கு இறக்கினான்.
  3. ஆதம் (அலை) அவர்களை வபாத்தாக்கினான்
  4. அதிலே ஒரு நேரம் உண்டு. அதில் பாவ காரியத்தைத் தவிர, மனிதன் ஏதாவதொன்றை அல்லாஹ்விடம் கேட்டால் அதை அவனுக்கு நிச்சயம் கொடுத்தே தீருவான்.
  5. அதில் இறுதிநாள் ஏற்படும். (இதனால்) எந்தவொரு சங்கை பொருந்திய மலக்கும் பயந்து நடுங்குவர். அதுபோல் வானமோ, பூமியோ, காற்றோ, மலைகளோ, கடலோ (எதுவானாலும்) வெள்ளிக் கிழமை வரும்போது பயந்து நடுங்கிக் கொண்டேயிருக்கும்" (அஹ்மத், இப்னுமாஜா)

- ஜும்ஆ கடமையை நிறைவேற்றுவதற்கான விதிமுறைகளும், வழிமுறைகளும் உள்ளன.
- குளித்தல், தம்மிடமுள்ள ஆடைகளில் புதியனவற்றை அணிதல், நேர காலத்தோடு மஸ்ஜிதுக்குச் செல்லல், குர்ஆன் ஓதுதல், திக்ர், ஸலவாத், தவ்பா, இஸ்தி.்.பார் போன்றவற்றில் ஈடுபடல், தர்மம் செய்தல், மக்பராக்களைத் தரிசித்தல், போன்றன ஜும்ஆ தினத்தில் செய்யக் கூடிய ஸுன்னத்தான சில காரியங்களாகும்.

- ஜும்ஆ தனிமனித வாழ்வில் உடல், உளப் பரிசுத்தத்திற்கும், குத்பா மூலம் நல்வழிப்படுவதற்கும் வாழ்வைச் சீரசெய்து கொள்வதற்கும் வழிவகுக்கின்றது.
- சமூக வாழ்வில் முஸ்லிம்கள் இணைந்து வாழவும் வைத்து அவர்களிடையே ஐக்கியம், ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம் போன்றவற்றைக் கட்டியெழுப்பவும் அது உதவுகின்றது.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ஜும்ஆ நாளின் சிறப்புக்களை எடுத்துக் கூறுவார்.
- ஏனைய தொழுகைகளிலிருந்து ஜும்ஆ எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை சொல்லிக் காட்டுவார்.
- ஜும்ஆ தொழுகையை தவறாமல் நிறைவேற்றி வருவார்.
- மற்றவர்களையும் ஜும்ஆவுக்கு அழைத்துச் செல்வார்.
- ஜும்ஆ நாளை கண்ணியப்படுத்துவார்.

**இணைப்பு 2.2.2.1**

**அல்குர்ஆன்**

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا نُودِىَ لِلصَّلَوٰةِ مِن يَوْمِ ٱلْجُمُعَةِ
فَٱسْعَوْاْ إِلَىٰ ذِكْرِ ٱللَّهِ وَذَرُواْ ٱلْبَيْعَ ذَٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ إِن كُنتُمْ
تَعْلَمُونَ ﴿٩﴾

"விசுவாசிகளே! (வெள்ளிக் கிழமையாகிய) ஜும்ஆ தினத்தன்று தொழுகைக்காக (பாங்கு சொல்லி நீங்கள்) அழைக்கப்பட்டால், வர்த்தகத்தை விட்டு விட்டு, அல்லாஹ்வை நினைவு கூற நீங்கள் விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிவுடையோர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக்க நன்று" (62:9)

**இணைப்பு 2.2.2.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"ஜும்ஆவின் சிறப்பை அறிந்து அதனை நிறைவேற்றுவோம்"**

- உங்களது குழுவுக்குக் கிடைத்த தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- குழுச் செயற்பாட்டிற்குத் தேவையான நூல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- எல்லோரும் குழுச் செயற்பாட்டில் கலந்து கொள்ளுங்கள்.
- அறிக்கை தயாரித்து அதனை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 ஜும்ஆ நாளின் சிறப்பை எடுத்துக் காட்டும் குர்ஆன், ஹதீஸ் வசனங்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிட்டு, அவை உணர்த்தும் போதனைகளை முன்வையுங்கள்.

குழு-2 ஜும்ஆ தினத்தில் நீர் நிறைவேற்றுகின்ற செயற்பாடுகளைக் குறிப்பிட்டு, அவற்றில் பர்ளானவற்றையும், சுன்னத்தானவற்றையும் அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-3 ஜும்ஆ தினத்தில் மஸ்ஜிதில் மக்கள் நடந்து கொள்ளும் முறைகள் பற்றிக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**தேர்ச்சி 2.0 : வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 :** தொழுகையின் சிறப்பையும் அதனை நிறைவேற்றும் முறையினையும் தெரிந்து தொழுது வருவார்.

**செயற்பாடு 2.2.3 : 'தொழுகை முடிந்த பின்னர் ஓதுகின்ற அவ்ராதுகளை ஓதி வருவோம்.'**

**நேரம் :** 40 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 2.2.3.1 இலுள்ள அட்டவணை
- இணைப்பு 2.2.3.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- துஆயே மஸ்னூன்
- தொழுகையின் பின் துஆ ஓதுவோம் - மௌலவி எஸ்.எல். நவ்பர்
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.2.3.1 :**

- இணைப்பு 2.2.3.1இல் உள்ள அவ்ராதுகள் அடங்கிய அட்டையை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தொழுகையின் பின் ஓதும் அவ்ராதுகள் எவையென வினவி கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • தொழுகை தக்பீர் தஹ்ரீமுடன் ஆரம்பித்து ஸலாத்துடன் முடிவடைகிறது.<br>• தொழுது முடிந்த பின்னர் ஓத வேண்டிய ஸுன்னத்தான அவ்ராதுகள் பல காணப்படுகின்றன.<br>• அவற்றை நபி (ஸல்) அவர்கள் ஓதி வந்துள்ளார்கள். |

(05 நிமிடங்கள்)

**படி 2.2.3.2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(25 நிமிடங்கள்)

**படி 2.2.3.3 :**

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- தொழுது முடிந்து ஸலாம் கொடுத்த பின்னர் நபி (ஸல்) அவர்கள் 'அஸ்த.'.பிருல்லாஹ்' என மூன்று முறை ஓதுவார்கள் (முஸ்லிம்).
- நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும்

  'ஸுப்ஹானல்லாஹ்' என்று 33 தடவையும்,

  'அல்ஹம்துலில்லாஹ்' என்று 33 தடவையும்

  'அல்லாஹு அக்பர்' என்று 33 தடவையும் ஓதி,

  لاَ اِلهَ إلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ

  وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْئٍ قَدِيْرٍ

  என்று ஒருமுறை ஓதி நூறாகப் பூரணப்படுத்துவார்கள்.
- "தொழுகைக்குப் பின் இதனை ஒருவர் ஓதி வருவாரானால் அவருடைய பாவங்கள் கடலின் நுரையளவு இருப்பினும் மன்னிக்கப்படும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (முஸ்லிம்).
- நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் பின்வரும் துஆவை ஓதி வருவார்கள்.

  اَللّٰهُمَّ عَافِنِي فِيْ بَدَنِي اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ سَمْعِيْ

  اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَصَرِيْ اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْكُفْرِ وَالْفَقْرِ

  اَللّٰهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ لاَ إِلهَ إِلاَّ أَنْتَ

  (அபூ தாவூத், ஹாகிம்)
- முஹம்மத் (ஸல்) அவர்கள் தொழுகையின் பின் கீழ்வரும் துஆக்களையும் ஓதியுள்ளார்கள்.

  اَللّٰهُمَّ أَعِنِّيْ عَلَى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ (ابو داود)

  اَللّٰهُمَّ إِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْجُبْنِ وَالْبُخْلِ، وَاَعُوْذُ بِكَ مِنَ اَنْ اُرَدَّ اِلَى

  اَرْذَلِ الْعُمُرِ وَاَعُوْذُ بِكَ مِنْ فِتْـنَةِ الدُّنْيَا وَاَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ
- நபியவர்கள் தொழுகைக்குப் பின்னர் ஆயத்துல் குர்ஸியை ஓதி வந்துள்ளார்கள்.
  - "ஒருவர் பர்ளான தொழுகைக்குப் பின் ஆயத்துல் குர்ஸியை ஓதினால் அடுத்த தொழுகை வரை அவர் அல்லாஹ்வின் பாதுகாப்பிலேயே இருப்பார்" (தபரானி).

> • நாமும் தொழுகையின் பின் ஓதும் அவ்ராதுகளை அதிகமாக ஓதுவதால் நன்மைகளை அதிகரித்துக் கொள்ளலாம்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- தொழுகையின் பின் ஓதவேண்டிய அவ்ராதுகளைப் பாடமிட்டு ஓதுவார்.
- இவ்வாறான அவ்ராதுகளை ஓதி வருவதால் அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதை ஏற்றுக் கொள்வார்.
- நபியவர்கள் ஓதிய அவ்ராதுகளை மற்றவர்களுக்கும் சொல்லிக் காட்டுவார்.
- குறிப்பிட்ட அவ்ராதுகளின் கருத்துக்களை அறிந்து கொள்ள முயற்சிப்பார்.

**இணைப்பு 2.2.3.1**

**தொழுகையைத் தொடர்ந்து ஓதவேண்டிய திக்ருகள்**

أَسْتَغْفِرُ اللهَ أَسْتَغْفِرُ اللهَ أَسْتَغْفِرُ اللهَ (நூல்: முஸ்லிம் 591, அபூதாவூத்: 513)

اَللّٰهُمَّ اَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّلَامُ تَبَارَكْتَ يَاذَا الْجَلَالِ وَالْإِكْرَامِ (நூல்: முஸ்லிம் 591)

لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

اَللّٰهُمَّ لَا مَانِعَ لِمَا اَعْطَيْتَ وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ الْجَدُّ

(நூல் புஹாரி 844, முஸ்லிம் 593)

لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَلَا نَعْبُدُ إِلَّا إِيَّاهُ لَهُ النِّعْمَةُ وَلَهُ الْفَضْلُ

وَلَهُ الثَّنَاءُ الْحَسَنُ لَا إِلٰهَ إِلَّا اللهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ

(நூல் முஸ்லிம் 594)

سُبْحَانَ اللهِ 33 اَلْحَمْدُ لِلّٰهِ 33 اللهُ اَكْبَرُ 33

اللهُ اَكْبَرُ ஐ 33 தடவை ஓதினால் பின்வரும் திக்ரை ஓத வேண்டும்

لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

(நூல்: முஸ்லிம் 597)

آيَةُ الْكُرْسِيِّ (நூல்: நஸாஈ 100, இப்னு சுன்னி 124)

اَللّٰهُمَّ اَعِنِّيْ عَلَى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ (நூல்: அபூ தாவூத் 1522)

اَللّٰهُمَّ إِنِّيْ اَعُوْذُ بِكَ مِنَ الْجُبْنِ وَالْبُخْلِ، وَاَعُوْذُ بِكَ مِنْ اَنْ اُرَدَّ

اِلَى اَرْذَلِ الْعُمُرِ وَاَعُوْذُ بِكَ مِنْ فِتْـنَةِ الدُّنْيَا وَاَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ

(நூல்: இப்னு சுன்னி 116)

اَللّٰهُمَّ إِغْفِرْلِيْ ذُنُوْبِيْ وَخَطَايَايَ كُلَّهَا ، اَللّٰهُمَّ انْعَشْنِيْ ، وَاجْبُرْنِيْ وَاهْدِنِيْ لِصَالِحِ

اَلاَعْمَالِ وَالأَخْلاَقِ إِنَّهُ لاَ يَهْدِيْ لِصَالِحِهَا وَلاَ يَصْرِفُ سَيِّئَهَا إِلاَّ اَنْتَ (நூல்: புஹாரி 2822)

قُلْ هُوَ اللهُ أَحَدٌ | قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ | قُلْ أَعُوْذُ بِرَبِّ النَّاسِ (நூல்: அபூதாவூத் 1523)

சுபஹ் ம.்ரிப் தொழுகையின் பின்

لاَ اِلٰهَ اِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ يُحْيِ وَيُمِيْتُ وَهُوَ عَلَى كُلِّ شَيْئٍ قَدِيْرٌ

(10 தடவைகள்) (நூல்: திர்மிதி 3474)

اَللّٰهُمَّ اَجِرْنِيْ مِنَ النَّارِ (7 தடவைகள்) (நூல்: அபூதாவூத்)

சுபஹ் தொழுகையின் பின்

اَللّٰهُمَّ إِنِّيْ اَسْأَلُكَ عِلْمًا نَافِعًا وَرِزْقًا طَيِّبًا وَعَمَلاً مُتَـقَبَّلاً (நூல்: இப்னு சுன்னி 110)

இணைப்பு 2.2.3.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

"தொழுகை முடிந்த பின்னர் ஓதுகின்ற அவ்ராதுகளை ஓதி வருவோம்"

- உங்களது குழுவுக்கு வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கப்பட்ட நூலின் பிரதியைப் பெற்று குறிக்கப்பட்ட தலைப்பினை அல்லது பக்கங்களை வாசித்து அதனூடாகத் தகவல்களைக் கண்டறிய முயற்சியுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 தொழுது முடிந்த பின் ஓதும் சில அவ்ராதுகளை அட்டவணைப்படுத்துங்கள். (துஆயே மஸ்னூன்)

குழு-2 நபி (ஸல்) அவர்கள் சுபஹ், மஃரிப் தொழுகைக்குப் பின் ஓதிய அவ்ராதுகளைப் பொருளுடன் எழுதுங்கள்.
(ஐங்காலத் தொழுகையின் பின் துஆ ஓதுவோம் - மௌலவி எஸ்.எல். நவ்பர் (கபூரி) 2003 என்ற நூல்)

குழு-3 தொழுகையைத் தொடர்ந்து ஓத வேண்டிய அவ்ராதுகளை ஓதுவதால் கிடைக்கும் பயன்களைப் பட்டியல் படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 2.0 | : | **வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.** |
| **தேர்ச்சி மட்டம் 2.3** | : | ஸகாத்தின் நடைமுறைகளை விளங்கி அதனை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குவார். |
| செயற்பாடு 2.3 | : | **'ஸகாத்தின் விதிமுறைகளை விளங்குவோம்.'** |
| நேரம் | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • இணைப்பு 2.3.1 இலுள்ள அட்டவணை<br>• இணைப்பு 2.3.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• இணைப்பு 2.3.3 இலுள்ள அட்டவணை<br>• இஸ்லாம் பாடநூல், தரம்-11, (பக்கம்-26, க.வெ. தி. 2005)<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 2.3.1 :

- இணைப்பு 2.3.1இல் உள்ள அட்டவணையைக் காட்சிப்படுத்துங்கள்.
- அது பற்றி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • ஸகாத் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாகும்.<br>• ஸகாத் என்ற சொல்லின் தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி என்ற கருத்துக்களுக்கும் ஸகாத் கடமைக்கும் தொடர்பு உண்டு.<br>• அல்குர்ஆனும் ஸுன்னாவும் ஸகாத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.<br>• ஸகாத்தின் விதிமுறைகளை இஸ்லாம் வகுத்துத் தந்துள்ளது.<br>• ஸகாதுல் பித்ர் என்ற ஒரு கடமையும் உண்டு. |

(15 நிமிடங்கள்)

படி 2.3.2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவனையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 2.3.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- ஸகாத் பெறத் தகுதியான எட்டுக் கூட்டத்தினரையும் அல்குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது. (9:60), (17:26), 2:177), (4:36), (76:8,9,10)
- பின்வருவோர் ஸக்காத் பெறத் தகுதியற்றோராவர்.
  1. பணக்காரர்கள்
  2. அடிமைகள்
  3. ஹாஷிம், முத்தலிப் குடும்பத்தினர்
  4. ஸகாத் கொடுப்பவரால் தாபரிக்கப்படுபவர்.
  5. முஸ்லிம் அல்லாதவர்.
- ஸகாத் பெறத் தகுதியான பிரிவினர்:
  1. பகீர்
  2. மிஸ்கீன்
  3. ஸகாத்தை வசூலிப்போர்
  4. இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டவர்கள்
  5. உரிமைச் சீட்டு வழங்கப்பட்ட அடிமைகள்
  6. கடன்பட்டோர்
  7. அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வோர்.
  8. வழிப்போக்கர்கள்
- குறிப்பிட்ட பொருட்களில் ஸகாத் கடமையாகும்.
  - "கனி தரும்காலம் வந்தால் அதன் கனிகளில் இருந்து சாப்பிடுங்கள். அவற்றை அறுவடை செய்யும் நாளில் இறைவனின் பாகத்தைக் கொடுத்து விடுங்கள்." (6:142)
  - "நபியே! தங்கத்தையும், வெள்ளியையும் சேர்த்து வைத்துக் கொண்டு இறைவழியில் அவற்றைச் செலவு செய்யாதவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்குக் கடினமான தண்டனை உண்டு என அறிவிப்பீராக" (9:34).
- 'ஸகாதுல் பித்ர்' ரமழானுடன் தொடர்புபட்ட வாஜிபான ஒரு கடமையாகும்.
- பருவ, பால் வேறுபாடின்றி ஒவ்வொரு முஸ்லிம் சார்பாகவும் இது நிறைவேற்றப்பட வேண்டும்.
- ரமழான் தலைப்பிறை முதல் இதனை நிறைவேற்றலாம். எனினும், ஷவ்வால் தலைப்பிறை தென்பட்டது முதல் பெருநாள் தொழுகைக்குச் செல்ல முன் இதனை நிறைவேற்றுவதே சிறப்பானதாகும்.

- பெருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதற்கு தேவையுடையோருக்கு வசதிகளைச் செய்து கொடுப்பது ஸகாதுல் பித்ரின் ஒரு நோக்கமாகும்.
- நோன்பாளியின் சிறு தவறுகளுக்கு இது பரிகாரமாகவும் அமைகின்றது.
- தானியமாகக் கொடுப்பவர்கள் பிரதான தானியங்களில் இருந்து தலா 2.176 கிலோ கிராம் வீதம் கொடுக்க வேண்டும்.

(25 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஸகாத் பெறத் தகுதியானோரையும் தகுதியற்றோரையும் இனங்கண்டு கூறுவார்.
- ஸகாத் கொடுக்க வேண்டிய பொருட்கள், அளவுகள் பற்றிய ஒரு அட்டவணை தயாரிப்பார்.
- ஸகாத் சமூகத்தின் வறுமை நிலையைப் போக்குகின்ற ஒரு வழிமுறை என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஸகாதுல் பித்ரின் முக்கியத்துவத்தை உணர்ந்து நிறைவேற்ற ஒத்துழைப்பார்.
- ஸகாத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குவார்.

**இணைப்பு 2.3.1**

அட்டவணை

கடமைகளை நிறைவேற்றுவதற்கான சில நிபந்தனைகள்

| தொழுகை | ஸகாத் | நோன்பு | ஹஜ் |
|---|---|---|---|
| பொது<br>• முஸ்லிம்<br>• ஆக்கில்<br>• பாலி∴ | • முஸ்லிம்<br>• ஆக்கில்<br>-- | • முஸ்லிம்<br>• ஆக்கில்<br>• பாலி∴ | • முஸ்லிம்<br>• ஆக்கில்<br>• பாலி∴ |
| சிறப்பு<br>• தினமும் ஐவேளை | • ஒவ்வொரு வருடமும் அறுவடையின்போது<br>• பொருள் சொந்தமாக இருத்தல்<br>• நிஸாபை அடைந்திருத்தல் | • றமழான் மாதம் (ஒவ்வொரு வருடமும்)<br>• சரீர சுகம் | • துல் ஹஜ் பிறை 8-13 (வாழ்வில் ஒரு முறை)<br>• சரீர சுகம்<br>• பொருள் வசதி<br>• பிரயாண வசதி |

இணைப்பு 2.3.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"ஸக்காத்தின் விதிமுறைகளை விளங்குவோம்"**

- உங்களது குழுவுக்கு வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கப்பட்ட நூலின் பிரதியைப் பெற்று குறிக்கப்பட்ட தலைப்பினை அல்லது பக்கங்களை வாசித்து அதனூடாகத் தகவல்களைக் கண்டறிய முயற்சியுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கைய்யை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புக்கள்**

1. ஸகாதுல் பித்ரை நிறைவேற்றுவதன் மூலம் வசதி குறைந்தோர் பெறக்கூடிய நன்மைகளைக் கலந்துரையாடித் தொகுத்து எழுதுங்கள்.
2. ஸகாத் பெறத் தகுதியான, தகுதியற்ற பிரிவினரை அட்டவணைப்படுத்துங்கள். (இஸ்லாம் தரம்-8 (2008), தரம்-11 (பதிப்பு 1999) பாடநூல்களில் ஸகாத் பற்றிய பாடத்தை வாசியுங்கள்.)
3. இலங்கையில் ஸகாத் கொடுக்க வேண்டிய பொருட்கள், காலம், விதியாகும் ஆரம்ப அளவு, கொடுக்க வேண்டிய அளவுகள் என்பவற்றைக் குறிப்பிட்டு ஓர் அட்டவணை தயாரியுங்கள். (இஸ்லாம் பாடநூல் தரம் 9-10, க.வெ.தி. 1984, 229ம் பக்கம்)
4. ஸகாதுக்கும் ஸகாதுல் பித்ருக்கும் இடையிலான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துங்கள்.

இணைப்பு 2.3.3

அட்டவணை

ஸகாத் விகிதத்தைக் காட்டும் அட்டவணை

| பொருட்கள் | நிஸாப் | வீதம் | காலம் |
|---|---|---|---|
| தங்கம் / | 85 கிராம் | 2.5% | ஒரு வருடம் பூத்தியான உடன் |
| பணம் | 85g தங்கத்தின் பெறுமதி | 2.5% | |
| வெள்ளி | 595 கிராம் | 2.5% | ,, ,, |
| வியாபாரப் பொருட்கள் | 85 கிராம் தங்கத்தின் பெறுமானம் | 2.5% | ,, ,, |
| ஆடு | 40 | 1 | ,, ,, |
| | 120 | 2 | ,, ,, |
| | 300 | 3 | ,, ,, |
| மாடு | 30 | 1 | ,, ,, |
| | 40 | 2 | ,, ,, |
| ஒட்டகை | 05 | 1 ஆடு | ,, ,, |
| பழங்கள், தானியங்கள் | 652.8kg | மானாவாரி 10%<br>நீர்பாசனம் 5% | அறுவடை செய்த உடன் |
| புதையல் / கனிப்பொருள் | வெள்ளி, தங்கத்தின் அளவு | 20% | கிடைத்த உடன் |

**தேர்ச்சி 2.0 : வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4 :** றமழானின் சிறப்பை அறிந்து நோன்பு நோற்று நற்காரியங்களிலும் ஈடுபடுவார்.

**செயற்பாடு 2.4 : 'றமழானின் சிறப்பை அறிந்து செயற்படுவோம்.'**

**நேரம் :** 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 2.4.1 இலுள்ள பாடல்
- இணைப்பு 2.4.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் - 3 பிரதிகள்
- இஸ்லாம் பாடநூல், தரம்-8 பதிப்பு 2005 (க.வெ.தி)
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 2.4.1 :**

- இணைப்பு 2.4.1இல் உள்ள பாடலை நன்கு பாடக்கூடிய ஒரு மாணவனைக் கொண்டு பாடச் செய்யுங்கள். அல்லது நீங்களே பாடிக் காட்டுங்கள்.
- றமழான் மாதம் பற்றி தாம் அறிந்துள்ளவற்றை வினவி கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

> - இஸ்லாத்தின் கடமைகளுள் ஒன்றான நோன்பு றமழான் மாதத்தில் நோற்கப்படுகின்றது.
> - றமழானின் சிறப்புக்களை அல்குர்ஆனும் ஸுன்னாவும் தெளிவுபடுத்துகின்றன.
> - அல்லாஹ் மற்ற மாதங்களுக்கு வழங்காத பல சிறப்பம்சங்களை றமழானுக்கு வழங்கியுள்ளான்.
> - றமழான் எமக்கு அளப்பரிய நன்மைகளை ஈட்டிக் கொள்ள வாய்ப்பளிக்கின்றது.

(15 நிமிடங்கள்)

**படி 2.4.2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவனையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 2.4.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- றமழான் மாதத்தில் நோன்பு நோற்பது கட்டாயக் கடமையாகும்.
- றமழான் மாதத்தில் அல்குர்ஆன் அருளப்பட்டதால் அதன் மகத்துவம் மேலும் உயர்கின்றது.
- அல்லாஹ் றமழான் மாதத்தை பின்வருமாறு சிறப்பித்துள்ளான்.
- நோன்பு நோற்குமாறு ஏவி மனிதனை தக்வாவுள்ளவனாக மாற்ற வழி ஏற்படுத்தி உள்ளான்.
  - 'விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கிறது. (அதனால்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்' (2:183)
- றமழான் ஆரம்ப இரவு முதற் கொண்டே நோன்பாளிகளை அல்லாஹ் ரஹ்மத்துடைய பார்வையால் நோக்குகிறான்.
- அம்மாதத்தில் சுவர்க்கத்தை ஒவ்வொரு நாளும் அழகுபடுத்துகின்றான்.
- ஷைத்தான்களை விலங்கிடுகிறான்.
- ஒவ்வோர் இரவிலும் நரக விடுதலையை வழங்குகிறான்.
- ஆயிரம் மாதங்களை விட சிறப்பான லைலதுல் கத்ர் என்ற இரவை ஏற்படுத்தியுள்ளான்.
  - கண்ணியமிக்க அந்த இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். (97:3)
- றமழானின் கடைசி இரவில் நோன்பாளிக்கு மன்னிப்பு வழங்குகிறான்.
- றமழானில் செய்யும் உம்ராவை ஹஜ்ஜுக்கு ஒப்பாக நிர்ணயித்துள்ளான்.
- றமழான் மாதத்தில்தான் நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி இறங்கியது.
- அம்மாதத்தில் அல்குர்ஆனை தனியாகவும் கூட்டாகவும் அதிகமாக ஓதி, விளங்கி வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.
  - அல்குர்ஆனை விளங்குமாறு, நல்லுணர்ச்சி பெறுமாறு பல வசனங்கள் கட்டளையிடுகின்றன. (54:17,22,32,40) (47:24)
  - றமழான் மாதத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் அல்குர்ஆனை ஓதிக் காட்டுவார்கள். (புஹாரி)

- பர்ளான காரியங்களுடன் ஸுன்னத்தான காரியங்களையும் அதிகமாகச் செய்து நன்மைகளை அதிகமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய பாசறையாக றமழான் அமைந்துள்ளது.
- இம்மாதம் உள்ளத்தையும் உறுப்புக்களையும் கட்டுப்படுத்தி பாவ காரியங்களிலிருந்து ஒதுங்கி வாழப் பயிற்றுவிக்கின்றது.
- றமழான் கண்ணியமான மாதம் என்பதால் அதில் பின்வரும் செயல்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
    - பொய், புறம், கோள் போன்றன.
    - வீண் விளையாட்டுக்கள்
    - மற்றவர்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவன (இரவில் விழித்திருந்து வீணாகக் காலங் கழித்தல், சப்தமிடல், விளையாடல், அரட்டையடித்தல்)

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- றமழானின் சிறப்புக்களைப் பட்டியல் படுத்துவார்.
- றமழானில் செய்ய வேண்டிய நற்செயல்களைப் பட்டியற்படுத்துவார்.
- றமழானில் புரியும் நற்காரியங்களுக்கு அல்லாஹ்விடத்தில் அதிக கூலி கிடைக்கும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- றமழானில் தவிர்ந்து கொள்ள வேண்டிய செயல்களைப் பட்டியற்படுத்துவார்.
- றமழானில் செய்த நற்செயல்களை ஏனைய காலங்களில் தொடர்வதோடு ஏனையோருக்கும் செய்யும்படி தூண்டுவார்.

**இணைப்பு 2.4.1.1**

**“றமழானே வருக”**

றமழான் மாதம் வரும்போது
    வீட்டை சுத்தம் செய்திடுவோம்
உடலும் உளமும் தூய்மை பெற
    உவப்பாய் பணிகள் செய்திடுவோம்.
இரவில் விழித்து தொழுதோதி
    இறைவன் திருப்தி பெற்றிடவே
பகலில் நோன்பு நோற்பதுடன்
    ஸதகா செய்து மகிழ்வுறுவோம்.
இறையோன் அருளும் மன்னிப்பும்
    ‘இத்கும்’ பெறவே கையேந்த
சிறியோர் பெரியோர் அனைவருமே
    சிறப்புடன் அதனை வரவேற்போம்.

(எம்.எச்.எம். நாளிர்)

இணைப்பு 2.4.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"றமழானின் சிறப்பை அறிந்து செயற்படுவோம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- குறிக்கப்பட்ட நூலின் பிரதியைப் பெற்று அதனூடாக தகவல்களைக் கண்டறிய முயற்சியுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 றமழானில் செய்ய வேண்டிய நற்காரியங்களையும் தவிர்ந்து கொள்ளக் கூடிய விடயங்களையும் கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-2 நோன்பு நோற்பதன் மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-3 றமழான் மாதத்தின் சிறப்புக்களை எழுதுங்கள்.

தேர்ச்சி 2.0 : **வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.**

தேர்ச்சி மட்டம் 2.5 : ஹஜ்ஜின் முக்கியத்துவத்தை விளங்கி அதனை நிறைவேற்றுவோருக்கு உதவுவார்.

செயற்பாடு 2.5 : **'ஹஜ்ஜின் முக்கியத்துவத்தை விளங்குவோம்.'**

நேரம் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடுகள் :

- இணைப்பு 2.5.1 இலுள்ள 'ஹஜ்ஜை முடித்து அருளைச் சுமந்த ஹாஜிகளே வருக' என்ற பாடல்.
- இணைப்பு 2.5.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- ரியாழுஸ் ஸாலிஹீன்
- தர்ஜமதுல் குர்ஆன் (அப்துல் ஹமீத் பாகவி)
- ஹஜ் அல்லது உம்ரா கடமையை நிறைவேற்றிய ஒருவர்.
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 2.5.1 :

- இணைப்பு 2.5.1இல் உள்ள பாடலை நன்கு பாடக்கூடிய ஒரு மாணவனைக் கொண்டு பாடச் செய்யுங்கள். அல்லது ஒலிப்பதியி மூலம் ஒலிக்கச் செய்யுங்கள்.
- ஹஜ்ஜைப் பற்றி தாம் அறிந்துள்ளவற்றை மாணவரிடம் வினவி கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • இஸ்லாத்தின் இறுதிக் கடமை ஹஜ். பண வசதியும் உடல் வலுவும் உள்ளவர்கள் மக்கா சென்று இதனை நிறைவேற்றுவது கடமை. |
| • ஹஜ்ஜின் முக்கியத்துவத்தை அல்குர்ஆனும் ஸுன்னாவும் வலியுறுத்துகின்றன. |
| • ஹஜ்ஜின் மூலம் அளப்பரிய நன்மைகளைப் பெற முடிகிறது. |
| • மக்கா சென்று நிறைவேற்றப்படும் மற்றொரு கிரியை உம்ரா எனப்படுகிறது. |

(15 நிமிடங்கள்)

படி 2.5.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 2.5.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- போதிய பண வசதியும் உடல் வலுவும் உள்ள முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் வாழ்நாளில் ஒருமுறை ஹஜ்ஜை நிறைவேற்றுவது கடமையாகும்.

  "நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கி யுள்ளான். எனவே நீங்கள் ஹஜ் செய்யுங்கள்" (முஸ்லிம்).
- எவர்கள் அங்கு யாத்திரை செல்ல சக்தி பெறுகிறார்களோ அவர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அவ்வீட்டை - க.'.பதுல்லாஹ்) ஹஜ் செய்வது கடமையாகும் (3:97).
- முதியோர், பலவீனமானோர், பெண்கள் ஆகியோர் புரியும் ஜிஹாத் ஹஜ்ஜாகும் (நஸாஈ).
- "உங்களில் ஹஜ்ஜை நாடுபவர் அதனை அவசரமாக செய்துவிடவும். ஏனெனில், அவர் நோய்வாய்ப்பட்டு விடலாம்; பயணத்துக்கான வாகனத்தை இழந்து விடலாம்; வேறு தேவைகள் ஏற்பட்டுவிடலாம்" (அஹ்மத்)
- "பாவம், வறுமை என்பவற்றை ஹஜ்ஜும் உம்ராவும் அகற்றி விடுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவனம் தவிர வேறு கூலி இல்லை' (நஸாஈ).
- "ஹஜ் செய்பவர்களும் உம்ராச் செய்பவர்களும் அல்லாஹ்வின் விருந்தாளிகளாவர். அவர்கள் துஆக் கேட் பார்களாயின் அதனை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். அவர்கள் பாவமன்னிப்புக் கோருவார்களாயின் அவர்களின் பாவங்களை மன்னித்து விடுவான்" (இப்னு மாஜா).
- ஹஜ் நிறைவேற்றப்படும் தலங்களெல்லாம் நபிமார்கள் வாழ்ந்த, வந்து சென்ற புனிதமான தலங்களாகும். ஹஜ்ஜாஜிகள் இவ்விடங்களுக்குச் செல்லும்போது அந்நபிமார்களின் நினைவு ஏற்பட்டு அவர்களின் வழி முறையைப் பின்பற்ற வேண்டுமென்ற எண்ணம் உண்டாகும்.
- ஹஜ் ஒரு மனிதனின் வாழ்வைத் தூய்மையானதாக மாற்றுகிறது.
- இப்றாஹிம் நபியவர்களின் தியாக வரலாற்றை ஹஜ் கிரியைகள் ஞாபகப்படுத்துகின்றன.
- ஹஜ்ஜின் மூலம் தியாகம், கட்டுப்பாடு, சர்வதேச சகோதரத்துவம் சமாதானம் என்பவை வெளிப்படுகின்றன.
- சர்வதேச முஸ்லிம்களை ஒன்றிணைப்பதோடு சர்வதேச முஸ்லிம்கள் தொடர்பாகக் கலந்துரையாடவும் அரசியல், சமூக, பொருளாதார விடயங்கள் தொடர்பாக கருத்துப் பரிமாறவும் சந்தர்ப்பமளிக்கிறது. இஸ்லாமிய வரலாற்றுடன்

தொடர்புடைய பல இடங்களைத் தரிசிக்கவும், அதற்கூடாக படிப்பினைகளை, உணர்வுபூர்வமாக விளங்கிக் கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது.

- ஹஜ்ஜைப் போன்று மக்காவில் மட்டுமே நிறைவேற்றக் கூடிய ஒரு கடமை உம்ராவாகும். இதனை ஹஜ்ஜுடன் சேர்த்தோ தனித்தோ நிறைவேற்றலாம்.
- "ஒருவர் இருமுறை உம்ரா செய்தால் அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட குற்றங்களுக்கு இரண்டு உம்ராக்களும் குற்றப் பரிகாரமாகும். எவ்வித குற்றமும் புரியாமல் நிறைவேற்றிய ஹஜ்ஜுக்கு சுவர்க்கமேயன்றி வேறு பிரதிபலன்கள் இல்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (புஹாரி, முஸ்லிம்).
- உம்ராவை எல்லாக் காலங்களிலும் நிறைவேற்றலாம்.
- அறபாவில் தரித்தலைத் தவிர்ந்த ஏனைய ஹஜ்ஜின் அர்கான்கள் அனைத்தும் உம்ராவிற்கும் உரியனவாகும்.
- உம்ராவிற்கு ஷர்த்துகளும் பர்ளுகளும் உள்ளன.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ஹஜ், உம்ரா என்பவற்றுகிடையிலான வேறுபாட்டைப் பிரித்துக் காட்டுவார்.
- ஹஜ்ஜின் பயன்களைத் தொகுத்துக் கூறுவார்.
- தனக்கு வசதி வாய்ப்பு ஏற்பட்டால் தானும் ஹஜ் செய்ய வேண்டுமென்ற உணர்வைப் பெறுவார்.
- ஹாஜிகளை சந்தித்து வாழ்த்துக் கூறுவார்.

**இணைப்பு 2.5.1**

பாடல்

அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!
லா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்
அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்த்

ஹஜ்ஜை முடித்து அருளைச் சுமந்த ஹாஜிகளே வருக!
இன்று பிறந்த குழந்தைப் போன்ற இனியவரே வருக!
தீனின் இதயங்களே வருக!

(ஹஜ்ஜை)

ஒளிமயமான இறைவன் வீட்டைப் பார்த்தன உங்கள் கண்கள்
ஒப்பிணை இல்லா உதவியை நாடி உயர விரிந்தன கைகள்
நபிபெருமானார் நடந்த பாதை நடந்தன உங்கள் கால்கள்
நடுங்கிய நிலையில் அறபா திடலில் குலுங்கியே நின்றன தோள்கள்

(ஹஜ்ஜை)

மறுமையைச் சொல்லும் பள்ளிக்குச் சென்று
மோட்சப் பாடங்கள் படித்தீர்கள்.
மார்க்கம் சொன்ன கடமையைச் செய்து
மாண்பின் இடத்தைப் பிடித்தீர்கள்

(ஹஜ்ஜை)

**இணைப்பு 2.5.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"ஹஜ்ஜின் முக்கியத்துவத்தை விளங்குவோம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- குழுவிற்கு வழங்கப்பட்ட நூலின் பிரதியைப் பெற்று குறிக்கப்பட்ட பாடத்தை வாசித்து அதனூடாகத் தகவல்களைக் கண்டறிய முயற்சியுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்ப்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 ஹஜ்ஜின் மூலம் கிடைக்கும் பயன்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.
(ஹஜ்ஜின் வழிகாட்டி, மௌலவி அல்ஹாஜ் K.A. நிஜாமுத்தீன் மன்பயீ, என்ற நூல் (பதிப்பு 1996); ரியாழுஸ் ஸாலிஹீன்.)

குழு-2 ஹஜ்ஜின் சிறப்பைப் பற்றிக் கூறும் 2 குர்ஆன் ஆயத்துக்களையும் 3 ஹதீஸ்களையும் தேடி எழுதுங்கள்.

(தர்ஜமதுல் குர்ஆன், ரியாழுஸ் ஸாலிஹீன்)

குழு-3 அண்மையில் ஹஜ்ஜை அல்லது உம்ராவை நிறைவேற்றி வந்த ஒருவரைச் சந்தித்து அவர் ஹஜ் அல்லது உம்ரா செய்த முறையினைக் கேட்டறிந்து எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 2.0 | : | **வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.** |
| தேர்ச்சி மட்டம் | 2.6 | : | குர்பானின் பயன்களை விளங்கி அதனை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குவார். |
| செயற்பாடு | 2.6 | : | **'குர்பானின் பயன்களை விளங்குவோம்** |
| நேரம் | | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | | : | • இணைப்பு 2.6.1 இலுள்ள குர்ஆன் வசனத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.<br>• இணைப்பு 2.6.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 2.6.1 :

- இணைப்பு 2.6.1இல் உள்ள அல்குர்ஆன் வசனத்தின் பொருளை வாசித்துக் காட்டுங்கள்.
- அவ்வசனம் சொல்கின்ற கருத்து பற்றி வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - அல்குர்ஆனும் ஸுன்னாவும் தான தர்மங்களை வலியுறுத்துகின்றன.
> - உழ்ஹிய்யா, அகீகா போன்ற இபாதத்துகள் ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய கால்நடைகள் மூலமே நிறைவேற்றப்படுகின்றன.
> - கால்நடைகளை குர்பானி செய்யும்போது கவனிக்க வேண்டிய விதிமுறைகள் காணப்படுகின்றன.

(15 நிமிடங்கள்)

படி 2.6.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவனையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(35 நிமிடங்கள்)

படி 2.6.3 :

- ஒவ்வொரு குழுவுக்கும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- செல்வம் கொடுக்கப்பட்டோர் அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று கூறும் இஸ்லாம் அதன் மூலம் கொடுப்பவர் நற்கூலியையும் பெறுபவர் நற்பயனையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பேற்படுத்துகின்றது.
- உழ்ஹிய்யா, அகீகா என்பன தர்மத்தில் உள்ளடங்குகின்றன.
- உழ்ஹிய்யா நபி இப்றாஹீம் (அலை) அவர்களது தியாக வாழ்க்கையை நினைவுபடுத்தும் ஓர் இபாதத்தாக அமைகிறது.
- உழ்ஹிய்யா, அகீகா ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படும் பிராணிகளின் குறைந்தபட்ச வயதெல்லை குறிக்கப்பட்டுள்ளது. அவை ஆரோக்கியமானவையாகவும் தசைப்பிடிப்பானவையாக வும் குறைபாடற்றவையாகவும் இருப்பது முக்கியமானதாகும்.
- உழ்ஹிய்யா, அகீகா நிறைவேற்றுவதாக நேர்ச்சை வைத்தால் நிறைவேற்றுவது கடமையாகும். நேர்ச்சை வைத்தவரும் அவரது பராமரிப்பில் உள்ளவர்களும் அதிலிருந்து எதையும் உண்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
- ஹஜ்ஜுப் பெருநாள் அன்று முதல் துல்ஹஜ் பிறை 13 வரையிலான காலப்பகுதி உழ்ஹிய்யாவுக்கான காலமாகும்.
- உழ்ஹிய்யாவின் எப்பாகத்தையும் விற்கவோ, கூலியாகக் கொடுக்கவோ கூடாது.
- "அதன் (குர்பானியின்) மாமிசமோ அல்லது அதன் இரத்தமோ அல்லாஹ்வை அடைந்து விடுவதில்லை. உங்களுடைய பயபக்திதான் அவனை அடையும்" (22:37).
- "உம் இறைவனை நீர் தொழுது குர்பானியும் கொடுப்பீராக" (108:2).
- "(வர்த்தகத்தின் மூலம்) தங்கள் பிரயோசனத்தை நாடியும் வருவார்கள். அல்லாஹ் அவர்களுக்குக் கொடுத்த ஆடு, மாடு, ஒட்டகம் முதலியவைகளை அவனது திருநாமத்தைக் கூறி குறிப்பிட்ட நாட்களில் அறுப்பதற்காகவும் அ(ங்கு வருவார்கள். ஆகவே அவ்வாறு அறுக்கப்பட்ட)வைகளிலிருந்து நீங்களும் புசியுங்கள். ஏழைகள், தரித்திரர்கள் முதலியவர்களுக்கும் கொடுங்கள்" (22:28)

**அகீகா**

- ஆண் பிள்ளைக்கு இரு ஆடுகளும் பெண் பிள்ளைக்கு ஓர் ஆடும் அகீகாவாகக் கொடுப்பது தந்தை மீது ஸுன்னத்தாகும்.
- 'சிறுவன் அவனின் அகீகாவைக் கொண்டு பணயம் வைக்கப்பட்டுள்ளான். பிறந்து ஏழாம் நாளில் அவனுக்காக அது அறுக்கப்படும். அவனுக்குப் பெயரும் வைக்கப்படும். அவனது தலைமுடியும் சிரைக்கப்படும்'' (ஜாமிஉத் திர்மிதி).
- உழ்ஹிய்யா, அகீகா என்பன தப்ஹ் செய்து வழங்கப்படுகின்றன.

**தப்ஹ்**

- 'தப்ஹ்' என்றால் 'அறுத்தல்' எனப் பொருள்படும். மீன், வெட்டுக் கிளி தவிர்ந்த உண்பதற்கு ஹலாலான ஏனைய பிராணிகளை தப்ஹின் பின்னரே உணவாகப் பயன்படுத்த வேண்டும்.

- அறுக்கும்போது கவனிக்க வேண்டிய பல முக்கிய அம்சங்களும் பின்பற்றக் கூடிய உயர்ந்த பண்புகளும் உள்ளன.
  - அல்லாஹ்வின் பெயரைக் கூற வேண்டும்.
  - கத்தி கூர்மையானதாக இருக்க வேண்டும்.
  - அறுக்கும் முன் பிராணிக்கு நீர் புகட்ட வேண்டும்.
  - அறுக்கும் இடத்திற்கு மெதுவாகக் கொண்டு செல்ல வேண்டும்.
- அறுக்க முடியாத வேட்டைப் பிராணிகளுக்கு பிரத்தியேகமான சட்டவிதிகள் உள்ளன.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- உழ்ஹிய்யா, அகீகா என்பவற்றின் முக்கியவத்துவத்தை விளக்குவார்.
- உழ்ஹிய்யா, அகீகா என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்திக் காட்டுவார்.
- உழ்ஹிய்யா, அகீகா என்பன நிறைவேற்றப்படும்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைக் கடைப்பிடிப்பார்.
- உழ்ஹிய்யா, அகீகா ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்வினைப் பெறுவார்.
- உழ்ஹிய்யா, அகீகாக்களை நிறைவேற்றும்போது ஒத்துழைப்பு வழங்குவார்.

**இணைப்பு 2.6.1**

"எனவே (இஸ்மாஈல்) அவருடன் சேர்ந்து உழைக்கக் கூடிய பருவத்தை அடைந்தபோது அவர் (தன் மகனிடம்) 'என்னருமை மகனே! நிச்சயமாக நான் உன்னை 'தப்ஹ்' செய்வதாக கனவில் கண்டேன். (இதைப் பற்றி) நீ என்ன அபிப்பிராயப்படுகிறாய்' என்று கேட்டார். அதற்கவர் 'என் தந்தையே! நீங்கள் ஏவப்பட்ட படியே செய்யுங்கள். அல்லாஹ் நாடினால் என்னை நீங்கள் பொறுமையாளர்களில் உள்ளவனாகக் காண்பீர்கள்' என்று கூறினார்" (37:102).

**இணைப்பு 2.6.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**
**"குர்பானியின் பயன்களை அறிவோம்".**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்பட்ட நூலின் பரதியைப் பெற்று குறிக்கப்பட்ட தலைப்பினை / பக்கங்களை வாசித்து அதனூடாகத் தகவல்களைக் கண்டறிய முயற்சியுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 உழ்ஹிய்யாவின் முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொண்டு அதனை சமூகத்துக்கு பயனுள்ள முறையில் எவ்வாறு விநியோகிக்கலாம் என்பதை கலந்தாலோசித்து எழுதுங்கள்.

குழு-2 அகீகாவின் முக்கியத்துவத்தையும் அதன் நடைமுறைகளையும் தற்கால நடைமுறையோடு ஒப்பிட்டு கலந்துரையாடி கருத்துக்களை முன்வையுங்கள்.

குழு-3 ஒரு பிராணியை 'தப்ஹ்' செய்யும்போது பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களைப் பட்டியல்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 2.0 | : | **வாழ்வே இபாதத் என்ற கண்ணோட்டத்தைப் புரிந்து செயல்படுவதோடு அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றுவார்.** |
| தேர்ச்சி மட்டம் | 2.7 | : | நத்ர், கப்பாரா பற்றிய விளக்கங்களை அறிந்து நடைமுறைப்படுத்துவார். |
| செயற்பாடு | 2.7 | : | **'நத்ர், கப்பாரா பற்றி விளங்கிக் கொள்வோம்'.** |
| நேரம் | | : | 80 நிமிடங்கள் |
| தரவிருத்தி உள்ளீடுகள் | | : | • இணைப்பு 2.7.1 இலுள்ள உரையாடல் பகுதி.<br>• இணைப்பு 2.7.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் மூன்று பிரதிகள்.<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 2.7.1 :

- மூன்று மாணவர்களை அழைத்து இணைப்பு 2.7.1இல் போன்று உரையாடுமாறு கூறுங்கள்.
- நத்ர் தொடர்பாக மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - 'நத்ர்' என்ற சொல் 'நேர்ச்சை' என்ற கருத்தை உடையது.
> - 'நத்ரை' நிறைவேற்றுவது கடமையாயினும் நிறைவேற்றக் கூடாத நத்ர்களும் இருக்கின்றன.
> - 'கப்பாரா' என்பது குற்றப் பரிகாரத்தைக் குறிக்கும்.
> - கப்பாராவை நிறைவேற்றுவது கடமையாகும்.
> - ஒருவர் உறுதியாகச் செய்த சத்தியத்தை பின்னர் முறிப்பாராயின் அதற்காக அவர் கப்பாரா வழங்க வேண்டும்.

(15 நிமிடங்கள்)

படி 2.7.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- இணைப்பு 2.7.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து அதை உறுதி செய்யுங்கள்

(30 நிமிடங்கள்)

படி 2.7.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- ஒரு முஸ்லிம் தனக்குத் தானே கடமையாக்கிக் கொண்ட செயற்பாடு 'நத்ர்' அதாவது 'நேர்ச்சை' எனப்படுகிறது.
- 'தான் விரும்பும் காரியம் நிறைவேறினால் அல்லாஹ்வுக்காக இதைச் செய்வேன்' என நேர்ச்சை வைத்த ஒருவர், குறித்த காரியம் நிறைவேறியதும் நேர்ச்சையை நிறைவேற்றுவது கடமையாகும்.
- நேர்ச்சை இஸ்லாத்திற்கு முந்திய காலங்களிலும் நடைமுறையில் இருந்துள்ளது.
  - "இம்ரானுடைய மனைவி (கர்ப்பமான பொழுது ஆண் குழந்தை பெற விரும்பி, இறைவனை நோக்கி) 'என் இறைவனே! நிச்சயமாக நான் என் கர்ப்பத்திலுள்ளதை உனக்கு முற்றிலும் அர்ப்பணஞ் செய்து விட நேர்ச்சை செய்து கொண்டேன்' ஆதலால் நீ என்னிடமிருந்து அங்கீகரித்துக் கொள்வாயாக" (3:35)
  - "நீ எம்மனிதரைக் கண்ட போதிலும் 'நிச்சயமாக நான் ரஹ்மானுக்கு நோன்பு நோற்கிறேன். ஆகவே இன்றைய தினம் எம்மனிதருடனும் பேச மாட்டேன்' என்று கூறிவிடு. (என்றும் கூறினார்)" (19:26).
- ஜாஹிலிய்யாக் கால அரபிகளின் நடைமுறையில் இருந்த நேர்ச்சை பற்றியும் அல்லாஹ் குறிப்பிடுகின்றான். (6:136)
- அல்லாஹ்வுக்காக என்று வைக்கப்படும் நேர்ச்சையை அல்லாஹ் அங்கீகரிக்கின்றான்.
- நேர்ச்சையை முறைப்படி நிறைவேற்றுவது நல்லோர்களின் பண்பென்று அல்குர்ஆன் கூறுகிறது. (76:07)
- எவ்வாறான நேர்ச்சைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது பற்றி நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.
  - "அல்லாஹ்வுக்கு மாறு செய்யாத விதத்தில் யார் நேர்ச்சை வைக்கிறாரோ அவர் அதை நிறைவேற்றட்டும். யார் அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் விதத்தில் நேர்ச்சை வைக்கின்றாரோ அவர் அதை நிறைவேற்றாதிருக்கட்டும்" (புஹாரி, முஸ்லிம்).
- இஸ்லாம் அனுமதித்த செயல்களை மட்டுமே நேர்ச்சையாக வைக்கலாம்.
- நேர்ச்சை வைத்த காரியம் நிறைவேறினால் அந்நேர்ச்சையை நிறைவேற்றுவது கடமையாகும்.
- நேர்ச்சை வைப்பதாக வாயால் கூறினால் மட்டுமே அதனை நிறைவேற்றுவது கடமையாகும்.
- நேர்ச்சை வைத்தவர் அதனை நிறைவேற்றமுன் மரணித்தால், அவரது உறவினர்களே அதனை நிறைவேற்ற வேண்டும்.
- நேர்ச்சையை முறித்தால் அதற்கான குற்றப் பரிகாரமாக கப்பாராக கொடுக்க வேண்டும். (5:89)
- குற்றங்களுக்கேற்ப கப்பாரா வேறுபடும்.

(35 நிமிடங்கள்)

### கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- நத்ரை நிறைவேற்றுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து எழுதுவார்.
- நத்ரின் வகைகளை இனங்கண்டு உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுவார்.
- கப்பாரா விதியாகும் செயல்களில் இருந்து தவிர்ந்து நடப்பார்.
- கப்பாராக்களை நிறைவேற்றுவது கடமை என்பதை உணர்ந்து செயற்படுவார்.
- கப்பாரா, நத்ர் தொடர்பான தெளிவான விளக்கத்தை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்வார்.

**இணைப்பு 2.7.1**

உரையாடல்

நஸ்ரினும் பஸ்ரினும் ஷஹீமாவும் உயிர்த் தோழிகளாவர். ஷஹீமா அண்மையிலேயே அந்தப் பாடசாலையில் சேர்ந்தாள். அன்று பாடசாலை இடைவேளையின்போது, சாப்பிடச் செல்வதற்காக எழுந்த நஸ்ரினும் பஸ்ரினும் ஷஹீமாவையும் அழைத்தார்கள். அதற்கு அவள், தான் நோன்பு வைத்துள்ளதாகக் கூறி மறுத்து விட்டாள். அப்போது பின்வரும் உரையாடல் இடம்பெற்றது.

நஸ்ரீன் : இது ரமழான் மாதம் அல்லவே! அப்படியிருக்க ஏன் நோன்பு பிடித்துள்ளீர்கள்?

ஷஹீமா : ஏன் ரமழான் மாதத்தில் மட்டுமா நோன்பு நோற்க வேண்டும்? ஸுன்னத்தான நோன்புகளும் நாமே கடமையாக்கிக் கொண்ட நத்ர் போன்ற நோன்புகளும் உள்ளனவே!

பஸ்ரீன் : நத்ர்?! அப்படியென்றால் என்ன ஷஹீமா?

ஷஹீமா : 'நத்ர்' என்றால் நேர்ச்சை என்பது பொருள். அப்படியான ஒரு நேர்ச்சை நோன்பைத்தான் நான் நோற்றுள்ளேன்.

நஸ்ரின் : எதற்காக நேர்ச்சை நோன்பு வைத்துள்ளீர்கள்?

ஷஹீமா : சென்ற மாதம் எனது உம்மா கடுமையாக சுகவீனமுற்றிருந்தார் அல்லவா. அவருக்கு சுகம் கிடைத்தால் நோன்பு நோற்பதாக நேர்ச்சை வைத்தேன். உம்மாவுக்கு இப்ப பூரண சுகம் வந்துவிட்டது. அந்த நேர்ச்சையை நிறைவேற்றவே இன்று நோன்பு நோற்றேன்.

பஸ்ரீன் : நோய் குணமானால் நேர்ச்சையை நிறைவேற்றத்தான் வேண்டுமா?

ஷஹீமா : ஆம். கட்டாயம் நிறைவேற்ற வேண்டும்.

நஸ்ரின் : அதனைப் பற்றி சற்று விளக்கமாகக் கூறுங்களேன்.

ஷஹீமா : ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்காக தன்மீது ஒரு வணக்கத்தை கடமையாக்கிக் கொள்வதையே நேர்ச்சை என்பர். அனுமதிக்கப்பட்ட விடயங்களில் மட்டுமே நேர்ச்சை வைக்கலாம். அனுமதிக்கப்படாதவற்றைக் குறித்து நேர்ச்சை வைப்பது தடுக்கப்பட்டுள்ளது. நாம் எதிர்பார்த்த காரியம் நிறைவேறினால் கட்டாயம் நேர்ச்சையை நிறைவேற்ற வேண்டும். இல்லாவிட்டால் கப்பாரா கொடுக்க வேண்டியேற்படும்.

நஸ்ரின், பஸ்ரீன் : நாம் அறியாத ஒரு விடயத்தை உம்மிடமிருந்து கற்றுக்கொண்டோம். ஜஸாகல்லாஹு கைரா.

இணைப்பு 2.7.2

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

"நத்ர், கப்பாரா பற்றி அறிந்து கொள்வோம்."

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புகள்**

1. 'கப்பாரா' என்பதன் மூலம் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது? உதாரணம் தந்து விளக்குக.
2. இஸ்லாத்துக்கு முன்பும் நேர்ச்சை வைக்கும் பழக்கம் இருந்துள்ளது என்பதற்கு அல்குர்ஆனில் இருந்து இரு ஆதாரங்ளைத் தேடி விளக்கி எழுதுங்கள். (பார்க்க அல்குர்ஆன் (3:35), (19:26), (06:36)
3. "ஆகுமான விடயங்களில் நேர்ச்சை வைத்தல்" என்பதற்கு ஐந்து உதாரணங்களைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்துங்கள்.

| நேர்ச்சை வைப்பதற்கான காரணம் | நேர்ச்சை |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

**தேர்ச்சி 3.0** : **நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1** : வாழ்வில் இடம்பெறும் பாவங்களை இனங்கண்டு அவற்றிலிருந்து தவிர்ந்து வாழ்வார்.

**செயற்பாடு 3.1.1** : **'பாவங்களிலிருந்து தவிர்ந்து நடப்போம்'**

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 3.1.1.1 இலுள்ள வரிப்படம்
- இணைப்பு 3.1.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- நூல்: பெரும் பாவங்கள் (இமாம் தகபி)
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.1.1.1** :

- இணைப்பு 3.1.1.1இல் உள்ள வரிப்படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- அது பற்றி கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

> - இஸ்லாம் பாவங்களிலிருந்து தவிர்ந்து நடக்குமாறு மனிதனுக்கு கட்டளையிடுகின்றது.
> - பாவங்கள் வஹியினூடாகவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.
> - பாவம் என்பது உமது உள்ளத்தை உறுத்தக் கூடிய செயலாகும். (முஸ்லிம்)
> - பாவங்கள் மனிதனது இம்மை, மறுமை வாழ்வில் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

(15 நிமிடங்கள்)

**படி 3.1.1.2** :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(35 நிமிடங்கள்)

**படி 3.1.1.3** :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- அல்லாஹ்வும் ரஸூலும், செய்யத் தகாதவை எனத் தடுத்தவை பாவங்களாகும்.
- "அழிவை உண்டாக்கக் கூடிய ஏழு பெரும் பாவங்களை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்" என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியபோது, "இறைத் தூதர் அவர்களே, அவை யாவை?" என நபித்தோழர்கள் வினவினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு பதில் கூறினார்கள்.

  1. இறைவனுக்கு இணைவைத்தல்
  2. சூனியம் செய்தல்
  3. அல்லாஹ் எந்த உயிரைக் கொலை செய்வதைத் தடுக்கின்றானோ அந்த உயிரை நியாயமின்றிக் கொலை செய்தல்.
  4. வட்டியை உண்ணுதல்
  5. அநாதைகளின் சொத்துக்களை விழுங்குதல்
  6. ஜிஹாதின்போது களத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடுதல்.
  7. இறை நம்பிக்கையுள்ள ஒழுக்கமான பெண்கள் மீது அவதூறு கூறுதல் (புஹாரி, முஸ்லிம்)


- இவையல்லாத சில பாவங்களையும் குர்ஆனும் ஸுன்னாவும் அடையாளப்படுத்தியுள்ளன. அவற்றுள் சில:
  - தற்பெருமை
  - ஏமாற்றுதல்
  - திட்டுதல்
  - பொய்யுரைத்தல்
  - சண்டையிடல்
  - பட்டப் பெயர் சூட்டுதல்
- பாவங்கள் மனிதனின் பௌதீக வாழ்வைப் பாதிப்பது போலவே ஆன்மீக வாழ்வையும் பாதிக்கும்.
- ஒருவர் தொடர்ந்து பாவம் செய்யும்போது அவரது உள்ளம் இருளடையும்.
- பாவங்கள் செய்வது நரகத் தண்டனைகள் கிடைக்கக் காரணமாக அமையும்.
- பாவங்கள் ஊடாக மனித உறவுகள் சீர்கெடும். ஆரோக்கியம் பாதிக்கப்படும். சமூகக் கட்டமைப்பு சீர்கெடும்.
- இறையச்சம், சுயகட்டுப்பாடு, குடும்பப் பின்னணி, நல்ல தொடர்புகள், நல்ல சூழல் போன்றன பாவங்களிலிருந்து விடுபட்டு நடக்க உதவும்.
- நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். இதனை அல்லாத(குற்றத்)தை, (அதுவும்) தான் விரும்பியவர்களுக்கே மன்னிப்பான். (4:116)

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- பாவங்களின் வகைகளை இனங்காண்பார்.
- பாவங்களிலிருந்து தவிர்ந்து வாழ்வது தமக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்கும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பெரும் பாவங்கள் மூலம் ஏற்படும் பாதிப்புக்களை இனங்கண்டு அவற்றிலிருந்து விலகி நடப்பார்.
- பாவங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் சமூகத்துடன் ஒத்துழைப்பார்.

**இணைப்பு 3.1.1.1**




குறிப்பு: ஹதீஸ்களூடாக வேறு பல கொடிய பாவங்கள் பற்றியும் அறிய முடிகின்றது.

இணைப்பு 3.1.1.2

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

"பாவங்களிலிருந்து தவிர்ந்து நடப்போம்"

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்பட்ட நூலின் பிரதியைப் பெற்று குறிக்கப்பட்ட தலைப்பினை / பக்கங்களை வாசித்து அதனூடாகத் தகவல்களைக் கண்டறிய முயற்சியுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்ப்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 பாவங்களிலிருந்து விடுபடுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு-2 பெரும் பாவங்கள் மூலம் ஏற்படும் உடலியல், சமூகவியல் பாதிப்புக்களை அட்டவணைப்படுத்துங்கள்.

| பெரும் பாவங்கள் | ஏற்படும் பாதிப்புகள் | |
|---|---|---|
| | உடலியல் பாதிப்புகள் | சமூகவியல் பாதிப்புகள் |
| | | |

குழு-3 பாடசாலை வாழ்விலும் சமூக வாழ்விலும் பாவங்களைத் தவிர்ந்து நடப்பதற்காக வழிமுறைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

| பாவங்கள் | தவிர்ந்து நடப்பதற்கான வழிமுறைகள் | |
|---|---|---|
| | பாடசாலையில் | சமூகத்தில் |
| | | |

குழு-4 பாவங்கள் தனிநபர் வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 3.0 | : | **நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார்.** |
| தேர்ச்சி மட்டம் | 3.1 | : | வாழ்வில் இடம்பெறும் பாவங்களை இனங்கண்டு அவற்றிலிருந்து தவிர்ந்து வாழ்வார். |
| செயற்பாடு | 3.1.2 | : | **'அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருவோம்'.** |
| நேரம் | | : | 80 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 3.1.2.1 இலுள்ள கவிதை
- இணைப்பு 3.1.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- இஸ்லாம் பாடநூல் தரம்-8 (பதிப்பு 2000), 60ம் பக்கம் - 3 பிரதிகள்.
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.1.2.1** :

- இணைப்பு 3.1.2.1இல் உள்ள கவிதையை வாசித்துக் காட்டி பொருளை விளக்குங்கள்.
- தௌபா, இஸ்தி.'.பார் என்பவற்றை செயல்படுத்திய சந்தர்ப்பங்கள் பற்றி மாணவரிடம் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - ஒரு முஸ்லிமின் பாவத்தை தவ்பாவும் இஸ்தி.'.பாரும் அழித்து விடுகின்றன.
> - தௌபா என்பது தான் செய்த பாவங்களிலிருந்து விடுபட்டு அல்லாஹ்விடம் மீளுவதாகும்.
> - குர்ஆனும் ஸுன்னாவும் தௌபாவைப் பல இடங்களில் வலியுறுத்துகின்றன.
> - நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நாளும் 70/100 முறை இஸ்தி.'.பார் செய்து வந்துள்ளார்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 3.1.2.2** :

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 3.1.2.2. இலுள்ள குழுத் தேடியாய்வு பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(35 நிமிடங்கள்)

படி 3.1.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - மனிதன் பாவம் செய்யும் இயல்புடன் படைக்கப்பட்டுள்ளான். எனினும் பாவத்திலிருந்து விலகி நடக்கும் ஆற்றல் அவனுக்குண்டு.
> - ஆதமுடைய மக்கள் அனைவரும் பாவம் செய்யக் கூடியவர்களே. பாவம் செய்பவர்களில் மிகச் சிறந்தவர்கள் மன்னிப்புக் கோரி மீள்பவர்களே. (திர்மிதி)
> - மனிதன் செய்யும் பாவங்களை அல்லாஹ் தன்னருளால் மன்னிக்கிறான்.
> - ஆதமுடைய மகனே! நீ இந்தப் பூமியின் அளவுக்குப் பாவங்கள் செய்து பின்னர் எனக்கு இணைவைக்காது என்னை நீ சந்தித்தால், நான் அந்தப் பூமியின் கனவளவுக்கு உனக்கு மன்னிப்பைத் தருவேன். (திர்மிதி)
> - அவர்கள் யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்துவிட்டாலும் அல்லது (ஏதேனும் பாவம் இழைத்து) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அல்லாஹ்வை நினைத்து (அவனிடமே) தங்களுடைய பாவங்களை மன்னிக்கத் தேடுவார்கள். (அல்லாஹ்வும் அவர்களை மன்னித்து விடுவான்). அல்லாஹ்வையன்றி, (இத்தகையோரின்) குற்றங்களை மன்னிப்பவன் யார்? அவர்கள் செய்த (தவறான) காரியத்தை (தவறென்று) அவர்கள் அறிந்து கொண்டால் (அதில்) நிலைத்திருக்கவும் மாட்டார்கள். உடனே அதிலிருந்து விலகி விடுவார்கள். அத்தகையோருக்குரிய கூலி அவர்களின் இரட்சகனிடமிருந்து மன்னிப்பும் நீரருவிகள் சதா ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதிகளுமாகும். அவர்கள் அவற்றில் நிரந்தரமாக (தங்கி) இருப்பார்கள். (இத்தகு) காரியங்கள் செய்தோரின் கூலி மிக நல்லது. (3:135-136)
>
> பாவமீட்சி பெறுவதற்கு
>
> 1. குறித்த பாவத்திலிருந்து முற்றாக நீங்குதல்
> 2. குறித்த பாவத்தைச் செய்தமைக்காக மனம் வருந்துதல்
> 3. திரும்பவும் குறித்த பாவத்தை செய்வதில்லை என்று உறுதி கொள்ளல்.
> 4. மனிதர்களுடன் தொடர்பான பாவமெனில் அவர்களிடம் நேரடியாகச் சென்று முதலில் மன்னிப்புக் கோருதல்.
>
> போன்ற நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

(30 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- தௌபா, இஸ்தி.:.பார் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி அறிந்து விளக்குவார்.
- தான் செய்யும் பாவங்களுக்காக உடனுக்குடன் பாவமன்னிப்பு கோரிக்கொள்வார்.
- தௌபா, இஸ்தி.:.பாரில் ஈடுபடுவதை வழமையாக்கிக் கொள்வார்.
- தான் செய்த பாவங்களுக்காக வருந்தி உடன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால் பாவமன்னிப்பு பெறலாம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- தௌபா, இஸ்தி.:.பாரின் அவசியம் பற்றி ஏனையோருக்கும் எடுத்துக் கூறுவார்.

**இணைப்பு 3.1.2.1**

அது மூஸா (அலை) அவர்கள் வாழ்ந்த காலம். மழையின்றி மக்கள் வருந்தினர். நாடு பஞ்சத்தால் வாடியது. மக்கள் மூஸா (அலை) அவர்களிடம் முறையிட்டனர். எழுபதினாயிரம் மக்கள் ஒன்று கூடி அல்லாஹ்விடம் துஆக் கேட்டனர். இருந்தும் மழை பொழியவில்லை. காரணம் கேட்கப்பட்டபோது, "நாற்பது ஆண்டுகளாக பாவத்தில் மூழ்கியுள்ள ஒருவர் அங்கே இருக்கிறார். அவரை வெளியேற்றுங்கள்" என்று அல்லாஹ்விடமிருந்து கட்டளை வந்தது. அப்படியான ஒருவர் இங்கே இருந்தால் உடனே வெளியேறி விடுமாறு மூஸா (அலை) அறிவித்தார்கள். இருந்தும் எவரும் வெளியேறவில்லை. அதனைக் கேட்ட அந்தப் பாவி, மனம் உருகினான். தனது நிலையை எண்ணி பாவமன்னிப்புக் கோரினான். இதன் பின்னர் மழை பெய்ய ஆரம்பித்தது. மூஸா (அலை) மழை பொழிவதற்கான காரணத்தை வினவினார்கள். குறித்த நபர் பாவமன்னிப்புக் கேட்டதாக அல்லாஹ் அறிவித்தான். அந்த நபரைத் தனக்குக் காட்டித் தருமாறு மூஸா (அலை) வினவினார்கள். தான் நாற்பது வருட காலம் மறைத்து வைத்திருந்த ஒருவரைக் காட்டித் தர முடியாதென அல்லாஹ் மறுத்து விட்டான்.

**இணைப்பு 3.1.2.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவோம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்ப்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 தௌபா, இஸ்தி.:.பார் என்பவற்றை வலியுறுத்தும் குர்ஆன் வசனங்கள் இரண்டைத் தேடி எழுதுங்கள்.

குழு-2 தௌபா, இஸ்தி.:.பார் என்பவற்றை வலியுறுத்தும் இரண்டு ஹதீஸ்களைத் திரட்டி எழுதுங்கள்.

குழு-3 தௌபா ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-4 நாளாந்தம் ஓதக் கூடிய தவ்பா இஸ்தி.:.பார் அடங்கிய இரு பிரார்த்தனைகளைத் தேடி எழுதுங்கள்.

குழு-5 நாளாந்த வாழ்வில் இஸ்தி.:.பாரைக் கடைப்பிடித்தொழுகுவதற்கான வழிமுறைகள் யாவை எனக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**தேர்ச்சி 3.0 : நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2** : வாழ்வின் தேவைகளுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார். நபி (ஸல்) அவர்கள் ஓதிய துஆக்களைக் கற்று அவற்றை ஓதி வருவார்.

**செயற்பாடு 3.2.** : **'துஆவின் முக்கியத்துவத்தை அறிந்து பிரார்த்தனையில் ஈடுபடுவோம்'.**

**நேரம்** : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 3.2.1 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- இணைப்பு 3.2.2 இலுள்ள தகவல் கோவை
- இஸ்லாம் பாடநூல் தரம் 08 (பதிப்பு 2008), கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
- தொழுகைக்குப் பின் ஓதும் ஓதல்கள் - ஜம்இய்யதுல் உலமா வெளியீடு

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 3.2.1** :

- வகுப்பிலுள்ள ஒரு மாணவரை அழைத்துத் தான் வழக்கமாக ஓதிவரும் துஆக்கள் சிலவற்றை வகுப்பறையில் முறையாக ஓதிக் காட்டும்படி கூறுங்கள்.
- அவர் ஓதிய துஆக்களை மையப்படுத்தி கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • துஆ என்ற பதம் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதைக் குறிக்கின்றது.<br>• அல்லாஹ்விடம் பிரார்த்திப்பது இபாதத் ஆகும்.<br>• பிரார்த்தனைக்கு சில ஒழுங்கு விதிகள் காணப்படுகின்றன.<br>• பிரார்த்தனை மூலம் அனேக பயன்கள் கிடைக்கின்றன.<br>• நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளார்கள். |

(20 நிமிடங்கள்)

**படி 3.2.2** :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- இணைப்பு 3.2.2 இல் தரப்பட்டுள்ள தகவல் கோவையை பயன்படுத்த வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(30 நிமிடங்கள்)

படி 3.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - நிறைவேற வேண்டுமென எதிர்பார்க்கும் ஆசைகள், குணமடைய வேண்டுமென எதிர்பார்க்கும் நோய்கள், மன்னிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கும் பாவங்கள், தீர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கும் பிரச்சினைகள் என தேவைகள் நிறைய உள்ளன. அவற்றை நிவர்த்தித்துக் கொள்ள நாம் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்.
> - பிரார்த்தனை மு..மினின் ஆயுதமாகும் (ஹாகிம்).
> - நாம் அல்லாஹ்விடம் தேவையுள்ளவர்கள் என்பதை அல்குர்ஆன் (35:15) உறுதிப்படுத்துகின்றது.
> - அல்லாஹ்விடம் பிரார்த்திப்பது ஓர் இபாதத் ஆகும். (திர்மிதி)
> - யார் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கவில்லையோ அவன் மீது அல்லாஹ் கோபப்படுகிறான். (இப்னு மாஜா)
> - அல்லாஹ்விடம் அவனது அருளைக் கேளுங்கள். அல்லாஹ் கேட்பதை விரும்புகிறான். (திர்மிதி)
> - அல்லாஹ் வெட்கமுடையவன். தாராளமாகக் கொடுப்பவன். அடியான் இரு கைகளையும் உயர்த்திய பின் அவற்றை வெறுங்கைகளாக திருப்பி அனுப்புவதற்கு அவன் வெட்கப்படுகிறான். (திர்மிதி)
> - அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான செயல் அவனிடம் பிரார்த்திப்பதாகும். (அஹ்மத்)
> - பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட பல நிபந்தனைகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை.
>   - பிராத்தனைக்குப் பதிலளிப்பவன் அல்லாஹ் மாத்திரமே என்ற உறுதியான நம்பிக்கை.
>   - அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்தித்தல்
>   - உணவு, பானம், உடை போன்றன ஹலாலானவைகளாக இருத்தல்.
>   - பிரார்த்தனைக்கான பதிலுக்கு அவசரப்படாதிருத்தல்.
>   - நல்லவற்றுக்காக மட்டும் பிரார்த்தித்தல்.
>   - அல்லாஹ்விடம் பதில் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் பிரார்த்தித்தல்.
>   - உறவுகளைத் துண்டிக்காதிருத்தல்.
> - இஸ்லாம் பிரார்த்திப்பதற்கு ஒழுங்குகளைக் கற்றுத் தந்துள்ளது.
>   - பிரார்த்திக்க முன் அல்லாஹ்வைப் புகழ்தல், முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லல்.

- பாவமன்னிப்புக்காகப் பிரார்த்திப்பதாயின் செய்த பாவத்தை ஏற்று அதற்காக வருந்துதல்.
- விருப்புடனும் மன்றாட்டத்துடனும் இஹ்லாஸுடனும் வற்புறுத்திக் கேட்டல்.
- ஸாலிஹான அமல்களை முன்னிறுத்திக் கேட்டல்.
- கிப்லாவை முன்னோக்குதல்
- இரு கைகளையும் உயர்த்துதல்
- பல் துலக்குதல், வுழூச் செய்தல்
- அமைதியோடும் பணிவோடும் பிரார்த்தித்தல்.
- துஆ ஏற்றுக் கொள்ளப்படும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தல்.

● துஆக் கேட்பதால் பல பயன்கள் கிடைக்கின்றன.
- இறையன்பு கிட்டும்
- உள்ளம் ஆறுதலடையும்
- தேவை நிறைவேறும்
- வரவிருக்கும் ஆபத்துகள் நீங்கும்
- பெருமை இல்லாமற் போகும்
- அல்லாஹ்வுடனான நெருக்கம் அதிகரிக்கும்.
- மறுமையில் சேமிப்பாக, கட்டுச்சாதமாக அமையும்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- பிரார்த்தனையின் முக்கியத்துவத்தையும், பயனையும் விளக்கி எழுதுவார்.
- தனக்காவும், பிறருக்காவும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்.
- பிரார்த்தனைக்குரிய நிபந்தனைகளையும் ஒழுக்கங்களையும் வேறுபடுத்திக் காட்டுவார்.
- தனியாகவும், கூட்டாகவும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவார்.
- முஹம்மத் (ஸல்) அவர்கள் கேட்ட துஆக்களை சரியாக உச்சரிப்புடன் ஓதி வருவார்.

**இணைப்பு 3.2.1**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"துஆவின் முக்கியத்துவத்தை அறிந்து பிராத்தனையில் ஈடுபடுவோம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- நூல்களில் உரிய பக்கங்களை உசாவி, நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 தனது சகோதரனுக்காக நல்லதொன்றை நாடி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தல் தொடர்பான நபிமொழி ஒன்றினை எழுதி, அந்நபிமொழி தொடர்பாக நடைமுறை வாழ்வில் நாம் பின்பற்றக் கூடிய நல்ல அம்சங்களையும் கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-2 எமது பிரார்த்தனைகள் அல்லாஹ்விடம் அங்கீரிக்கப்பட வேண்டுமாயின் நாம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-3 பிரார்த்தனை செய்வதற்கான நிபந்தனைகள், ஒழுங்குகள், அங்கீகரிக்கப்படும் சந்தர்ப்பங்கள், நேரங்கள் என்பவற்றை பட்டியற்படுத்திக் காட்டுங்கள்.

குழு-4 முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓதி வந்த துஆக்களில் நீங்கள் வழமையாக்கிக் கொண்டுள்ள துஆக்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**இணைப்பு 3.2.1.2**

اَللّٰهُمَّ يَا مُقَلِّبَ الْقُلُوْبِ ثَبِّتْ قَلْبِيْ عَلَى دِيْنِكَ اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ ،
وَعَزَائِمَ مَغْفِرَتِكَ وَالسَّلَامَةَ مِنْ كُلِّ إِثْمٍ ، وَالْفَوْزَ بِالْجَنَّةِ ، وَالنَّجَاةَ مِنَ النَّارِ ،
اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْهُدَى وَالتُّقَى وَالْعَفَافَ وَالْغِنَى ،
اَللّٰهُمَّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ ، اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنَ الْخَيْرِ كُلِّهِ
مَا عَلِمْتُ مِنْهُ وَمَا لَمْ أَعْلَمْ وَأَعُوْذُ بِكَ مِنَ الشَّرِّ كُلِّهِ مَا عَلِمْتُ وَمَا لَمْ أَعْلَمْ ،
وَأَسْأَلُكَ الْجَنَّةَ وَمَا قَرَّبَ إِلَيْهَا مِنْ قَوْلٍ أَوْ عَمَلٍ ، وَأَعُوْذُ بِكَ مِنَ النَّارِ
وَمَا قَرَّبَ إِلَيْهَا مِنْ قَوْلٍ أَوْ عَمَلٍ

உள்ளங்களை மாற்றுபவனே, எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் உறுதியாக்கி வைத்துவிடுவாயாக. இறைவா, உனது அருட் பொக்கிஷங்களையும் உனது பாவமன்னிப்பையும் பாவங்களிலிருந்து பாதுகாப்பையும் சுவனத்தின் வெற்றியையும் நரகத்திலிருந்து பாதுகாப்பையும் உன்னிடம் வேண்டுகின்றேன். இறைவா! நான் உன்னிடம் நேர்வழியையும் இறையச்சத்தையும், கற்பொழுக்கத்தையும் வாழ்க்கை வசதிகளையும் கேட்கின்றேன். இறைவா! சதா உன் நினைவில் நிலைத்திருக்க எனக்கு உதவி புரிவாயாக! அத்துடன் உனக்கு நன்றி செலுத்தவும் அழகான முறையில் உன்னை வணங்கி வழிபடவும் எனக்கு, உதவி புரிந்தருள்வாயாக. இறைவா! நான் அறிந்ததும் இன்னும் அறியாததுமான எல்லா நல்லவற்றையும் உன்னிடம் கேட்கின்றேன். அவ்வாறே நான் அறிந்ததும் அறியாததுமான எல்லாத் தீமைகளை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். சுவனத்தையும் அதற்கு இட்டுச் செல்லக் கூடிய சொல், செயல்களையும் உன்னிடம் கேட்கின்றேன். நரகத்தை விட்டும், நரகத்திற்கு இட்டுச் செல்லும் சொல், செயல்களை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | **நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார்.** |
| **தேர்ச்சி மட்டம் 3.3** | : | வாழ்வை எளிமையாக அமைத்துக் கொள்வார். |
| **செயற்பாடு 3.3** | : | **'எளிமையாக வாழ்வோம்'.** |
| **நேரம்** | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • இணைப்பு 3.3.1 இலுள்ள சம்பவம்<br>• இணைப்பு 3.3.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• இஸ்லாம் பாடநூல் தரம்-8 (பதிப்பு 2005) க.வெ.தி<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 3.3.1 :

- தாமாக முன்வரும் ஒரு மாணவரை வகுப்பின் முன்னே அழைத்து, இணைப்பு 3.3.1 இல் உள்ள சம்பவத்தை வாசித்துக் காட்டுமாறு கூறுங்கள்.
- எளிமை, சிக்கனம், சேமிப்பு என்ற பதங்களின் பொருளை மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - எளிமை, சிக்கனம், சேமிப்பு என்பன இஸ்லாம் விரும்பும் பண்புகளாகும்.
> - உலோபித்தனத்துக்கும் வீண்விரயத்துக்கும் இடைப்பட்ட நிலை சிக்கனம் எனப்படுகிறது.
> - வசதியிருந்தும் ஆடம்பரத்தைத் தவிர்த்து வாழ்வது எளிமையாகும்.
> - எளிமை, சிக்கனம் என்பவற்றுக்கூடாக மீதியாகும் பணத்தை அல்லது பொருளை பிறருக்கு உதவுவதற்காகவோ எதிர்கால நலனுக்காகவோ ஒதுக்கி வைப்பது சேமிப்பு எனப்படும்.

(15 நிமிடங்கள்)

படி 3.3.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 3.3.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

**எளிமை**

- நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கைமுறை எப்போதும் எளிமையாகவே இருந்தது. அவர்கள் எளிமையை விரும்பினார்கள்.
- அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியோர் கலீபாக்களாக இருந்தும்கூட எளிமையாக வாழ்ந்து காட்டினார்கள்.
- அப்துர் ரஹ்மான் பின் அவ்ப், அபூதர் அல்கிபாரி போன்ற ஸஹாபாக்கள் கூட தமது வாழ்க்கைமுறையை எளிமையாகவே அமைத்துக் கொண்டார்கள்.

**சிக்கனம்**

- இருப்பதைக் கொண்டு திருப்தியடைவது வாழ்வுக்கு அணி சேர்ப்பதாகும்.
- ஆடம்பரத்தைத் தவிர்ந்து செலவினங்களைக் குறைப்பதன் மூலம் சிக்கனம் பேணலாம்.
- சிக்கனமாக வாழ்பவர் வறுமைப்படமாட்டார் (தபராணி).
- நீர், உணவு, உடை, வீடு, மின்சாரம், தொலைபேசி, பாவனைப் பொருட்கள், பணம் என்பவற்றில் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும்.
- நேரம், உரையாடல் என்பவற்றிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- "அளவு கடந்து வீண்விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்களாக இருக்கின்றனர்" (17:26,27).
- "உண்ணுங்கள், பருகுங்கள். ஆனால் வீண்விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் வீண்விரயம் செய்வோரை நேசிப்பதில்லை" (7:31).

**சேமிப்பு**

- தேனீ, எறும்பு போன்ற அல்லாஹ்வின் படைப்புக்கள் கூட சேமிப்பைக் கடைப்பிடிக்கின்றன.
- தனக்கும் தனது பராமரிப்பிலிருப்போருக்கும் ஒருவருட காலத்துக்குப் போதிய செல்வத்தையும் பண்டங்களையும் சேமித்து வைத்துக் கொள்வதற்கு சட்ட அறிஞர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.
- நபி யூசுப் (அலை) அவர்கள் பஞ்சகாலத்தில் பயன்படுத்துவதற்காக ஏழு வருடங்களுக்குப் போதுமான தானியங்களைச் சேமித்து வைத்தார்கள்.
- எளிமை, சிக்கனம், சேமிப்பு ஆகியவற்றை வாழ்க்கையில் தொடர்ந்து கடைப்பிடித்து வரவேண்டும்.

(25 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- எளிமை, சிக்கனம், சேமிப்பு என்பவற்றின் முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார்.
- வாழ்க்கையை எளிமையாகவும் சிக்கனமாகவும் நடத்தினால் எதிர்காலத்திற்காகச் சேமிக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- சேமிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகளை அறிந்து அதனைக் கடைப்பிடிப்பார்.
- தன்னுடன் இருப்பவர்களுக்கு எளிமையாக வாழ வழிகாட்டுவார்.

இணைப்பு 3.3.1

ஒரு முறை உமர் (ரழி) அவர்கள் நோயுற்றார்கள். சிகிச்சைக்கு தேன் தேவைப்பட்டது. கடைத் தெருவில் தேனைத் தேடி அலைகின்றார். எங்கும் கிடைக்கவில்லை. பின்னர் பைதுல் மாலில் தேன் இருப்பதாகக் கேள்விப்பட்டார்கள். தொழுகை முடிந்ததும் கலீபா எழுந்து நின்றார். தமக்கு தேன் அவசியப்பட்டிருப்பதை எடுத்துச் சொன்னார். பைத்துல் மாலில் தேன் இருப்பதாகவும் அதிலிருந்து தான் தேனைப் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குமாறும் மக்களிடம் கேட்டுக் கொண்டார்கள். இதைக்க கேட்ட மக்கள் அதிர்ச்சியடைந்தனர். சிறிதளவு தேன் பெறுவதற்கு கலீபாவுக்கு அனுமதி வேண்டுமா? கலீபாவாக இருந்தும் சிறிதளவு தேனைக் கூட வீட்டில் வைத்திருக்காத கலீபா உமர் (ரழி) அவர்களின் எளிமை வாழ்வை எப்படித்தான் பாராட்டாமல் இருக்க முடியும்.

இணைப்பு 3.3.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

"எளிமையாக வாழ்வோம்."

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- தேவையான எழுது பொருள்கள், பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 ஸஹாபாக்கள் எளிமையாக வாழ்ந்தார்கள் என்பதை சம்பவங்களைக் காட்டி விளக்குங்கள்.

குழு-2 உங்களது மாணவப் பருவத்தில் சிக்கனத்தைக் கைக்கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து பட்டியல் படுத்துங்கள்.

குழு-3 உங்களது மாணவப் பருவத்தில் சேமிப்பதற்கான வழிமுறைகளைப் பற்றிக் கலந்துரையாடி அவற்றைத் தொகுத்து எழுதுங்கள்.

தேர்ச்சி 3.0 : **நற்குணமும் நன்னடத்தையும் மிக்கவராக விளங்குவார்.**

தேர்ச்சி மட்டம் 3.4 : வாழ்வை எளிமையாக அமைத்துக் கொள்வார்.

செயற்பாடு 3.4 : **'பிறருக்கு உதவி வாழ்வோம்'.**

நேரம் : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 3.4.1 இலுள்ள சம்பவம்
- இணைப்பு 3.4.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் 4 பிரதிகள்.
- இணைப்பு 3.4.3 இலுள்ள தகவல் கோவை. (பிறருக்கு உதவிய ஸஹாபாக்கள் சம்பவம்)
- இஸ்லாம் பாடநூல் தரம்-8, (2008) 4 பிரதிகள்
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி **3.4.1** :
- இணைப்பு 3.4.1 இல் உள்ள சம்பவத்தை மாணவர்கள் முன் வாசித்துக் காட்டுங்கள்.
- பிறருக்கு உதவி செய்த சந்தர்ப்பங்களை மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - நீங்கள் நல்ல விடயங்களில் பரஸ்பரம் உதவிக் கொள்ளுங்கள்.
> - நிச்சயமாக நாம் அல்லாஹ்வின் முகத்துக்காகவே உங்களுக்கு உணவளிக்கின்றோம். அவர்களின் கூலியையோ நன்றி செலுத்துவதையோ நாம் நாடவில்லை (76:9)
> - ஒரு முஸ்லிம் தனது நலனை மட்டும் கவனிக்காது பிறரது நலன்களையும் கவனிக்க வேண்டும்.
> - அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறருக்கு உதவி வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.
> - எமது தேவைகளை விட பிறரது தேவைகளுக்கு முன்னுரிமை வழங்குவது சிறந்த தர்மச் செயலாகும்.

(15 நிமிடங்கள்)

படி **3.4.2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 3.3.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- அல்லாஹ் மாபெரும் கொடையாளன். அவன் தனது அடியார்களுக்கு நன்கொடையாக வழங்கியவற்றை அவ்வடியார்கள் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென விரும்புகின்றான்.
- எவர்கள் தங்களின் பொருட்களை இரவிலும் பகலிலும் (தர்மமாக) இரகசியமாகவும் பரகசியமாகவும் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய கூலி அவர்களின் இறைவனிடத்தில் உண்டு. தவிர அவர்களுக்கு மறுமையில் யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். (2:274)
- ஈகை, தாராளத் தன்மை போன்றன இஸ்லாம் போற்றுகின்ற சிறந்த பண்புகளாகும்.
- "நீங்கள் தர்மம் செய்வதற்கு ஈத்தம் பழத்தின் ஒரு துண்டுதான் இருக்கின்றது என்றால் அதையும் தந்தே ஆக வேண்டும்" (முஸ்லிம்) என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.
- "நபி (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த வள்ளலாக விளங்கினார்கள். வீசும் காற்றை விடவும் வேகமாகக் கொடை கொடுப்பவராகத் திகழ்ந்தார்கள்" (புஹாரி).
- "உங்களில் ஒருவர் தனக்கு விரும்புவதையே தனது சகோதரனுக்கு விரும்பாதவரை ஈமான் கொள்ளமாட்டார்" (புஹாரி, முஸ்லிம்).
- அடியான் தனது சகோதரனுக்கு உதவி செய்துகொண்டிருக்கும் காலமெல்லாம் இறைவன் அவ்வடியானுக்கு உதவி செய்துகொண்டிருக்கின்றான்.
- நல்லவற்றை நேசித்தலும் நல்லவற்றிற்காகத் துணை நிற்பதும் ஒரு முஸ்லிமின் கடமையாகும்.
- பசித்தவனுக்கு உணவளிப்பது, தாகித்தவனுக்கு நீர் வழங்குவது, ஆடை தேவையானவனுக்கு ஆடை வழங்குவது, நோயுற்றவனுக்கு சிகிச்சையளிப்பது, கற்பவனுக்கு உதவுவது போன்ற உதவிகளை நாமும் வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- பிறருக்கு உதவக் கூடிய வழிமுறைகளைக் கலந்துரையாடல் மூலம் கண்டறிவார்.
- பிறருக்கு உதவி வாழ்வதால் பயன்கள் கிடைக்கும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பிறருக்கு உதவுவது தர்மமாகும் என்பதை விளக்குவார்.
- பிறருக்கு உதவி வாழ்வார். பிறரது தேவைக்கு முதன்மை வழங்குவார்.
- வளங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார்.

**இணைப்பு 3.4.1**

முஹம்மத் (ஸல்) அவர்களின் அன்பு மகள் பாத்திமா (ரழி) எளிமையான வாழ்க்கையை நடத்தினார்கள். ஒரு நாள் அவரது வீட்டில் உண்பதற்கு எதுவுமிருக்கவில்லை. கணவன் அலி (ரழி) அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து சிறிதளவு கோதுமையைக் கொண்டு வந்தார்கள். பாத்திமா (ரழி) அவர்கள் அதில் ஒரு பகுதியை எடுத்து, திருகையிலிட்டு அரைத்து மாவாக்கினார். பின்னர் உண்பதற்காக உரொட்டியைத் தயாரித்தார்.

அப்போது வீட்டு வாசலில், "அம்மா... நான் ஓர் ஏழை. மிகப் பசியுடன் இருக்கின்றேன்" என்று கூறியவாறு ஒரு யாசகர் நின்று கொண்டிருந்தார். உடனே தாம் தயாரித்த அந்த உரொட்டியை அவருக்கு தானமாக வழங்கினார். உள்ளே வந்த பாத்திமா (ரழி) அவர்கள் இன்னொரு பகுதி கோதுமையை எடுத்து திருகையிலிட்டு மாவாக்கினார். பின்னர் உரொட்டியொன்றைத் தயாரித்தார். அதை உண்பதற்கு தயாராகும்போது, வாசலில் மற்றொரு குரல் கேட்டது. "அம்மா நான் ஓர் அநாதை. பசியோடு இருக்கின்றேன்" என்று கூறியவாறு மற்றொரு யாசகர் நின்று கொண்டிருந்தார். இரண்டாவது முறையாக தயாரித்த உரொட்டியையும் அவ்வனாதைக்கு வழங்கி மகிழ்ச்சி கண்டார் பாத்திமா (ரழி).

இறுதியாக மீதியிருந்த கோதுமையை எடுத்து அரைத்து மாவாக்கி மூன்றாவது உரொட்டியைத் தயாரித்தார். அதைச் சாப்பிட ஆயத்தமானபோது முன்னர் போன்றே வாசலில் மீண்டும் ஒரு குரல் கேட்டது. "அம்மா... நான் ஒரு கைதி. எனக்கு உதவி செய்யுங்கள்" என்று ஒருவர் இறைஞ்சிக் கொண்டிருந்தார். மனம் நொந்த பாத்திமா (ரழி) மூன்றாவது முறையாகச் சுட்ட உரொட்டியை அக்கைதிக்கு கொடுத்து விட்டார். பாத்திமா (ரழி) அவர்களின் இச்செயல் பிடித்தமானதாக அமைந்ததால் அல்லாஹ் ஓர் இறைவசனத்தை இவ்வாறு அருளினான்.

"அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் கைதிகளுக்கும் ஆகாரமளித்தும் வந்தனர்" (76:08).

**இணைப்பு 3.4.2**

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

"பிறருக்கு உதவி செய்வோம்."

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- தகவல் கோவை, நூல்கள், எழுது பொருள்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்ப்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புகள்**

குழு-1 தர்மம் செய்வதால் ஏற்படக் கூடிய தனிமனித சமூக நன்மைகளை அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-2 பிறருக்கு நலன் பயக்கும் காரியங்களை அட்டவணைப்படுத்தி அவற்றால் சமூகத்துக்கு ஏற்படும் நன்மைகளைத் தொகுத்து எழுதுங்கள்.

குழு-3 பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்கிய ஸஹாபாக்களின் வரலாற்றுச் சம்பவங்கள் இரண்டினைத் தேடி எழுதுங்கள்.

குழு-4 பிறர் தேவைகளை எவ்வாறு முதன்மைப்படுத்தலாம் என்பதைப் பாடசாலை வாழ்விலிருந்து உதாரணங் காட்டி எழுதுங்கள்.

தேர்ச்சி 3.0 : **நற்குணமும் நன்நடத்தையும் மிக்கவராக விளங்குவார்.**

தேர்ச்சி மட்டம் 3.5 : கெட்ட நட்புகளைத் தவிர்த்து நல்ல நட்புகளை ஏற்படுத்திக் கொள்வார்.

செயற்பாடு 3.5 : **'நல்ல தொடர்புகளைப் பேணுவோம்'.**

நேரம் : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 3.5.1 இலுள்ள உரையாடல்
- இணைப்பு 3.5.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- நூல்: முன்மாதிரி முஸ்லிம் (அஹ்மத் அலி அல் ஹாசிமி 2007)
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 3.5.1 :
- இரண்டு மாணவர்களை அழைத்து இணைப்பு 3.5.1 இல் உள்ள உரையாடலை வகுப்பில் முன்வைக்குமாறு கூறுங்கள்.
- அது பற்றிக் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - முஸ்லிம்கள் ஏனையோருடன் நட்புக்கொள்வதை இஸ்லாம் வரவேற்கின்றது.
> - நல்ல நட்பு, ஒரு மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும் கூட்டு வாழ்விலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது.
> - மனிதர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் நட்புக்கு இஸ்லாம் முக்கியத்துவம் கொடுக்கின்றது.
> - நல்ல நட்பு ஒருவனை நல்வழியில் இட்டுச் செல்லும். தீய நட்பு ஒருவனைத் தீய வழியில் இட்டுச் செல்லும்.

(15 நிமிடங்கள்)

படி 3.5.2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 3.5.3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - ஒருவர் தனது நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும்.
> - "இறை நம்பிக்கையாளன் ஒருவனையே உங்களுடைய தோழனாக ஆக்கிக் கொள்ளுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
> - நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "ஒரு நல்ல மனிதனுக்கு உதாரணம்: வாசனைப் பொருட்களை விற்பனை செய்யும் ஒரு வியாபாரியை ஒத்ததாகும். அவன் உங்களுக்கு எதையுமே தரவில்லையாயினும் குறைந்தபட்சம் அவருடைய வாசனையாவது உங்களுக்கும் கிடைக்கும். தீய நண்பர்களுக்கு உதாரணம் கொல்லனின் சூளையைப் போன்றது. நீங்கள் அதன் கருமையிலிருந்து தப்பித்துக் கொண்டாலும் குறைந்தபட்சம் அதன் புகையாவது வந்து உங்கள் மூக்கை உறுத்தும்" (அபூதாவூத்).
> - "அல்லாஹ்வின் முன்னிலையில் சிறந்த மனிதர்கள் யாரெனில், தனது தோழர்களிடம் நல்லவராக நடப்பவரே ஆவார்" (ஹாக்கிம்).
> - மனிதர்களில் நல்லவன் தன்னுடைய நண்பர்களிடத்தில் தூய்மையாக நடந்திடுபவனே.
> - நல்ல நண்பர்கள் எப்போதும் நல்லவற்றில் ஒத்துழைத்துக் கொள்வார்கள்.
> - முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்களின் உற்ற நண்பரான அபூபக்கர் (ரழி) அவர்களும் நட்புக்கு சிறந்த உதாரண புருஷர்களாவர்.
> - "நீங்கள் ஒருவரை நேசிப்பதாயின் அதனை அவருக்கு அறிவித்துவிடுங்கள்" (அபூதாவூத்).
> - "நட்பு வளர்வதற்கு நீங்கள் பரஸ்பரம் பரிசில்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
> - உலகில் நல்ல நட்பை ஏற்படுத்திக் கொள்ளாதோர் மறுமையில் அதையிட்டுக் கைசேதப்பட நேரிடும்.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நல்ல தொடர்பின் பயன்களை இனங்காண்பார்.
- நல்ல தொடர்புகள் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற மனப்பக்குவத்தைப் பெறுவார்.
- நல்ல நண்பர்கள் மூலம் ஏற்படும் பயன்களை அறிந்து நல்ல தொடர்புகளை வைத்துக் கொள்வார்.
- நல்ல தொடர்புகளை ஏற்படுத்த ஏனையோருக்கும் துணை நிற்பார்.

**இணைப்பு 3.5.1**

பஸ்னா : ஏன் ரிஸ்லா வழமைக்கு மாறாகத் தூங்கிக் கொண்டிருக்கிறாய்?

ரிஸ்லா : எனக்கு மனது சரியில்லை. என்னைத் தொந்தரவு செய்யாமல் போய்விடு.

பஸ்னா : உனக்கு என்ன செய்ய வேண்டும். நீயோ எனக்குத் தெரியாத எத்தனையோ விடயங்களை கற்றுத் தந்திருக்கிறாய்.

ரிஸ்லா : தோழி என்ற வகையில் நான் அதைச் செய்தேன்.

பஸ்னா : எனது தோழி என்ற வகையில் நானும் உதவி செய்யக் கூடாதா? உனது மனச் சுமையை வெட்கப்படாமல் சொல்.

ரிஸ்லா : பஸ்னா எங்களுடைய வீட்டின் நிலைமை உனக்குத் தெரியும். வாப்பாவுக்கு சுகம் இல்லாததால் உம்மாதான் குடும்பத்துக்காக உழைக்கிறார். பாவம் உம்மாவைக் கஷ்டப்படுத்த நான் விரும்பவில்லை. படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போகத் தீர்மானித்து விட்டேன்.

பஸ்னா : ஐயோ ரிஸ்லா, படிப்பை மாத்திரம் நிறுத்திக் கொள்ளாதே. நான் இன்று எனது தாயுடன் பேசி உனக்கு நல்ல தீர்வைச் சொல்கிறேன்.

ரிஸ்லா : என்ன தீர்வு சொல்லப் போகிறாய்?

பஸ்னா : படிக்கின்ற பிள்ளைகளுக்கு உதவி செய்ய எனது தாய் சில பெண்மணிகளுடன் சேர்ந்து ஒரு மகளிர் கழகம் அமைத்திருக்கிறார். அதன் மூலம் உனக்கு உதவி செய்ய முடியும் என நினைக்கிறேன். சற்றுப் பொறுத்துக் கொள். எனது உம்மா உனக்கு உதவுவார். இன்ஷா அல்லாஹ்.

ரிஸ்லா : ஜஸாகல்லாஹு கைரன். நீ நாளை நல்ல செய்தியோடு வருவாய் என எதிர்பார்க்கிறேன்.

**இணைப்பு 3.5.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"நல்ல தொடர்புகளைப் பேணுவோம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- தேவையான எழுதுகருவிகள், நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயாரித்த அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புக்கள்**

குழு-1 நல்ல தொடர்பினாலும் கெட்ட தொடர்பினாலும் ஏற்படும் பாதிப்புக்களை அட்டவணைப்படுத்திக் காட்டுங்கள்.

குழு-2 நல்ல தொடர்புகளின் அவசியத்தை எடுத்துக் காட்டும் ஹதீஸ்கள் சிலவற்றைத் தொகுத்து எழுதுங்கள். (முன்மாதிரி முஸ்லிம், 2007 என்ற நூலின் 128-132 வரையா பக்கங்கள்)

குழு-3 நல்ல தொடர்புகளின் மூலம் சமூகத்துக்கு ஏற்படும் பயன்களை எடுத்துக் காட்டுங்கள்.

குழு-4 நபியவர்கள் நல்ல நட்புகளை வைத்துக் கொண்டதால் ஏற்பட்ட சாதகமான விளைவுகளை எடுத்துக் காட்டுங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 4.0 | : | குடும்ப வாழ்க்கைக்கான இஸ்லாமிய வழிகாட்டல்களைப் பெற்று சீராக ஒழுகுவார். |
| தேர்ச்சி மட்டம் 4.1 | : | குடும்ப உறுப்பினர்களுக்கு மதிப்பளித்து குடும்பத்தின் சீரான போக்கிற்கு உதவுவார். |
| செயற்பாடு 4.1 | : | **'குடும்ப வாழ்வில் பரஸ்பரம் ஒத்துழைத்து வாழ்வோம்".** |
| நேரம் | : | 120 நிமிடங்கள் |
| தரவிருத்தி உள்ளீடுகள் | : | • இணைப்பு 4.1.1 இலுள்ள ஹதீஸ்<br>• இணைப்பு 4.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• இணைப்பு 4.1.3 இலுள்ள தகவல் கோவை-நான்கு பிரதிகள்<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 4.1.1 :

- இணைப்பு 4.1.1 இல் உள்ள ஹதீஸை வாசித்துக் காட்டுங்கள் அல்லது சுயமாக முன்வந்து வாசிக்கக் கூடிய ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- இந்த ஹதீஸ் உணர்த்தும் படிப்பினைகளைக் கேட்டுக் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - குடும்பங்கள் சமூகத்தின் அத்திவாரங்களாகும்.
> - நல்ல மனிதர்களை உருவாக்குவதில் குடும்ப உறுப்பினர்களுக்கு அதிக பங்குண்டு.
> - குடும்ப உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் மதித்து நடத்தல் வேண்டும்.
> - வீட்டு உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் மதித்து நடத்தல் வேண்டும்.
> - வீட்டு வேலைகளிலும், கல்விசார் நடவடிக்கைகளிலும், நல்லவைகளை வழக்கப்படுத்துவதிலும் தீயவற்றைக் களைந்து வாழ்வதிலும் குடும்ப உறுப்பினர்கள் பரஸ்பரம் ஒத்துழைத்தல் வேண்டும்.
> - இஸ்லாமிய சூழல் ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் குடும்பங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

(25 நிமிடங்கள்)

படி 4.1.1 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- இணைப்பு 4.1.3 தகவல் கோவைப் பிரதிகளை செய்து ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், நிறப் பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.

- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 4.1.2 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- இஸ்லாம் நல்ல குடும்பங்களை உருவாக்குவதற்கான அடிப்படைகளையும், வழிமுறைகளையும் முன்வைத்துள்ளது.
  - "விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதனுடைய எரிகட்டை மனிதர்களும், கற்களுமாகும்" (66:06).
  - "உங்களது பிள்ளைகளுக்கு ஏழு வயதாகும்போது அவர்களைத் தொழுகைக்கு ஏவுங்கள். பத்து வயதாகியும் அவர்கள் தொழுகையை நிறைவேற்றாது விட்டால் அவர்களை அடித்துத் தொழ வையுங்கள்" (அபூதாவூத்)
  - "அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு யாதென்றையும் இணைவைக்காதீர்கள். பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்" (4:36)
  - "தன் பெற்றோருக்கு நன்மை செய்யும் படியாக நாம் மனிதனுக்கு நல்லுபதேசம் செய்திருக்கின்றோம்" (29:08)
  - அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் நபி (ஸல்) அவர்களிடம் "அல்லாஹ்வுக்கு உவப்பான அமல் எது" என்று கேட்டேன். "தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவது" என்றார்கள். பின்பு என்ன என்று கேட்டேன். "பெற்றோருக்கு உபகாரம் செய்வது" என்றார்கள். "பின்பு என்ன" என்று கேட்டேன். "அல்லாஹ்வின் பாதையில் போரிடுவது" என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் (புஹாரி, முஸ்லிம்).
  - "பாவங்களிலெல்லாம் மிகப் பெரிய பாவத்தை உங்களுக்கு அறிவிக்கட்டுமா?' என கேட்ட நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், பெற்றோருக்கு நோவினை செய்தல்" எனப் பதிலளித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)
- குடும்பங்கள் தனித்து இயங்க முடியாது. அவை சேர்ந்து இயங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குபவர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களில் உறவினர், அயலார் பிரதான இடத்தை வகிக்கிறார்கள்.

- "ஆகவே, அந்த அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவனைக் கொண்டே (நீங்கள் உங்களுக்குள்) ஒருவருக்கொருவர் (வேண்டியவற்றைக்) கேட்டுக் கொள்கின்றீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்தக் கலப்பு சொந்தங்களை துண்டித்து விடுவதையும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள்" (4:1).
  - "எவர் தன்னுடைய வாழ்வாதாரம் விசாலமாக்கப்பட வேண்டும் என்றும் ஆயுள் நீளமாக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகிறாரோ அவர் தனது இரத்த பந்துக்களுடன் இணைந்து வாழட்டும்" (புஹாரி, முஸ்லிம்)
  - "இரத்த பந்தத்தைத் துண்டிப்பவன் சுவனம் புக மாட்டான்" (புஹாரி, முஸ்லிம்).
- நல்ல மனிதர்களை உருவாக்கும் பணியில் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும்.
  - "நன்மையிலும், பயபக்தியிலும் ஒருவருக்கொருவர் ஒத்து ழைத்துக் கொள்ளுங்கள். பாவத்திலும் பகைமையிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக் கொள்ளாதீர்கள். (5:2)
  - "ஒவ்வொரு குழந்தையும் இஸ்லாம் என்ற இயற்கையிலேயே பிறக்கின்றது. பெற்றோர்களே இக்குழந்தையை யூதர்களாகவோ, நஸாராக்களாகவோ, மஜூஸிகளாகவோ மாற்றி விடுகிறார்கள்" (புஹாரி).
- சிறந்த குடும்ப உருவாக்கத்திற்கு கணவன், மனைவிக்கு இடையில், பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையில், இரத்த உறவுகளுக்கு இடையில் இனபந்துக்களுக்கு இடையில் ஒருவரை ஒருவர் மதித்து நடக்க வேண்டியது அவசியமாகும்.

  "நம்மில் முதியவருக்கு மரியாதை செய்யாதவனும், சிறியவருக்கு இரக்கம் காட்டாதவனும் எமது உம்மத்தைச் சார்ந்தவன் அல்லன்" (அஹ்மத், தபராணி).
- வீட்டு வேலைகளில் கணவன் மனைவிக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் உறவினர்கள் உறவினர்களுக்கும் பரஸ்பரம் உதவிக் கொள்வதன் மூலம் கூட்டுப் பொறுப்புள்ள நல்ல குடும்பத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.
- கல்விசார் நடவடிக்கைகளில் குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஒத்துழைப்பதன் மூலம் நல்ல மனிதர்களை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.
  - "கற்பவனாக, கற்றுக் கொடுப்பவனாக, கற்பவனுக்கு உதவுபவனாக இரு. நான்காமவனாக இருந்து விடாதே" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
- நற்பண்புகளை வளர்ப்பதன் மூலம் நல்ல மனிதர்களை உருவாக்கும் பணியில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும்.
  - "நற்பாக்கியம் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கிறது. ஒழுக்கம் பெற்றோரிடமிருந்து கிடைக்கிறது" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (அல் அதபுல் முப்ரத்).

- "நான் நற்பண்புகளைப் பூரணப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்" (முஅத்தா)

- தீயனவற்றைக் களைவதிலும் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே பரஸ்பரம் ஒத்துழைப்பு அவசியப்படும்.
  - "தீமைகளைக் காணும்போது மனிதர்கள் அதைத் தடுக்காமல் இருப்பார்களானால் வெகுவிரைவில் அல்லாஹ்வின் வேதனை அவர்கள் அனைவரையும் சூழ்ந்துகொள்ளும். (அபூதாவூத்)
- குடும்ப வாழ்வில் இஸ்லாமிய சூழல் ஒன்றை உருவாக்கிக் கொள்வதில் பரஸ்பரம் ஒத்துழைத்தல் வேண்டும்.
- உறுதியான ஈமானைக் குடும்ப உறுப்பினர்களிடையே கட்டியெழுப்பி, ஆன்மீக, இபாதத் சார்ந்த விடயங்களைப் பேணுவதில் குடும்பத்தை வழிப்படுத்தி, தனிமனித சமூக உறவுகளை இஸ்லாமியமயப்படுத்தி, பொழுதுபோக்கு சாதனங்களின் பயன்பாட்டை நெறிப்படுத்தி இதனை மேற்கொள்ளலாம்.

(55 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- நல்ல மனிதர்களை உருவாக்குவதில் குடும்ப உறுப்பினர்கள் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டியதன் அவசியம் பற்றி அறிந்து கூறுவார்.
- குடும்ப உறுப்பினர்களை மதித்து நடக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- குடும்ப வாழ்வின் எல்லா விவகாரங்களிலும் எல்லா உறுப்பினர்களுடனும், ஒத்துழைப்புடன் நடந்து கொள்வார்.
- இஸ்லாமிய சூழல் ஒன்றை குடும்பத்தில் உருவாக்குவதில் குடும்பத்தாருடன் இணைந்து செயற்படுவார்.

**இணைப்பு 4.1.1**

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹிஜ்ரத் மற்றும் ஜிஹாத் செய்வதற்கு விரும்பினார். நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கோரினார். அவரைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள் "உமது பெற்றோர் உயிருடன் உள்ளனரா?" என வினவினார். அவர் "இருவரும் உயிருடனே உள்ளனர்" எனப் பதிலளித்தார். பின்னர் "நீ அல்லாஹ்விடம் நற்கூலியை எதிர்பார்க்கின்றீரா?' என வினவினார்கள். அவர் "ஆம்" எனப் பதிலளித்தபோது "உமது பெற்றோரிடம் நீ திரும்பிச் செல். அவ்விருவருடனும் நன்றாக நடந்து கொள்" என்று நபி (ஸல்) அவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்.

**இணைப்பு 4.1.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"குடும்ப வாழ்வில் பரஸ்பரம் ஒத்துழைத்து வாழ்வோம்".**

- உங்களது குழுவுக்கு வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- இணைப்பு 4.1.3 இலுள்ள தகவல் கோவையின் பிரதியினைப் பெற்று நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 நல்ல மனிதர்களை உருவாக்கும் பணியில் குடும்ப உறுப்பினர்கள் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் குர்ஆன் வசனங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவ்வசனங்கள் முன்வைக்கும் கருத்துக்களை எழுதுங்கள்.

குழு-2 நல்ல பிள்ளைகளை உருவாக்குவதில் பெற்றோரது பரஸ்பர ஒத்துழைப்பு அவசியம் என்பதை எடுத்துக் காட்டும் இரண்டு ஹதீஸ்களை தேடி எழுதுவதோடு, அவ்வாறான ஒத்துழைப்பு கிடைக்காமற் போனால் ஏற்படும் பாதிப்புக்களையும் எடுத்துக் காட்டுங்கள்.

குழு-3 குடும்ப வாழ்க்கையில் பிள்ளைகள் பெற்றோருடன் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டிய பணிகளைப் பட்டியற்படுத்தி, அவை பற்றி உங்களது கருத்துக்கைளயும் திரட்டி முன்வையுங்கள்.

குழு-4 குடும்ப வாழ்வில் இஸ்லாமிய சூழல் ஒன்றை ஏற்படுத்த குடும்ப அங்கத்தவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஆலோசித்து எழுதுங்கள்.

**இணைப்பு 4.1.3**

**குர்ஆன், ஸுன்னாவிலிருந்து,**

"தன் பெற்றோருக்கு நன்மை செய்யும் படியாக நாம் மனிதனுக்கு நல்லுபதேசம் செய்திருக்கின்றோம்" (29:08)

"விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் எரிகட்டை மனிதர்களும் கற்களுமாகும்" (66:06)

"நீர் உமது குடும்பத்தினரை தொழுகையைக் கொண்டு ஏவுவீராக" (20:132)

"விசுவாசிகளே! உங்கள் மனைவிகளிலும் உங்கள் சந்ததிகளிலும் நிச்சயமாக உங்களுக்கு விரோதிகளும் இருக்கின்றனர். ஆகவே அவர்களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்" (64:14)

ஒவ்வொரு குழந்தையும் (இஸ்லாம் என்ற) இயற்கையிலேயே பிறக்கின்றது. பெற்றோர்களே அக்குழந்தையை யூதர்களாகவோ, நஸாராக்களாகவோ, மஜூஸிகளாகவோ மாற்றி விடுகிறார்கள். (புஹாரி)

**இரத்த உறவுகளைப் பேணுதல்**

".... இன்னும் அல்லாஹ் அவைகளைக் கொண்டு (தமக்குரிய உரிமைகளை) நீங்கள் (ஒருவருக்கொருவர்) கேட்டுக் கொள்கிறீர்களே, அத்தகையவனையும், மேலும் இரத்தக் கலப்புச் சொந்தங்களை(த் துண்டித்து விடுவதை)யும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்" (4:1)

"உறவினருக்கு அவரின் உரிமையை வழங்குவீராக. மேலும் எழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அவரவர்களுடைய உரிமைகளை வழங்குவீராக" (17:26).

"இரத்த பந்தத்தை துண்டிப்பவன் சுவனம் புகமாட்டான்" (புஹாரி, முஸ்லிம்)

"எவர் தன்னுடைய ரிஸ்க் விசாலமாக்கப்பட வேண்டுமெனவும், ஆயுள் நீளமாக்கப்பட வேண்டுமெனவும் விரும்புகிறாரோ அவர் தனது இரத்த பந்துக்களுடன் இணைந்து வாழட்டும்" (புஹாரி, முஸ்லிம்)

தேர்ச்சி 5.0 : **உழைப்பிலும் வருமானத்திலும் ஹலால், ஹராம் பேணி நம்பிக்கை நாணயத்துடன் நடப்பார்.**

தேர்ச்சி மட்டம் 5.1 : உழைப்பையும் செலவினங்களையும் அனுமதிக்கப்பட்ட வழிகளில் அமைத்துக் 'கொள்வார்.

செயற்பாடு 5.1.1 : **'உழைத்து வாழ்வோம்'.**

நேரம் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடுகள் :

- இணைப்பு 5.1.1.1 இலுள்ள வரலாற்றுச் சம்பவம்
- இணைப்பு 5.1.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- இஸ்லாம் பாடநூல் தரம்-10 (க.வெ.தி. பதிப்பு 2005)
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 5.1.1.1 :

- இணைப்பு 5.1.1.1 இல் உள்ள வரலாற்றுச் சம்பவத்தை தானாக முன்வரும் ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்க வையுங்கள்.
- அச்சம்பவத்தின் ஊடாக நபி (ஸல்) அவர்கள் உழைத்து வாழ்வதற்கு வழங்கிய முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

  - உழைத்து வாழ்வதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.
  - நபிமார்கள் சொந்த உழைப்பிலேயே வாழ்க்கை நடாத்தி முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள்.
  - இஸ்லாம் அனுமதித்த் வழிமுறையில் உழைப்பது இபாதத்தாகும்.
  - ஹலாலான அனைத்து உழைப்புக்களும் கௌரவமானவையாகும்.

(15 நிமிடங்கள்)

படி 5.1.1.2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- இணைப்பு 5.1.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 5.1.1.3

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- "அவன்தான் உங்களுக்குப் பூமியை விரிப்பாக ஆக்கினான். எனவே அதன் பல கோணங்களுக்கும் சென்று அவன் உங்களுக்கு அளித்திருப்பவைகளைப் புசிப்பீர்களாக" (67:18) என குர்ஆன் உழைத்து வாழ்வதைத் தூண்டுகிறது.
- "தன் கையால் உழைத்து உண்பதை விட வேறு எந்தச் சிறந்த உணவையும் எவரும் உண்பதில்லை" (புஹாரி).
- நபி ஆதம் (அலை) விவசாயம், நபி இப்றாஹீம் (அலை) மந்தை மேய்த்தல், தாவூத் (அலை) இரும்பு உருக்கு, ஸகரிய்யா (அலை)-தச்சு ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள்.
- நபி முஹம்மத் (ஸல்) அவர்களும் முன்மாதிரி மிக்க மந்தை மேய்ப்பாளராகவும் வியாபாரியாகவும் வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.
- நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றிய ஸஹாபாக்களும், இமாம்களும் நேர்மையான உழைப்பாளிகளாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.
- ஸஹாபாத் தோழியர் கூட உழைப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.
- உழைக்காமல் பிறரின் உழைப்பில் தங்கி வாழ்வதை இஸ்லாம் வரவேற்பதில்லை.
- உழைப்பில் ஹலாலைப் பேணி ஹராத்தைத் தவிர்ப்பதே முக்கியமான அடிப்படையாகும்.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- உழைத்து வாழ்வதற்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- உழைத்து வாழ்வதன் மகிமையை இனங்கண்டு விளக்குவார்.
- உழைத்து வாழ்வது கௌரவமானது என்பதையும் உழைக்காமல் தங்கி வாழ்வது அவமானமானது என்பதையும் ஏற்றுக் கொள்வார்.
- ஹலாலான உழைப்புக்கான அறிவை வளர்த்துக் கொள்வார்.

**இணைப்பு 5.1.1.1**

ஒரு முறை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அவைக்கு ஒரு அன்ஸாரித் தோழர் வந்தார். அவர் நபியவர்களிடம் உதவி கோரினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "உங்கள் வீட்டில் ஏதேனும் பொருள் இருக்கிறதா? என்று விசாரித்தார்கள். அன்ஸாரித் தோழர், 'இறைத் தூதர் அவர்களே! இரண்டு பொருட்கள்தான் இருக்கின்றன. ஒன்று ஒரு விரிப்பு. அதை விரிப்பாகவும் பயன்படுத்துகிறோம். போர்வையாகவும் பயன்படுத்துகின்றோம். மற்றையது தண்ணீர் பருகும் குவளை" என்றார். அவ்விரண்டையும் என்னிடம் கொண்டு வாருங்கள் என நபியவர்கள் பணித்தார்கள். அந்தத் தோழர் இரு பொருட்களையும் கொண்டு வந்தார். நபி (ஸல்) அவர்கள் அந்த இரு பொருட்களையும் ஏலமிட்டார்கள். இரு திர்ஹம்கள் கிடைத்தன. பின் அவ்விரு திர்ஹம்களையும் அத்தோழரிடம் ஒப்படைத்து "ஒரு திர்ஹத்திற்கு உணவுப் பொருட்களை வாங்கி குடும்பத்திடம் ஒப்படையுங்கள். அடுத்த திர்ஹத்திற்கு ஒரு கோடாரியை வாங்கி வாருங்கள்" என்று கூறினார்கள். கோடரி வாங்கி வந்த பின்னர் நபி (ஸல்) அவர்கள் தம் கைகளால் அதற்கு ஒரு பிடியைப் பொருத்தினார்கள். பின்னர் 'காட்டிற்குச் செல்லுங்கள். விறகை வெட்டி வந்து கடைவீதியில் விற்பனை செய்யுங்கள். பதினைந்து நாட்களின் பின் என்னிடம் வாருங்கள்" என்றார்கள்.

பதினைந்து நாட்கள் உருண்டோடின. அந்தத் தோழர் நபியவர்களின் அவைக்கு வருகை தந்தார். "பத்து திர்ஹம்கள் சேகரித்துள்ளேன்" எனக் கூறினார். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் மிக மகிழ்ந்தார்கள். "உன் உழைப்பினால் சம்பாதித்த இந்தத் தொகை மக்களிடம் உதவி கேட்டுத் திரிவதை விட மேலானது. மக்களிடம் இரப்பது மறுமை நாளன்று உன் முகத்தில் பிச்சையெடுத்த கறையைப் படரச் செய்யும்" என்று விளக்கமளித்தார்கள்.

**இணைப்பு 5.1.1.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"உழைத்து வாழ்வோம்."**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புகள்**

குழு-1 "(ஜும்ஆ) தொழுகை முடிவு பெற்றால் (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள். "நீங்கள் வெற்றியடையும் பொருட்டு அடிக்கடி அல்லாஹ்வை நினைவுகூருங்கள்" (62:10) என்ற ஆயத்தைப் படிக்கும்போது பெற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகளைக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.

குழு-2 கைத்தொழில், வாணிபம், சேவை சார்ந்த ஹலாலான தொழில்களைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு-3 உழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி மாணவர் மன்றத்தில் ஐந்து நிமிட நேரம் பேசுவதற்கான பேச்சு ஒன்றை எழுதுங்கள்.

குழு-4 உழைக்காமல் மஸ்ஜிதில் முடங்கிக் கிடந்த சிலரைப் பார்த்து "உங்களில் எவரும் உழைக்காமல் வருமானத்தைத் தேடி வெளியேறிச் செல்லாமல் இருக்கக் கூடாது.

"அல்லாஹ்வே எனக்கு உணவளி எனப் பிரார்த்தித்தால் மட்டும் போதாது. வானம் தங்கத்தையோ, வெள்ளியையோ (உழைக்காமல்) பொழிவதில்லை" என உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்.

இக்கருத்தை வாசிக்கும் போது உங்களுக்குக் கிடைத்த படிப்பினைகளை வைத்து எதிர்காலத்தில் நீங்கள் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடி எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 5.0 | : | உழைப்பிலும் வருமானத்திலும் ஹலால், ஹராம் பேணி நம்பிக்கை நாணயத்துடன் நடப்பார். |
| தேர்ச்சி மட்டம் 5.1 | : | உழைப்பையும் செலவினங்களையும் அனுமதிக்கப்பட்ட வழிகளில் அமைத்துக் கொள்வார். |
| செயற்பாடு 5.1.2 | : | **'ஹலால் ஹராம் பேணிச் செலவு செய்வோம்'** |
| நேரம் | : | 80 நிமிடங்கள் |
| தரவிருத்தி உள்ளீடுகள் | : | • இணைப்பு 5.1.2.1 இலுள்ள அபூபக்ர் (ரழி) அவர்களின் சம்பவம்<br>• இணைப்பு 5.1.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• இஸ்லாம் பாடநூல் (தரம்-8) க.வெ.தி. பதிப்பு 2000.<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 5.1.2.1** :

- இணைப்பு 5.1.2.1 இல் உள்ள அபூபக்ர் (ரழி) அவர்களின் சம்பவத்தை வாசித்துக் காட்டுங்கள்.
- அதிலுள்ள படிப்பினையை மாணவர்களிடம் விசாரித்தறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - ஹலாலான வழியில் சம்பாதிப்பது போன்றே ஹலாலான வழியிலேயே செலவிட வேண்டும் எனவும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது.
> - வாழ்வில் ஹலாலைப் பேணி, ஹராத்தைத் தவிர்க்க வேண்டும் என்பது இறை கட்டளையாகும்.
> - ஹராமானவை லௌகீக வாழ்வையும் ஆன்மீக வாழ்வையும் பாதிக்கும்.

(10 நிமிடங்கள்)

**படி 5.1.2.2** :

- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(45 நிமிடங்கள்)

படி 5.1.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- செல்வம் அல்லாஹ்வுக்குரியது. அல்லாஹ்விடமிருந்து அதைப் பெற்ற மனிதன் அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கமைய செலவு செய்ய வேண்டும் என்பதே இஸ்லாமிய கோட்பாடாகும்.
- நாம் செலவு செய்யும்போது அது நமக்கோ, பிறருக்கோ, பிற படைப்பினங்களுக்கோ பயன்பட வேண்டும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும்.
- வருமானம் பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவது போன்று செலவினங்கள் பற்றியும் விசாரிக்கப்படும்.
- வீண்விரயம் செய்வது அல்லாஹ்வால் தடுக்கப்பட்ட ஒன்றாகும்.

  "நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்களாக இருக்கின்றனர். ஷைத்தானோ தன் இரட்சகனுக்கு மாறு செய்தவனாக இருக்கிறான்" (17:27)
- செலவு செய்வதில் நடுநிலை பேணுவதன் மூலம் அல்லாஹ் வின் திருப்தி கிடைக்கும். மக்களின் வறுமை அகலும்.
- "அன்றி, அவர்கள் செலவு செய்தால், அளவைக் கடந்து விட மாட்டார்கள். உலோபித் தனமும் செய்ய மாட்டார்கள். இதற்கு மத்திய தரத்தில் இருப்பார்கள். (25:67)
- ஒருவர் தனக்கும் தன் குடும்பத்துக்கும் உறவினர்களுக்கும் மனைவி மக்களுக்கும் நண்பர்களுக்கும் பொதுப் பணிகளுக்கும் இஸ்லாம் காட்டிய வழியில் செலவு செய்வது ஹலாலான செலவினங்களில் அடங்கும்.
- "நீங்கள் நல்லதில் இருந்து எதைச் செலவு செய்த போதிலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்து அதற்குரிய கூலியை உங்களுக்குத் தருவான்" (2:273)
- செல்வத்தை ஆகுமான வழியில் செலவிடாமல் கஞ்சத்தனம் செய்வதை இஸ்லாம் கண்டிக்கிறது.
- "எவர்கள் உலோபித்தனம் செய்து, (மற்ற) மனிதர்களையும் உலோபித்தனம் செய்யும்படி தூண்டுகின்றார்களோ, (அவர்களுக்குக் கடினமான வேதனையுண்டு)" (57:24)
- சமூகத்தை சீரகுலைக்க, தீமைகளைப் பரப்ப, அநீதிகளை ஊக்குவிக்க, பொய் பிரச்சாரங்களை மேற்கொள்ள, குற்றங்களை மறைக்க, குற்றவாளிகளைப் பாதுகாக்க, தன் தேவைகளைப் பிழையான வழியில் சாதித்துக் கொள்ள, முறைகேடாகப் பொருளீட்ட மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அனைத்தும் ஹராமாகும்.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- இஸ்லாமியப் போதனைகளுக்கமைய செலவிடுவதில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளைக் கூறுவார்.
- ஹலாலான முறைகளில் உழைத்து, ஆகுமான வழிகளில் செலவு செய்து வாழ வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஆகுமான செலவினங்களையும் ஆகாத செலவினங்களையும் இனங்காண்பார்.
- செலவு செய்வதில் நடுநிலை பேணுவதைச் சரிகாண்பார்.
- பணம், பொருள் முதலியவற்றைக் கையாள்வதில் ஹலால்-ஹராம் வரையறைகளைப் பேணுவார்.

**இணைப்பு 5.1.2.1**

**வரலாற்றுச் சம்பவம்**

ஒருமுறை அபூபக்ர் (ரழி) அவர்கள் கடும் பசியோடு காணப்பட்டார்கள். அப்பொழுது அவரது பணியாட்களுள் ஒருவர் பால் கிண்ணமொன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். அதனைப் பருகிப் பசியாறிய அபூபக்ர் (ரழி) அவர்கள், தன் பணியாளனை நோக்கி, இந்தப் பால் கிண்ணம் எங்கிருந்து கிடைத்ததெனக் கேட்டார். அதற்கு அவர் தான் ஜாஹிலிய்யத்தில் வாழ்ந்த கால கட்டத்தில் ஒரு காட்டரபி என்னிடம் சோதிடம் கேட்டார். அப்போது நான் கூறியது இப்போது நிறைவேறிவிட்டது. மகிழ்ச்சியடைந்த அவர் அதற்கு நன்றி சொல்லும் வகையில் இந்தப் பால் கிண்ணத்தை எனக்குத் தந்தார் எனப் பதிலளித்தார்.

ஹராமான முறையில் கிடைத்த பாலை நான் குடித்துவிட்டேனே எனக் கைசேதப்பட்ட அபூபக்ர் (ரழி) அவர்கள் தனது விரல்களை வாயிலிட்டு குடித்த பாலை வாந்தியெடுத்து விட்டார்.

**இணைப்பு 5.1.2.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"ஹலால் ஹராம் பேணிச் செலவு செய்வோம்".**

- உங்களது குழுவுக்கு வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புகள்**

குழு-1 பின்வரும் செயற்பாடுகளில் ஹராமானவற்றையும் ஹலாலானவற்றையும் இனம் பிரித்துக் காட்டுங்கள்.

(a) அதிட்டச் சீட்டு வாங்குதல்
(b) பத்திரிகை வாங்குதல்
(c) சிறுபிள்ளைகளுக்காக விளையாட்டுப் பொருள்கள் வாங்குதல்
(d) சினமா பார்ப்பதற்காகச் செலவிடுதல்
(e) பெருநாள் தினங்களில் விசேட உணவிற்காகச் செலவு செய்தல்
(f) இலஞ்சம் கொடுத்தல்
(g) ஆபாசமான இறுவட்டுக்கள், ஒலிநாடாக்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாங்குதல்
(h) அன்பளிப்புக்களையும் பரிசுப் பொருட்களையும் வாங்குதல்
(i) பிறந்த நாள் கொண்டாடுதல்
(j) பிறர் பொருளை அனுமதியின்றிப் பயன்படுத்தல்.

குழு-2 பின்வரும் சம்பவத்தை வாசித்து, உமது உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளைப் பட்டியல்படுத்தி எழுதுங்கள்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் நற்பண்பு மிக்கவர்; நேர்மையானவர்; இறையச்சம் நிறைந்தவர்; ஹராத்திலிருந்து தவிர்ந்து வாழ்ந்தவர்; ஹலாலை நேசித்தவர்; இடாம்பீகத்தை வெறுத்தவர். எனினும் அவர் அரச பரம்பரையைச் சேர்ந்தவர். தாம் கலீபாவாகப் பதவியேற்றதும் தமது பரம்பரையினரால் அனுமதிக்கப்படாத ஹராமான வழியில் திரட்டப்பட்டிருந்த செல்வங்களையெல்லாம் பைதுல்மாலுக்கு கையளித்தார்.

அவரது மனைவி பாத்திமாவும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். வண்ண நகைகளை வைத்திருந்தவர். அவை பெறுமதி மிக்கவை. கண்களுக்குக் கவர்ச்சியானவை. ஆனால் அவை அனைத்தும் பொது நிதியிலிருந்து அவரது பரம்பரையினர் தேடிக் கொடுத்தவை. ஹராமான வழியில் வந்தவை.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் தம் மனைவியிடம் சென்று உண்மையை விளக்கினார். அதைக் கேட்ட அவர் அனைத்து நகைகளையும் முழு மனதோடு திருப்பிக் கொடுத்தார். அல்லாஹ்வின் அன்பே எனக்குப் போதுமானது என்றார்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் சீர்திருத்தங்களை அவரது குடும்பம் விரும்பவில்லை. அவர் பதவியில் இருப்பது தமது நலன்களுக்கு ஆபத்து எனக் கண்டு அவரைத் தீர்த்துக் கட்ட சதித் திட்டம் தீட்டினர். அவரது மைத்துனர் ஒருவர் விஷம் கலந்த உணவைக் கொடுத்தார். அவரது உயிர் பிரிந்து விட்டது.

உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் மரணத்தின் பின் மைத்துனர் சுலைமான் பைதுல்மாலில் இருந்த நகைகளை எல்லாம் எடுத்து வந்து சகோதரியிடம் கொடுத்தார். அதற்கு அவரோ மரணித்த "என் கணவனை நான் மதிக்கிறேன். அவர் சென்ற பாதை சரியானது. ஹராமான வழியில் வந்தவற்றை எந்த வற்புறுத்தலுமின்றி மிக விருப்புடனே நான் கழற்றி பைதுல்மாலுக்குக் கொடுத்துவிட்டேன். இவை பொதுமக்களின் சொத்து. இதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை. இவை எனக்குத் தேவையுமில்லை" என தன் சகோதரனை நோக்கி கோபாவேஷத்தோடு சொன்னார்.

குழு-3 செலவு செய்வதில் கவனிக்க வேண்டிய விடயங்களை கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-4 வீண்விரயமும் கஞ்சத்தனமும் கூடாதவை என்பதற்கான நியாயங்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-5 பாடசாலை வாழ்வில் ஹலாலைப் பேணி ஹராத்தைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் ஐந்தினை இனங்கண்டு எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 6.0 | : | **வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் கண்ணோட்டத்தில் அணுகுவார்.** |
| தேர்ச்சி மட்டம் | 6.1 | : | அல்குர்ஆனின் முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார். |
| செயற்பாடு | 6.1.1 | : | **'அல்குர்ஆனின் சிறப்பறிந்து ஓதுவோம்.'** |
| நேரம் | | : | 80 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இணைப்பு 6.1.1 இலுள்ள வரலாற்றுச் சம்பவம்
- இணைப்பு 6.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- அல்குர்ஆன் தர்ஜமா (அப்துல் ஹமீத் பாகவி)
- இஸ்லாம் பாடநூல் தரம்-8 (பதிப்பு 2000) க.வெ.தி.
- இஸ்லாமிய அழைப்பாளன் எவ்வாறு இருக்க வேண்டும் (யூசுப் அல் கர்ளாவி)
- அல்குர்ஆனின் சிறப்பு (மௌலானா ஸகரிய்யா ஸாஹிப்)
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 6.1.1 :**

- இணைப்பு 6.1.1 இல் உள்ள வரலாற்றுச் சம்பவத்தை தானாக முன்வரும் ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்க வையுங்கள்.
- அல்குர்ஆன் தொடர்பான மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - அல்லாஹ்வினால் முழு மனித சமுதாயத்துக்குமாக இறுதியாக வழங்கப்பட்ட பொது மறையே அல்குர்ஆனாகும்.
  - அல்குர்ஆனைப் பார்ப்பது, ஓதுவது, செவிமடுப்பது, அதனை விளங்குவது ஆகிய அனைத்தும் நன்மைகளைப் பெற்றுத் தரும் வணக்கங்களாகும்.
  - அல்குர்ஆனுடனான நெருங்கிய உறவு ஒருவரது அந்தஸ்தை அல்லாஹ்விடம் உயர்த்தி வைக்கும்.

(15 நிமிடங்கள்)

**படி 6.1.2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- இணைப்பு 6.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 6.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய மிகப் பெரிய அற்புதம் அல்-குர்ஆனாகும்.
- அல்-குர்ஆன் எல்லாக் காலங்களுக்கும் வாழ்க்கையின் சகல துறைகளுக்குமான போதனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.
- மனித வாழ்க்கைக்குத் தேவையான சகலவற்றையும் அது எடுத்துக் காட்டுகின்றது.
- அல்குர்ஆன் காலத்தால் அழியாததாகும்.
- அல்குர்ஆன் சந்தேகமற்றதாகும்.
- அல்-குர்ஆன் அகிலத்தாருக்கான எல்லாப் போதனைகளையும் வழங்குகின்றது.
- அல்-குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும்.
- அல்-குர்ஆன் ஓதுவதால் அதிக நன்மை கிடைக்கும்.
- "மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. (உங்கள்) இதயங்களி லுள்ள நோய்களுக்கு அது ஒரு சஞ்சீவியாகும். மேலும் (அது) விசுவாசங் கொண்டவர்களுக்கு நேர்வழி காட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது" (10:57)
- நபி (ஸல்) அவர்கள் குர்ஆனைப் பற்றிக் கூறும்போது "நிச்சயமாக இந்த அல்-குர்ஆன் அல்லாஹ்வின் உறுதிமிக்க கயிறு; வழிகாட்டும் பேரொளி; பயன்மிகு சஞ்சீவி; அதனைப் பற்றிப் பிடிப்போருக்கு அது பயனளிக்கும்; அதைப் பின்தொடர்வோருக்கு வெற்றியளிக்கும்; கோணலை அது சீராக்கும். தவறுகளைச் சரிப்படுத்தும்; அதன் அற்புதங்கள் முடிந்துவிடப் போவதில்லை; திரும்பத் திரும்ப ஓதுவதால் அது பழைமையடைவதுமில்லை; எனவே அதனை நீங்கள் ஓதி வாருங்கள். அதன் ஒவ்வொரு எழுத்துக்கும் உங்களுக்குப் பத்து நன்மை கிடைக்கும். (ஹாகிம்)
- அல்குர்ஆனை ஓதுவதன் மூலம் பல நன்மைகள் கிடைக்கின் றன. "குர்ஆனை உடையவர்களே! நீங்கள் அல்-குர்ஆனைத் தலையணையாக ஆக்கிக் கொள்ள வேண்டாம். இரவிலும் பகலிலும் அதனை உரிய முறைப்படி ஓதுங்கள், அதனைப் பரப்புங்கள், அதனை இனிய குரலில் ஓதுங்கள், அதன் கருத்துக்களைச் சிந்தித்து ஆராய்ச்சி செய்யுங்கள், அப்போது நீங்கள் வெற்றியடைவீர்கள். அதனுடைய நன்மைகளை (இவ்வுலகில்) பெற அவசரப்படாதீர்கள். நிச்சயமாக அதற்குரிய கூலி (மறுமையில்) உண்டு" (பைஹகி).

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- அல்-குர்ஆனின் சிறப்புக்களை மேற்கோள்களுடன் விளக்குவார்.
- அல்-குர்ஆன் மிகப் பெரிய அற்புதம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- அல்குர்ஆனை ஓதும்போது அனுசரிக்க வேண்டியவற்றை விளக்குவார்.
- அல்-குர்ஆனின் சிறப்பை அறிந்து ஓதி வருவார்.
- அல்-குர்ஆனின் சிறப்பை பிறர் அறிந்து கற்க வழிகாட்டுவார்.

இணைப்பு 6.1.1

**கவிஞனை மடக்கிய அல்-குர்ஆன் ஆயத்துக்கள்**

நபி (ஸல்) அவர்கள் ஓதிக் காண்பிக்கும் அல்-குர்ஆன் வசனங்களை மக்கள் கேட்க ஆரம்பித்தனர். இதனைத் தடுப்பதற்கு முன்வந்த லபீத் பின் ரபீஆ என்ற புகழ் பெற்ற கவிஞர் க.்.பாவின் சுவரில் சில கவிதையடிகளை எழுதித் தொங்கவிட்டார். இதைக் கண்ணுற்ற குறைஷியர் அக மகிழ்ந்தனர். ஒரு முஸ்லிம் இதனை அவதானித்தபோது லபீதின் கவிதைக்குப் பக்கத்தில் அல்-குர்ஆன் வசனங்கள் சிறவற்றை எழுதித் தொங்கவிட்டார். சடுதியாக அங்கு வந்த லபீத் அவ்வசனங்களை வாசித்தபோது "சத்தியமாக இவை மனிதனால் ஆக்கப்பட்ட வார்த்தைகள் அல்ல" எனப் பாராட்டி "இதற்குச் சொந்தமான அல்லாஹ்வுக்கு நான் முற்றிலும் அடிபணிகிறேன்" எனச் சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

இணைப்பு 6.1.2

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"அல்-குர்ஆனின் சிறப்பறிந்து ஓதுவோம்".**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- உங்களது குழுவுக்குரிய குறிப்பிடப்பட்ட நூலின் பிரதியை பெற்று குறித்த பகுதியை வாசித்து அதனூடாகத் தகவல்களைப் பெற முயற்சியுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 குர்ஆனின் சிறப்புக்களைக் கூறும் இரண்டு அல்-குர்ஆன் வசனங்களையும், இரண்டு ஹதீஸ்களையும் எழுதுங்கள்.

குழு-2 அல்குர்ஆனை நாம் ஏன் ஓத வேண்டும் என்பதற்காக நியாயங்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-3 அல்-குர்ஆனின் சிறப்பை எடுத்துக் கூறி முஸ்லிம் அல்லாத நண்பன் ஒருவனுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 6.0 | : | **வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் கண்ணோட்டத்தில் அணுகுவார்.** |
| தேர்ச்சி மட்டம் | 6.2 | : | அல்குர்ஆனின் போதனைகளை விளங்கிப் பின்பற்றுவார். |
| செயற்பாடு | 6.2.1 | : | **'ஸூரதுல் அஸ்ரின் போதனைகளை அறிந்து நடப்போம்'.** |
| நேரம் | | : | 40 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | | : | • இணைப்பு 6.2.1.1 இலுள்ள அல்குர்ஆன் அத்தியாயமும் (அல்-அஸ்ர்) அதன் பொருளும். <br> • இணைப்பு 6.2.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம். <br> • அல்குர்ஆன் தர்ஜமா (அப்துல் ஹமீத் பாகவி) <br> • டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி **6.2.1.1** :

- இணைப்பு 6.2.1.1 இல் உள்ள ஸூறாவை அழகாக ஓதும் ஒரு மாணவனைக் கொண்டு ஓத வைத்து அல்லது ஒலிநாடா மூலம் ஓத வைத்துச் செவிமடுக்க வையுங்கள்.
- இந்த ஸூறா எதைப் பற்றிக் கூறுகிறது என வினவிக் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • ஸூறதுல் அஸ்ர் அல்-குர்ஆனின் மிகச் சிறிய ஸூறாக்களில் ஒன்றாகும். <br> • இது நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கைக் கட்டத்தில் அருளப்பட்டது. <br> • இது நான்கு போதனைகளை முன்வைக்கிறது. <br> • அப்போதனைகள் முழு வாழ்க்கைக்கும் பயனளிப்பவை. |

(05 நிமிடங்கள்)

படி **6.1.1.2** :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், நிறப் பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

படி 6.1.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - ஸூறதுல் அஸ்ர் "காலத்தின் மீது சத்தியமாக" என்று ஆரம்பிக்கின்றது.
> - சத்தியம் கூறுவதன் மூலம் ஸூறா கூறும் கருத்து முக்கியம் பெறுகிறது.
> - ஸூறா முன்வைக்கும் நான்கு போதனைகள்
>   - ஈமான் கொள்ளல்
>   - நற்செயல் புரிதல்
>   - சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தல்.
>   - சத்தியத்தைப் போதிப்பதால் ஏற்படும் சிரமங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு உபதேசம் செய்தல்.
> - இந்த நான்கு போதனைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை.
> - "மக்கள் இந்த அத்தியாயத்தைச் சிந்தித்துப் பார்த்தால், அதுவே அவர்களுக்கு நேர்வழி காட்டப் போதுமானதாகும்" என இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.
> - இந்த ஸூறாவில் வந்துள்ள 'அமலுஸ் ஸாலிஹா' என்ற சொல் அல்லாஹ்வுக்காக என்ற எண்ணத்துடன் செய்யப் படும் அனைத்து நல்ல காரியங்களையும் குறிக்கும்.
> - ஈமானைப் புறக்கணித்த மனிதனின் நற்செயல்கள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.
> - அல்-குர்ஆன் கூறுகிறது "எவர்கள் நிராகரிப்பவர்களாகி விட்டார்களோ அவர்களுடைய செயல்கள், பாலைவனத்தில் தோன்றும் கானலைப் போல் இருக்கின்றன. தாகித்தவன் அதனைத் தண்ணீர் என எண்ணிக் கொண்டு அதன் சமீபமாக வரும் பொழுது ஒன்றையுமே அவன் காண்பதில்லை" (24:39).
> - சத்தியத்தை போதிக்கும்போது சிரமங்கள் தோன்றும். அப்போது பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
> - இவ்வத்தியாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த நபித்தோழர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால் ஒருவர் மற்றவருக்கு இந்த ஸூறாவை ஓதிக் காட்டாமல் பிரிந்து செல்ல மாட்டார்கள்.

(15 நிமிடங்கள்)

கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- ஸூறதுல் அஸ்ரின் பதவிளக்கத்தைக் கூறுவார்.
- எமது செயல்கள் ஈமானுடன் இணைய வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- தன் வாழ்வில் பொறுமையைக் கடைப்பிடித்து நடப்பார்.
- ஸூறதுல் அஸ்ரின் போதனைகளை வாழ்வில் கடைப்பிடிப்பார்.
- ஸூறதுல் அஸ்ரின் போதனைகளை மற்றவர்களுக்கும் எடுத்து விளக்குவார்.

**இணைப்பு 6.2.1.1**

ஸூறதுல் அஸ்ர்

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

وَالْعَصْرِ ﴿١﴾ إِنَّ الْإِنسَانَ لَفِي خُسْرٍ ﴿٢﴾ إِلَّا الَّذِينَ آمَنُوا
وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ﴿٣﴾

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஓதுகின்றேன்.

காலத்தின் மீது சத்தியமாக.

மனிதன் நஷ்டத்திலேயே இருக்கிறான்.

ஈமான் கொண்டவர்கள், நல்லமல் புரிந்தவர்கள், சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து கொண்டவர்கள், பொறுமையை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து கொண்டவர்கள் ஆகியோரைத் தவிர.

**இணைப்பு 6.2.1.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"ஸூறதுல் அஸ்ரின் போதனைகளை அறிந்து நடப்போம்"**

- உங்களது குழுவுக்கு வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- எழுது கருவிகளையும் நூல்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புக்கள்**

குழு-1 பின்வரும் சொற்களின் பொருளை எழுதுங்கள்.

اَلرَّحْمٰنْ – اَلرَّحِيْم – العَصْرُ – الإِنْسَانُ – الحَقُّ-الصَّبْرُ – خُسْرٌ – عَمِلُوا الصَّالِحَاتِ

குழு-2 ஸூறதுல் அஸ்ரின் முதலிரண்டு ஆயத்துக்களின் பொருளை எழுதுங்கள்.

குழு-3 ஸூறதுல் அஸ்ரின் கடைசி ஆயத்தின் பொருளை எழுதுங்கள்.

குழு-4 ஸூறதுல் அஸ்ர் தரும் நான்கு போதனைகளையும் எடுத்துக் காட்டுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 6.0 | : | **வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் கண்ணோட்டத்தில் அணுகுவார்.** |
| தேர்ச்சி மட்டம் | 6.2 | : | அல்குர்ஆனின் போதனைகளை விளங்கிப் பின்பற்றுவார். |
| செயற்பாடு | 6.2.2 | : | **'ஸூறா அந்நஸ்ரின் போதனைகளைக் கடைப்பிடிப்போம்.'** |
| நேரம் | | : | 40 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | | : | • இணைப்பு 6.2.2.1 இலுள்ள ஸூறா அந்நஸ்ரும் அதன் மொழிபெயர்ப்பும்<br>• இணைப்பு 6.2.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• அல்குர்ஆன் தர்ஜமா (அப்துல் ஹமீத் பாகவி)<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 6.2.2.1 :

- இணைப்பு 6.2.2.1 இல் உள்ள ஸூறா அந்நஸ்ரை இனிமையாக ஓதக்கூடிய ஒரு மாணவனைக் கொண்டு ஓத வையுங்கள்.
- அதன் கருத்தை மையப்படுத்திக் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - இது அல்குர்ஆனின் சிறிய ஸூறாக்களில் ஒன்று.
> - இது நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கைப் பகுதியில் அருளப்பட்டது.
> - இது நபி (ஸல்) அவர்களின் இஸ்லாமிய போதனை வெற்றி கண்டதைக் சுட்டிக் காட்டுகின்றது.
> - நபி (ஸல்) அவர்களின் வபாத் நெருங்கிவிட்டதை இந்த ஸூறா முன்னறிவிப்புச் செய்கிறது.

(05 நிமிடங்கள்)

படி 6.2.2.2 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 6.2.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

படி 6.2.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- ஸூறா அந்நஸ்ர் ஹிஜ்ரி 10இல் துல்ஹஜ் மாதம் அய்யாமுத் தஷ்ரீக் உடைய ஒரு நாளில் மினாவில் இறங்கியது.
- இந்த ஸூறா 'ஸூறதுத் தவ்தீ·'. (பிரியாவிடைக்குரிய அத்தியாயம்) என்றும் அழைக்கப்படுகிறது.
- இதில் இடம்பெற்றுள்ள வெற்றி என்ற சொல் மக்கா வெற்றியைக் குறிக்கிறது.
- முஸ்லிம்கள் பெற்ற வெற்றி அல்லாஹ்வின் புறத்தில் இருந்து வந்தது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.
- அல்லாஹ்வைத் துதிக்குமாறும் அவனிடம் பாவ மன்னிப்புத் தேடுமாறும் மனிதர்களை ஏவுகிறது.
- மக்கள் மனம் திருந்தி அல்லாஹ்வின் தீனில் (இஸ்லாத்தில் நுழைவதே உண்மையான வெற்றி என்பதை இந்த ஸூறா எடுத்துக் கூறுகின்றது.
- இந்த ஸூறா இறங்கிய பின் நபி (ஸல்) அவர்கள்

  سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ أَسْتَغْفِرُ اللهَ وَأَتُوبُ إِلَيْهِ

  "அல்லாஹ்வின் புகழ் கொண்டு அவனைத் துதிக்கிறேன். அவனிடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். அவனிடமே மீள்கிறேன்" என்ற பிரார்த்தனையை அதிகமாக ஓதி வந்தார்கள்.
- மனிதனுக்கு வெற்றி கிட்டும்போது பெருமை கொள்ளாமல் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்; பாவமன்னிப்புக் கோர வேண்டும் என்பதை இந்த ஸூறா எடுத்துக் கூறுகின்றது.
- நபியவர்களின் முன்மாதிரியும் அதுவேயாகும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ஸூறா அந்-நஸ்ரின் பொருளை விளக்குவார்.
- ஸூறா அந்-நஸ்ர் இறங்கிய சந்தர்ப்ப சூழ்நிலையைத் தொகுத்துக் கூறுவார்.
- வெற்றியைத் தொடர்ந்து அடக்கமாக நடக்க வேண்டும்; அல்லாஹ்வுக்கு நன்றி கூறவேண்டும்; பாவமன்னிப்பில் ஈடுபட வேண்டும் என்பதை சரி கண்டு நடப்பார்.
- எப்போதும் அடக்கமாகவும் இஸ்தி·பார் செய்பவராகவும் இருப்பார்.
- அடக்கமாகவும் இஸ்தி·பார் செய்பவராகவும் இருக்குமாறு மற்றவர்களையும் தூண்டுவார்.

இணைப்பு 6.2.2.1

ஸூறா அந்-நஸ்ர்

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

إِذَا جَآءَ نَصْرُ ٱللَّهِ وَٱلْفَتْحُ ﴿١﴾ وَرَأَيْتَ ٱلنَّاسَ
يَدْخُلُونَ فِى دِينِ ٱللَّهِ أَفْوَاجًا ﴿٢﴾ فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ
وَٱسْتَغْفِرْهُ إِنَّهُۥ كَانَ تَوَّابًا ﴿٣﴾

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஓதுகிறேன்.

1 - 3 அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் வந்துவிடும்போது, மேலும் (நபியே) அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக நுழைவதை நீர் காணும்போது நீர் உம் இறைவனைப் புகழ்ந்து கொண்டு அவனைத் துதிப்பீராக! மேலும் அவனிடம் பாவமன்னிப்புக் கோருவீராக! நிச்சயமாக அவன், பாவமன்னிப்புக் கோரிக்கையை பெரிதும் ஏற்பவனாக இருக்கிறான்.

இணைப்பு 6.2.2.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"ஸூறா அந்நஸ்ரின் போதனைகளைக் கடைபிடிப்போம்."**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

**தலைப்புக்கள்**

குழு-1 ஸூறா அந்நஸ்ர் எவ்வாறான சூழ்நிலையில் அருளப்பட்டது?

குழு-2 ஸூறா அந்நஸ்ர் கூறும் முக்கியமான போதனைகள் எவை?

குழு-3 பின்வரும் சொற்களுக்கு தர்ஜமதுல் குர்ஆன் துணையுடன் பொருள் எழுதுங்கள்.

إِذَا جَاءَ – نَصْرُ اللهِ – يَدْخُلُوْنَ – دِيْنِ اللهِ – بِحَمْدِ رَبِّكَ – كَانَ تَوَّابًا

இணைப்பு 6.2.2.3

| | | | |
|---|---|---|---|
| வந்தால் - | إِذَا جَاءَ | கூட்டம் கூட்டமாக - | أَفْوَاجًا |
| அல்லாஹ்வின் உதவி - | نَصْرُ اللهِ | எனவே துதிப்பீராக - | فَسَبِّحْ |
| வெற்றியும் - | وَالْفَتْحُ | புகழ் கூறி - | بِحَمْدِ |
| காண்பீர் - | وَرَأَيْتَ | உன் இரட்சகனின் - | رَبِّكَ |
| மனிதர்களை - | النَّاسَ | அவனிடம் பாவ மன்னிப்புக் கோருவீராக - | وَاسْتَغْفِرْهُ |
| நுழைவர் - | يَدْخُلُوْنَ | நிச்சயமாக அவன் - | إِنَّهُ |
| அல்லாஹ்வின் மார்க்கத்தில் - | فِيْ دِيْنِ اللهِ | மன்னிப்பவனாக உள்ளான் - | كَانَ تَوَّابًا |

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **6.0** | : | **வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் கண்ணோட்டத்தில் அணுகுவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **6.3** | : | ஸுன்னாவின் முக்கியத்துவத்தை விளங்கி நடைமுறைப்படுத்துவார். |
| செயற்பாடு | 6.3.1 | : | **'ஸுன்னாவின் முக்கியத்துவத்தை, விளங்கி நடைமுறைப்படுத்துவோம்.'** |
| நேரம் | | : | 80 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | | : | • இணைப்பு 6.3.1.1 இலுள்ள உரையாடல்<br>• இணைப்பு 6.3.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• இஸ்லாம் பாடநூல் - தரம்-7 (பதிப்பு 2000) கல்வி வெளியீட்டுத் திணைக்களம்<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 6.3.1.1 :

- இணைப்பு 6.3.1.1 இல் உள்ள ஹதீஸை தானாக முன்வரும் ஒரு மாணவனிடம் கொடுத்து வாசிக்கச் செய்யுங்கள்.
- இந்த ஹதீஸிலிருந்து எதனை மாணவர்கள் புரிந்து கொண்டார்கள் என்பதனை அறிந்து கொள்ளும் வகையில் கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - ஸுன்னா என்பது நபி (ஸல்) அவர்களது வழிமுறையைக் குறிக்கின்றது.
> - அல்குர்ஆனுக்கு அடுத்த சட்ட மூலாதாரமாக ஸுன்னா அமைகிறது.
> - ஸுன்னாவின் முக்கியத்துவத்தை அல்குர்ஆனும் ஸுன்னாவும் எடுத்துக் கூறுகின்றன.
> - ஸுன்னாவை அறிவதிலும் அதனைப் பின்பற்றுவதிலும் பாதுகாப்பதிலும் ஏனையோருக்கு கற்றுக் கொடுப்பதிலும் ஸஹாபாக்கள், இமாம்கள் காட்டிய ஈடுபாடும் ஆர்வமும் ஸுன்னாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன.
> - வாழ்வின் எல்லாத் துறைகளுக்குமான முன்மாதிரிகளும் விதிமுறைகளும் ஸுன்னாவில் காணப்படுகின்றன.

(15 நிமிடங்கள்)

படி 6.3.1.2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 6.3.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- நபி (ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றையே அஸ்ஸுன்னா, அல்-ஹதீஸ் எனும் சொற்கள் குறிக்கின்றன.
- ஸுன்னா (அல்-ஹதீஸ்) அல்குர்ஆனுக்கு விளக்கமாகவே கொள்ளப்படுகின்றது.

  "(நபியே) அவர்கள் எந்த விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்களோ அதனை நீர் தெளிவாக்குவதற்காகவும் விசுவாசமுடைய கூட்டத்தினருக்கு (இது) நேர்வழியாகவும் அருளாகவும் இருப்பதற்கேயன்றி இவ்வேதத்தை உம்மீது நாம் இறக்கி வைக்கவில்லை." (16:64)
- ஸுன்னாவின் முக்கியத்துவத்தை அல்-குர்ஆன் வலியுறுத்துகின்றது.

  "நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது" (33:21)
- ஸுன்னாவின் முக்கியத்துவத்தை ஸுன்னாவும் வலியுறுத்துகின்றது.

  "நான் உங்களிடத்தில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் பின்பற்றி ஒழுகும் காலமெல்லாம் வழி தவற மாட்டீர்கள். அவை அல்-குர்ஆனும் எனது வழிமுறைகளுமாகும்."
- ஒரு முஸ்லிம் அல்குர்ஆனைப் புரிந்து கொள்ள ஸுன்னா அவசியமாகின்றது.
- குர்ஆன் தொழும்படி ஏவுகிறது; ஸுன்னா தொழும் முறையைக் காட்டித் தருகிறது.
- ஸுன்னாவை கற்கவும் பாதுகாக்கவும், பின்பற்றவும், ஏனையோருக்கு கற்றுக் கொடுக்கவும் ஸஹாபாக்கள் காட்டிய ஆர்வத்திற்கு திண்ணைத் தோழர்கள் சிறந்த ஆதாரமாக உள்ளனர்.
- ஹதீஸுடைய இமாம்கள் ஹதீஸ்களை திரட்டி நூலுருவில் தொகுத்து வழங்குவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் ஸுன்னாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன.
- இஸ்லாமிய வாழ்க்கை முறைக்கான செயல்வடிவத்தை ஸுன்னா காட்டித் தருகின்றது.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ஸுன்னாவை அறிந்து அதிலிருந்து வாழ்வுக்குரிய முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார்.
- ஸுன்னாவை விரும்பி வாழ்வில் பின்பற்றுவது அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஸுன்னாவின் முக்கியத்துவத்தை ஏனையோருக்கு எடுத்துக் கூறுவார்.
- அல்-குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் இடையிலான தொடர்களை எடுத்துக் காட்டுவார்.

**இணைப்பு 6.3.1.1**

பாஸில் : மாமா, நாங்கள் ஐந்து நேரம் தொழுகிறோமே, இதைப் பற்றி அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதா?

மாமா : ஏன் அப்படிக் கேட்கிறாய் பாஸில்?

பாஸில் : அல்குர்ஆனில் எல்லாம் இருக்கிறது எனக் கூறுவார்களே.

மாமா : பகலின் இரு முனைகளிலும் இரவின் நிலைகளிலும் நீங்கள் தொழுது வாருங்கள். (11:114)

தொழுகையையும் மத்திய தொழுகையையும் பேணிக் கொள்ளுங்கள் (2:238) என்றவாறு பல இடங்களில் தொழுகை பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

பாஸில் : ஐவேளைகளையும் குறிப்பிடும் ஆயத்துக்கள் அல்குர்ஆனில் இல்லையா?

மாமா : பாஸில்! சற்று விளக்கமாகக் கூறுகிறேன் கேள். இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அல்குர்ஆன் மட்டும் போதாது. அல்குர்ஆன், போதனைகளை வழங்குகிறது. நபி (ஸல்) அவர்கள், அதனை நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள். அந்த நடைமுறைகளை ஸுன்னா என்ற பெயரால் வழங்குகிறோம். அல்குர்ஆன் தொழும்படி கூறியது. நபி (ஸல்) அவர்கள் தொழுது காட்டினார்கள். தொழுகை விதியாக்கப்பட்டபோது ஜிப்ரீல் (அலை) அவர்கள் தொழ வேண்டிய ஐந்து நேரங்களிலும் சமூகமளித்தார்கள். தொழும் முறையை நபி (ஸல்) அவர்களுக்குக் காட்டிக் கொடுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுக்கு அதனைக் கற்றுக் கொடுத்ததோடு நடைமுறைப்படுத்தியும் காட்டினார்கள். வெளியிலிருந்து வந்த பலர் தொழுகை பற்றி கேட்டபோது ஐந்து நேரம் தொழ வேண்டும் என்பதை சொல்லிக் காட்டினார்கள். ஆகவே அல்குர்ஆனுக்கு விளக்கம் கொடுப்பதற்காகவே நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவர் கொண்டு வந்ததை ஏற்றுக் கொள்ளுமாறு குர்ஆன் கட்டளையிடுகிறது.

பாஸில் : ஜஸாகல்லாஹு கைரா. மாமா நீங்கள் நல்லதொரு பாடத்தைக் கற்றுத் தந்தீர்கள்.

**இணைப்பு 6.3.1.2**

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"ஸுன்னாவின் முக்கியத்துவத்தை விளங்கி வாழ்வில் நடைமுறைப்படுத்துவோம்."**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- குறிக்கப்பட்ட பாட நூல்களிலுள்ள தலைப்புக்களை வாசித்து அதனூடாக தகவல்களைக் கண்டறிய முயற்சியுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 உணவு உண்ணும்போது பின்பற்ற வேண்டிய நபி (ஸல்) அவர்களின் ஸுன்னத்துக்களைக் குறிப்பிடுங்கள்.

குழு-2 மஸ்ஜிதில் பின்பற்ற வேண்டிய நபி (ஸல்) அவர்களின் ஸுன்னத்துக்களை எழுதுங்கள்.

குழு-3 நாளாந்தம் வாழ்வில் பின்பற்ற வேண்டிய முக்கியமான ஸுன்னத்துக்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-4 திருமண வீட்டில் பின்பற்ற வேண்டிய முக்கியமான ஸுன்னத்துக்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 6.0** | : | **வாழ்க்கையின் அனைத்து விவகாரங்களையும் ஷரீஆவின் கண்ணோட்டத்தில் அணுகுவார்.** |
| **தேர்ச்சி மட்டம் 6.3** | : | ஸுன்னாவின் முக்கியத்துவத்தை விளங்கி நடைமுறைப்படுத்துவார். |
| **செயற்பாடு 6.3.2** | : | **'ஹதீஸை கற்று அதன்படி செயலாற்றுவோம்.'** |
| **நேரம்** | : | 40 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • இணைப்பு 6.3.2.1 இலுள்ள நிகழ்வு<br>• இணைப்பு 6.3.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• இணைப்பு 6.3.2.3 இலுள்ள ஹதீஸ்கள்<br>• நூல்: முன்மாதிரி முஸ்லிம் - முஹம்மத் அலி அல்-ஹாஷிமி<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

**படி 6.3.2.1** :

- இணைப்பு 6.3.2.1 இல் உள்ள சம்பவத்தை நன்கு வாசிக்கத் தெரிந்த ஒரு மாணவனை அழைத்து வகுப்பில் வாசிக்க விடுங்கள்.
- அது பற்றி வகுப்பில் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - ஹதீஸ்கள் தனிநபர் வாழ்வையும் சமூக வாழ்வையும் நெறிப்படுத்துகின்றன.
> - ஹதீஸ்கள் கூட்டு வாழ்வை வலியுறுத்துகின்றன.
> - தனிநபர், சமூகத்தில் வாழும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை ஹதீஸ்கள் விளக்குகின்றன.
> - ஹதீஸ்கள் சமூகப் பணிக்கு ஊக்குவிக்கின்றன.

(05 நிமிடங்கள்)

**படி 6.3.2.2** :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் 6.3.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நிறப் பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

படி 6.3.2.3

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- மனிதன் இயல்பிலேயே சேர்ந்து வாழும் தன்மை உடையவன். சேர்ந்து வாழும்போது ஒவ்வொருவரும் மற்றவருக்கு தீங்கில்லாமலும் மற்றவருக்கு உதவியாகவும் வாழ வேண்டும்.
- படைப்புக்கள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பமாகும். மனித குலத்துக்கு அதிக நன்மை செய்பவர்தான் அல்லாஹ்விடம் அதிக அன்புக்குரியவர் (அல் ஜாமிஉஸ் ஸகீர்) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.
- உனது சகோதரனின் முகத்தைப் பார்த்துப் புன்னகைப்பதும் ஸதகாவாகும். பாதையிலிருக்கும் அசுத்தம், முள், கல் போன்றவற்றை அகற்றுவதும் ஸதகாவாகும். உன்னுடைய சகோதரனின் வாளியில் நீர் நிரப்புவதும் ஸதகாவாகும். இத்தகைய ஒவ்வொரு பணிக்கும் நற்கூலியுண்டு (திர்மிதி).
- விதவையர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவுவதற்காக முயற்சி செய்பவர் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிபவனைப் போன்றும், இரவில் விழித்திருந்து நின்று வணங்குபவரைப் போன்றும் உள்ளார் (புஹாரி).
- யார் கடன் வாங்கியவருக்கு அவகாசம் அளிக்கிறாரோ அல்லது அவரது கடனை மன்னித்து விடுகிறாரோ அவரது கடனை அல்லாஹ் மன்னித்து விடுகிறான் (முஸ்லிம்)
- "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் ஐந்து. ஸலாம் சொன்னால் பதில் சொல்வது, நோயுற்றோரை நலன் விசாரிப்பது, ஜனாஸாக் களைப் பின்தொடர்வது, விருந்துக்கு அழைத்தால் சமூகமளிப்பது, தும்மிய ஒருவர் செய்யும் பிரார்த்தனைக்குப் பதில் சொல்வது" (புஹாரி).

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- சமூக வாழ்வு தொடர்பான ஹதீஸ்களைத் திரட்டி முன்வைப்பார்.
- சமூகப் பணிகளில் ஈடுபடுவது அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- ஹதீஸ்களுக்கூடாக சமூகப் பணிகளை இனங்கண்டு தொகுப்பார்.
- ஹதீஸ்களைக் கற்று சமூகப் பணிகளில் ஈடுபடுவார்.

இணைப்பு 6.3.2.1

**அன்ஸாரின் வீடு**

அன்ஸாரின் வீடு அலங்கோலமாக இருந்தது. சகோதரி நிலூபா மணமுடித்துக் கணவன் வீட்டுக்குச் சென்றதன் பின்னர் அந்த வீட்டின் நிலை அவ்வாறு மாறிவிட்டது. வயது முதிர்ந்த அன்ஸாரின் தாயர் வீட்டை அழகுபடுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட முடியவில்லை. அன்று அன்ஸாரின் வகுப்பில் அழகு பற்றிய சில ஹதீஸ்கள் கற்பிக்கப்பட்டன. "அல்லாஹ் அழகானவன். அவன் அழகை விரும்புகிறான்" என்று கற்பிக்கப்பட்ட ஹதீஸ் அவனது உள்ளத்தில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது. தனது வீட்டு நிலையை எண்ணிப் பார்த்தான். அல்லாஹ் அழகை விரும்பும்போது எமது வீட்டை அலங்கோலமான நிலையில் வைத்திருப்பது பொருத்தமானதா எனச் சிந்தித்தான். பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்றதும் முதல் வேலையாக வீட்டை அழகுபடுத்தும் முயற்சியில் இறங்கினான். இதைக் கண்ட தாயாருக்கு ஆச்சரியமாக இருந்தது. மனமாற்றத்துக்கான காரணத்தைக் கேட்டறிந்து மகிழ்ச்சியடைந்தாள்.

இணைப்பு 6.3.2.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"ஹதீஸைக் கற்று அதன்படி செயலாற்றுவோம்."**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்ப்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 முன்மாதிரி முஸ்லிம் எனும் நூலில் (பக்கம் 159-161 வரை) எனும் தலைப்பிலுள்ள பகுதியை வாசித்து அதிலுள்ள ஹதீஸ்களை எழுதி அவை உணர்த்தும் கருத்துக்களைப் பட்டியல்படுத்துங்கள்.

குழு-2 முன்மாதிரி முஸ்லிம் எனும் நூலில் (பக்கம் 189-191) எனும் தலைப்பிலுள்ள பகுதியை வாசித்து அதிலுள்ள ஹதீஸ்களை எழுதி அவை உணர்த்தும் கருத்துக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு-3 முன்மாதிரி முஸ்லிம் எனும் நூலில் (பக்கம் 233-238) எனும் தலைப்பிலான பகுதியை வாசித்து அதிலுள்ள மூன்று ஹதீஸ்களைத் தேர்தெடுத்து எழுதி அவை உணர்த்தும் கருத்துக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு-4 முன்மாதிரி முஸ்லிம் எனும் நூலில் (பக்கம் 250-251) எனும் தலைப்பிலான பகுதியை வாசித்து அதிலுள்ள ஹதீஸ்களை எழுதி அவை உணர்த்தும் கருத்துக்களை பட்டியற்படுத்துங்கள்.

தேர்ச்சி 7.0 : **வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு அவர்களைப் பின்பற்றி ஒழுகுவார்.**

தேர்ச்சி மட்டம் 7.1 : நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கையில் ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப எடுத்த முயற்சிகளை அறிந்து நடைமுறைப்படுத்துவார்.

செயற்பாடு 7.1 : **'நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கையை விளங்கிக் கொள்வோம்.'**

நேரம் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடுகள் :
- இணைப்பு 7.1.1 இலுள்ள நிழற்படம்
- இணைப்பு 7.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- இணைப்பு 7.1.3 இலுள்ள தகவல் கோவை
- தரம்-8 இஸ்லாம் பாடப் புத்தகம் (2000, 2008) க.வெ.தி.
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 7.1.1 :
- இணைப்பு 7.1.1 இல் உள்ள நிழற்படத்தை காட்டி விபரம் கேளுங்கள். மதீனாவை அறிமுகப்படுத்துங்கள்.
- நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கை பற்றி மாணவருடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - மக்காவில் இறைதூதை எத்திவைக்க தடைகள் ஏற்பட்டன.
> - இதனால் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது.
> - ஹிஜ்ரத்தின் பின்னர் நபி (ஸல்) அவர்கள் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப முன்வந்தார்கள்.
> - ஹிஜ்ரத்தின் பின், சமூகத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.

(15 நிமிடங்கள்)

படி 7.1.2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் 7.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 7.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.


> - மக்காவில் சமூகத்தை உருவாக்குவதற்கான சூழ்நிலை காணப்படவில்லை.
> - அங்கு பெரும்பாலும் தனிநபர் சார்ந்த போதனைகளே இடம்பெற்றன.
> - மதீனாவில் ஒரு சமூகத்தை உருவாக்கக் கூடிய பிரதேசம், பாதுகாப்பு, ஒத்துழைப்பு போன்றன கிடைத்தன.
> - மதீனாவின் சுதேசிகளான அவ்ஸ்-கஸ்ரஜ்கள் ஒற்றுமைப் படுத்தப்பட்டார்கள்.
> - முஹாஜிரீன்களும், அன்ஸாரீன்களும் சகோதரர்களாகப் பிணைக்கப்பட்டார்கள்.
> - மஸ்ஜிதுந் நபவி கட்டப்பட்டு மக்கள் ஒன்று கூட்டப்பட்டார் கள். ஜும்ஆ, ஜமாஅத் தொழுகைகள் இடம்பெற்றன.
> - றமழான் நோன்பும் ஸகாத்தும் சமூகத்தை பரஸ்பரம் புரிந்து கொள்ள வைத்தன.
> - சமூகத்துக்கான ஒழுக்கங்கள் காண்பிக்கப்பட்டன.
> - சமூக சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
> - சமூகத்தைப் பாதுகாப்பதற்காக அரசாங்கமொன்று அமைக்கப்பட்டது.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- மதீனாவில் ஒரு சிறந்த சமூகம் எவ்வாறு கட்டியெழுப்பப்பட்டது என்பதை முன்வைப்பார்.
- ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு எவ்வாறு அத்திவாரமிடப்பட வேண்டும் என்பதை இனங்கண்டு எழுதுவார்.
- மதீனாவில் உருவாக்கப்பட்ட ஸஹாபா சமூகத்தை விரும்பி ஏற்றுக் கொள்வார்.
- ஒரு தலைமைத்துவத்தின் கீழ் சமூகமாக வாழ்வதற்கு விருப்போடு முன்வருவார்.

இணைப்பு 7.1.1



இணைப்பு 7.1.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்வை விளங்கிக் கொள்வோம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- இணைப்பு 7.1.3 இலுள்ள தகவல் கோவையை வாசித்து அதற்கூடாக தகவல்களைப் பெற முயற்சி செய்யுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்ப்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 ஜமாஅத் தொழுகை எவ்வாறு சமூகத்தினரைப் பரஸ்பரம் தொடர்புகொள்ள வைக்கின்றது என்பதை விளக்குங்கள்.

குழு-2 ரமழான் மாத நோன்பு எவ்வாறு சமூகத்தினரைப் பரஸ்பரம் தொடர்புகொள்ள வைக்கின்றது என்பதை விளக்குங்கள்.

குழு-3 ஸகாத் எவ்வாறு சமூகத்தினரை பரஸ்பரம் தொடர்புகொள்ள துணை செய்கிறது என்பதை விளக்குங்கள்.

குழு-4 மதீனாவில் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக ஒழுக்கங்களை பட்டியல் படுத்திக் காட்டுங்கள்.

**இணைப்பு 7.1.3**

நபி (ஸல்) அவர்கள் 13 வருட காலமாக மக்காவில் இஸ்லாத்தைப் போதித்தார்கள். அங்கு தனிநபர்களையே இஸ்லாத்தின் பக்கம் அழைக்க முடிந்தது. சமூகமாக அழைப்பதற்கு குறைஷிகள் தடையாக இருந்தார்கள். இதனால் நபி (ஸல்) அவர்கள் மற்றோர் இடத்தைத் தேடினார்கள்.

மக்காவுக்கு வடக்கே 450 கிலோ மீற்றர் தூரத்தில் மதீனா இருக்கின்றது. மக்காவுக்கு யாத்திரை வந்த சிலர் நபி (ஸல்) அவர்களை மதீனாவுக்கு வருமாறு அழைத்தார்கள். அல்லாஹ்வின் அனுமதியோடு நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள்.

மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நபி (ஸல்) அவர்கள் அங்கு ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப ஆரம்பித்தார்கள். ஆண்டாண்டு காலம் பகைமை பூண்டிருந்த அவ்ஸ்களையும் கஸ்ரஜ்களையும் ஒற்றுமைப்படுத்தினார்கள். முஹாஜிரீன்களையும் அன்ஸாரீன்களையும் சகோதரர்களாகப் பிணைத்தார்கள். யூதர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஒரு குடிசனக் கணக்கெடுப்பையும் மேற்கொண்டார்கள்.

அங்கு சென்றபோது ஜமாஅத் தொழுகை விதியாக்கப்பட்டது. அதற்காக மஸ்ஜிதுந் நபவியைக் கட்டினார்கள். அதான் ஒலி கேட்டதும் எல்லோரும் மஸ்ஜிதில் கூடினார்கள். அங்கு கூட்டாகத் தொழுகை நடத்தப்பட்டது. அதன் மூலம் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படும் பயிற்சி கிடைத்தது. எல்லோரையும் சமமாகக் கருதும் பக்குவம் ஏற்பட்டது.

நோன்பு விதியாக்கப்பட்டதால் எல்லோரும் ஒரே மாதத்தில் நோன்பு நோற்றார்கள். அல்லாஹ்வுக்காக மனோ இச்சைகளைக் கட்டுப்படுத்தினார்கள். ஏழைகளின் பசித் துயரை எல்லோரும் அறிந்தார்கள். உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு ஈந்து மகிழ்ந்தார்கள். அதேவேளை ஸகாத்தும் விதியாக்கப்பட்டது. சமூகத்தின் தேவைகளை நிவர்த்திக்க இது உதவியாக அமைந்தது.

ஒருவர் மற்றவரோடு எவ்வாறு பழக வேண்டும் என்பதை நபி (ஸல்) அவர்கள் காட்டிக் கொடுத்தார்கள். ஸலாம் கூறுவது, அனுமதியுடன் வீட்டுள் நுழைவது, எதிர்ப்பாலாருடன் பழகுவது போன்ற ஒழுக்கங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. சமூகமாக வாழும்போது பிரச்சினைகள் தோன்றாமலிருக்க இவை பாதுகாப்பாக அமைந்தன.

ஏவல் விலக்கல்கள் வரையறுக்கப்பட்டன. சமூகத்துக்குத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட்டன. சமூகத்தைப் பாதுகாக்க அரசொன்று உருவாக்கப்பட்டது. எதிரிகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கைதிகள் மூலம் சிறுவர்களுக்கு எழுத்தறிவு ஊட்டப்பட்டது. இதனால் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் ஒரு சமூகம் உருவானது. அது ஸஹாபாக்கள் சமூகமாகும்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 7.0 | : | **வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு அவர்களைப் பின்பற்றி ஒழுகுவார்.** |
| தேர்ச்சி மட்டம் | 7.2 | : | கலீபாக்களது வாழ்க்கை முன்மாதிரிகளைக் கடைப்பிடிப்பார். |
| செயற்பாடு | 7.2.1 | : | **'கலீபா உஸ்மான் (ரழி) அவர்கள் வாழ்க்கை முன்மாதிரிகளைத் தெரிந்து ஒழுகுவோம்.'** |
| நேரம் | | : | 80 நிமிடங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- இணைப்பு 7.2.1.1 இலுள்ள நிகழ்வுத் தொகுப்பு
- இணைப்பு 7.2.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- தரம்-8 இஸ்லாம் பாடப் புத்தகம் (2001) க.வெ.தி.
- கலீபாக்கள் - எஸ்.எம். அப்துல் கப்பார் உலவி
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

## கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 7.2.1.1 :

- இணைப்பு 7.2.1.1 இல் உள்ள நிகழ்வுத் தொகுப்பை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். அல்லது சுயமாக முன்வந்து வாசிக்கக் கூடிய ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- கலீபா உஸ்மான் (ரழி) அவர்களைப் பற்றி மாணவருடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியோருக்கு அடுத்து ஸஹாபாக்களில் மேன்மைக்குரியவர் உஸ்மான் (ரழி) அவர்கள் ஆவார்கள்.
> - குலபாஉர் ராஷிதீன்களில் இவர் மூன்றாமவர் ஆவார்.
> - இறையச்சம், நபி (ஸல்) மீது பற்று, தியாகம், பொதுநலன் என்பவற்றில் உஸ்மான் (ரழி) அவர்கள் முன்னணியில் நின்றார்கள்.
> - இஸ்லாத்திற்காகவும் முஸ்லிம்களுக்காகவும் இவர் அதிக பணிகளை ஆற்றியுள்ளார்.

(15 நிமிடங்கள்)

படி 7.2.1.2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 7.2.1.3

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

| |
|---|
| • உஸ்மான் (ரழி) அவர்கள் குறைஷிக் குலத்தில் உமையாக் கிளையில் அப்பான்-அர்வா தம்பதிகளுக்கு கி.பி. 575இல் மக்காவில் பிறந்தார். |
| • இவர் 'ஸாபிகூனல் அவ்வலூன்' எனப்பட்ட ஆரம்ப கட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட உத்தமர்களில் ஒருவராவார். |
| • ஜாஹிலிய்யாக் காலத்தில் வாழ்ந்த எழுத வாசிக்கத் தெரிந்தவர்களுள் இவரும் ஒருவர். |
| • இவரிடம் மென்மை, வெட்கம், கொடை ஆகிய பண்புகள் இளைமையிலேயே காணப்பட்டன. |
| • இவர் ஒரு சிறந்த வணிகரும் செல்வந்தருமாவார். |
| • நுபுவ்வத் கிடைப்பதற்கு முன்பே நபி (ஸல்) அவர்களின் மகள் றுகையாவை மணமுடித்தார்கள். அவர் இறந்த பின் அடுத்த மகள் உம்முல் குல்ஸூமை மணமுடித்தார்கள். இதனால் துன்னூரைன் என்ற சிறப்புப் பெயர் கிடைத்தது. |
| • அபிசீனிய, மதீன ஹிஜ்ரத் இரண்டிலும் மனைவியுடன் கலந்து கொண்டார்கள். |
| • ஹுதைபியா உடன்படிக்கை நிகழுமுன் நபி (ஸல்) அவர்களின் தூதராக குறைஷியரிடம் சென்றார்கள். அவர் கொலை செய்யப்பட்டதாக வதந்தி பரவியபோது, அவருக்காக ஸஹாபாக்கள் 'பைஅதுர் ரிழ்வான்ய' என்ற உறுதிமொழியை வழங்கினார்கள். |
| • மதீனாவில் பி'ரு ரூமா என்ற கிணற்றை 20000 திர்ஹம் களுக்கு வாங்கிக் கொடுத்தும், தபூக் போருக்காக 950 ஒட்டகங்கள் 50 குதிரைகள், 1000 தினார் பணம் கொடுத்தும் உதவினார்கள். |
| • உமர் (ரழி) கொலை செய்யப்பட்ட பின்னர் ஹிஜ்ரி 23ல் கலீபாவாகப் பதவியேற்றார்கள். |
| • இவரது காலத்தில் (ஹி.27) கடற்படை தாபிக்கப்பட்டு உரோமர்களின் எதிர்ப்புக்கள் தடுக்கப்பட்டன. மத்திய தரைக் கடல் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது. |
| • இவரது காலத்தில் அல்குர்ஆன் பிரதிகள் ஒருமுகப்படுத் தப்பட்டு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டன. இதனால் 'ஜாமிஉல் குர்ஆன்' என்று பாராட்டப்படுகிறார்கள். |
| • இவரது காலத்தில் மஸ்ஜிதுல் ஹரமும் (ஹி.26) மஸ்ஜிதுந் நபவியும் (ஹி.29) விஸ்தரிக்கப்பட்டன. |
| • ஹி.35இல் குழப்பக்காரர்களால் இவர் கொலை செய்யப்பட்டார். |

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- உஸ்மான் (ரழி) அவர்களின் பொது நலப் பணிகளை எடுத்துக்கூறுவார்.
- உஸ்மான் (ரழி) அவர்கள் சிறப்படைந்தமைக்கான காரணங்களை ஆதாரங்காட்டி நிருபிப்பார்.
- உஸ்மான் (ரழி) அவர்கள் பற்றி நல்லெண்ணங்கொள்வார்.
- உஸ்மான் (ரழி) அவர்களின் பண்புகளையும் பணிகளையும் தமது வாழ்வில் இணைத்துக்கொள்வார்.

**இணைப்பு 7.2.1.1**

முஸ்லிம்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். இதனால் மதீனாவின் சனத்தொகை பெருகியது. யூதனொருவனுக்குச் சொந்தமான கிணற்றிலிருந்தே அவர்கள் நீரைப் பெற்றுக் கொண்டார்கள். முஸ்லிம்கள் பெருகியதால் யூதனுக்குப் பொறாமை ஏற்பட்டது. முஸ்லிம்களிடம் அதிகமாக வரி அறவிடத் தொடங்கினான். இதனால் முஸ்லிம்கள் சிரமமப்பட்டனர். அவ்வேளை "யார் பிஃரு ரூமா கிணற்றை வாங்கி முஸ்லிம்களுக்கு வக்பு செய்கிறார்களோ அவர் சுவனம் புகுவார்" என நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்க்ள. இதைக் கேட்ட உஸ்மான் (ரழி) அவர்கள், அக்கிணற்றை 20,000 திர்ஹம்களுக்கு வாங்கி 'வக்பு' செய்தார்கள். சிறிது காலத்தில் கிணற்றில் நீர் வற்றியது. "யார் பிஃரு ரூமாவை ஆழமாக்கித் தருகிறாரோ அவர் சுவனம் நுழைவார்" என நபி (ஸல்) அவர்கள் பிரகடனம் செய்தார்கள். அதனையும் உஸ்மான் (ரழி) அவர்களே செய்து கொடுத்தார்கள்.

**இணைப்பு 7.2.1.2**

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"உஸ்மான் (ரழி) வாழ்வை விளங்கிக் கொள்வோம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள இ.ஸ்லாம் தரம்-8 இலுள்ள பகுதியை வாசித்து அதனூடாக தகவல்களைப் பெற முயற்சி செய்யுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 உஸ்மான் (ரழி) அவர்களின் குடும்பம் பற்றி சுருக்கமாக எழுதுங்கள்.

குழு-2 உஸ்மான் (ரழி) அவர்கள் இஸ்லாத்துக்குச் செய்த சேவை பற்றி சுருக்கமாக எழுதுங்கள்.

குழு-3 உஸ்மான் (ரழி) அவர்கள் சிறந்த நன்கொடையாளன் என்பதற்கான இரண்டு நிகழ்வுகளைக் குறிப்பிட்டு விளக்குங்கள்.

குழு-4 உஸ்மான் (ரழி) அவர்களிடம் நீங்கள் கண்ட சிறப்புக்களைப் பட்டியற் படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| தேர்ச்சி 7.0 | : | **வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு அவர்களைப் பின்பற்றி ஒழுகுவார்.** |
| தேர்ச்சி மட்டம் 7.2 | : | கலீபாக்களது வாழ்க்கை முன்மாதிரிகளைக் கடைப்பிடிப்பார். |
| செயற்பாடு 7.2.2 | : | **'கலீபா அலி (ரழி) அவர்கள் வாழ்க்கை முன்மாதிரிகளை தெரிந்து ஒழுகுவோம்.'** |
| நேரம் | : | 80 நிமிடங்கள் |
| தரவிருத்தி உள்ளீடுகள் | : | • இணைப்பு 7.2.2.1 இலுள்ள நிகழ்வு<br>• இணைப்பு 7.2.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• இணைப்பு 7.2.2.3 இலுள்ள தகவல் கோவை.<br>• தரம்-8 இஸ்லாம் பாடப் புத்தகம் (2001) க.வெ.தி.<br>• கலீபாக்கள் - எஸ்.எம். அப்துல் கப்பார் உலவி<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 7.2.2.1 :

- இணைப்பு 7.2.2.1 இல் உள்ள நிகழ்வை மாணவருக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- கலீபா அலி (ரழி) அவர்களைப் பற்றி மாணவருடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • மேன்மையான ஸஹாபாக்களில் நான்காவது இடத்தைப் பெறுபவர் அலி (ரழி) அவர்கள் ஆவார்.<br>• இவர் குலபாஉர் ராஷிதீன்களில் நான்காமவர் ஆவார்.<br>• இஸ்லாத்தை முதலில் ஏற்ற சிறுவர் ஆவார்.<br>• சிறு வயது முதல் மரணிக்கும் வரை இஸ்லாத்துக்காகப் பெரும் பணியாற்றிய உத்தமராவார். |

(15 நிமிடங்கள்)

படி 7.2.2.2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 7.2.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

- அலி (ரழி) அவர்கள் குறைஷிக் குலத்தில் ஹாஷிம் கிளையில் அபூதாலிப் - பாத்திமா தம்பதிகளுக்கு கி.பி. 599இல் மக்காவில் பிறந்தார்கள்.
- 'ஸாபிகூனல் அவ்வலூன்'களில் ஒருவர். 10 வயதில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.
- அபுல் ஹஸன், அபூ துராப், ஹைதர், ஸைபுல்லாஹ் என அவர்களுக்குப் பல சிறப்புப் பெயர்கள் உண்டு.
- இவரிடம் அறிவு, துணிவு, வீரம் முதலிய பண்புகள் நிறைய காணப்பட்டன.
- நபி (ஸல்) அவர்கள் தமது குடும்பத்தினரிடமும் மக்காவாசிகளிடமும் தமக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்தபோது, 'நான் உதவி செய்கிறேன்' என பல முறை உறுதியளித்தார்கள்.
- ஹிஜ்ரத்தின்போது தமது உயிரைப் பணயம் வைத்து நபி (ஸல்) அவர்களின் படுக்கையில் உறங்கினார்கள்.
- ஹிஜ்ரி 02ல் நபி (ஸல்) அவர்களின் மகள் பாத்திமா (ரழி)யை மணமுடித்தார்கள். ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி) இவர்களின் பிள்ளைகளாவர்.
- அலி (ரழி) அவர்கள் மிக எளிமையாக வாழ்ந்தார்கள். கூலி வேலை செய்து குடும்பத்தைப் பராமரித்தார்கள்.
- சிறந்த வீரரான இவர், இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காக இடம்பெற்ற எல்லாப் போர்களிலும் பங்குபற்றினார்கள்.
- யெமன் நாட்டு நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்கள்.
- உஸ்மான் (ரழி) கொலை செய்யப்பட்ட பின் நான்காவது கலீபாவாக ஹிஜ்ரி 36 இல் பதவியேற்றார்கள்.
- ஒரு யூதன் கிளப்பி விட்ட குழப்பத்தால் இவரது காலத்தில் பல உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்பட்டன.
- ஹிஜ்ரி 40இல் இப்னு முல்ஜம் என்பவனால் கொலை செய்யப்பட்டார்கள்.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- அலி (ரழி) அவர்களின் சிறப்புக்களை எடுத்துக் கூறுவார்.
- அலி (ரழி) அவர்களிடம் காணப்பட்ட திறமைகளை இனங்கண்டு ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- அலி (ரழி) அவர்களின் பணிகளைப் பாராட்டுவார்.
- அலி (ரழி) அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.
- அலி (ரழி) அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடக்குமாறு ஏனையோரையும் தூண்டுவார்.

**இணைப்பு 7.2.2.1**

**ஒரு நிகழ்வு**

ஒரு முறை இருவர் பயணத்திலிருந்தனர். ஒருவரிடம் 5 ரொட்டிகளும் மற்றவரிடம் 3 ரொட்டிகளும் இருந்தன. இருவரும் மதிய வேளையில் உணவருந்த ஆரம்பித்தனர். இடையில் மூன்றாவது நபர் ஒருவர் இணைந்து கொண்டார். மூவரும் சாப்பிட்டு முடித்தனர். மூன்றாமவர் விடைபெற்றுச் செல்லும்போது எட்டு திர்ஹம்களைக் கொடுத்துச் சென்றார். அதில் 5 ரொட்டிக்காரன் 5 திர்ஹம்களை எடுத்துக் கொண்டு 3 ரொட்டிக்காரருக்கு 3 திர்ஹம்களை வழங்கினார். ஆனால் அவர் அது தமக்குப் போதாதென வாதாடினார். இருவரும் அலி (ரழி) அவர்களிடம் சென்றனர். மூன்று திர்ஹம்களை ஏற்றுக் கொள்ளுமாறு அலி (ரழி) அவரைக் கேட்டுக் கொண்டார். அவர் மறுத்தபோது ஒரு திர்ஹத்தை வழங்குமாறு சொன்னார்கள். காரணம் கேட்கப்பட்டபோது பின்வருமாறு விளக்கமளித்தார்கள்.

5 + 3 = 8 ரொட்டிகள். எட்டு ரொட்டிகளை மும்மூன்றாக உடைத்தால் 8 x 3 = 24 துண்டுகள். 5 ரொட்டிக்காரரின் (5x3) 15 துண்டுகளும், 3 ரொட்டிக்காரரின் (3x3) 9 துண்டுகளும் சாப்பிடப்பட்டுள்ளன. மூவரும் சமமாகச் சாப்பிட்டால் மூன்றாமவர் 8 துண்டுகளைச் சாப்பிட்டுள்ளார். முதலாமவரின் 15 துண்டுகளிலிருந்து அவர் (15-8) 7 துண்டுகளும் இரண்டாமவரின் 9 துண்டுகளிலிருந்து அவர் (9-8) ஒரு துண்டும் சாப்பிட்டுள்ளார். ஆகவே முதலாமவருக்கு 8 திர்ஹம்களும் இரண்டாமவருக்கு ஒரு திர்ஹமும் உரியன.

**இணைப்பு 7.2.2.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**"அலி (ரழி) அவர்களின் முன்மாதிரிகளைத் தெரிந்து ஒழுகுவோம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள இஸ்லாம் தரம்-8 இலுள்ள பகுதியை வாசித்து அதனூடாக தகவல்களைப் பெற முயற்சி செய்யுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 "அலி (ரழி) அவர்களின் குடும்பம்" பற்றி சுருக்கமாக எழுதுங்கள்.

குழு-2 "அலி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு எப்போதும் பக்கபலமாக இருந்தார்கள்" என்பது பற்றி சுருக்கமாக எழுதுங்கள்.

குழு-3 "அலி (ரழி) அவர்கள் சிறந்த வீரர்" என்பதை எடுத்துக் காட்டுங்கள்.

குழு-4 அலி (ரழி) அவர்களிடம் காணப்பட்ட சிறப்பம்சங்களை எடுத்துக் காட்டுங்கள்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 7.0** | : | **வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு அவர்களைப் பின்பற்றி ஒழுகுவார்.** |
| **தேர்ச்சி மட்டம் 7.3** | : | அஷரதுல் முபஷ்ஷராக்களை அறிந்து அவர்களின் வரலாற்றைக் கற்று முன்மாதிரிகளைக் கடைப்பிடிப்பார். |
| **செயற்பாடு 7.3** | : | **'அஷரதுல் முபஷ்ஷராக்களைப் பின்பற்றி வாழ்வோம்.** |
| **நேரம்** | : | 120 நிமிடங்கள் |
| **தரவிருத்தி உள்ளீடுகள்** | : | • இணைப்பு 7.3.1 இலுள்ள கஸீதா<br>• இணைப்பு 7.3.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.<br>• இணைப்பு 7.3.3 இலுள்ள தகவல் கோவை.<br>• அஷரதுல் முபஷ்ஷரா - எம்.எஸ். முகம்மத் தம்பி<br>• டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள் |

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 7.3.1 :

- இணைப்பு 7.3.1 இல் உள்ள கஸீதாவைப் பாடிக் காட்டுங்கள். அல்லது பாடத் தெரிந்த மாணவரொருவர் மூலம் அல்லது இருவர் அல்லது மூவர் கொண்ட குழு மூலம் பாட வையுங்கள்.
- அஷரதுல் முபஷ்ஷரா பற்றி மாணவருடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்டோர் அஷரதுல் முபஷ்ஷரா எனப்படுவர்.<br>• அவர்கள் ஸஹாபாக்களில் பதின்மராவர்.<br>• அவர்கள் இஸ்லாத்துக்காகப் பெரும் பணியாற்றியமையால் அந்தப் பாக்கியத்தைப் பெற்றார்கள்.<br>• அவர்களிடம் சிறந்த முன்மாதிரிகள் காணப்படுகின்றன. |

(20 நிமிடங்கள்)

படி 7.3.2 :

- மாணவர்களை பத்து குழுக்களாகப் பிரியுங்கள் (மாணவர் தொகை குறைவாயின் ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள். ஒரு குழுவுக்கு இரண்டு வினாக்களை வழங்குங்கள்).
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவனையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(60 நிமிடங்கள்)

படி 7.3.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - அபூபக்கர் (ரழி), உமர் (ரழி), உஸ்மான் (ரழி), அலி (ரழி) ஆகிய நான்கு கலீபாக்களும் அஷரதுல் முபஷ்ஷராக்களுள் அடங்குவர்.
> - தல்ஹா (ரழி), ஸுபைர் (ரழி), ஸஅத் (ரழி), ஸஈத் (ரழி), அபூஉபைதா, அப்துர் ரஹ்மான் என்போர் ஏனைய அறுவருமாவர்.
> - இவர்கள் இஸ்லாத்தைக் கற்றல், கற்பித்தல், மற்றவர்களுக்கு எத்திவைத்தல், இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காக உழைத்தல் இஸ்லாத்துக்காக தமது உடல், பொருள், உயிர், நேரம், செல்வாக்கு போன்ற அனைத்தையும் தியாகம் செய்தல் என்றவாறு பணியாற்றி உள்ளார்கள்.
> - இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இஸ்லாத்துக்கும், முஸ்லிம்களுக்கும் அளப்பரிய சேவைகளை நிறைவேற்றியபோது, நபி (ஸல்) அவர்கள் இவர்களுக்கு சுவர்க்கத்தை நன்மாராயம் செய்தார்கள்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- அஷரதுல் முபஷ்ஷராக்களின் தனிச் சிறப்புக்களை எடுத்துக் கூறுவார்.
- அஷரதுல் முபஷ்ஷராக்கள் சுவர்க்கத்துக்கு நன்மாராயம் பெற்றுக் கொண்டதற்கான காரணங்களை இனங்கண்டு கூறுவார்.
- அஷரதுல் முபஷ்ஷராக்களின் பணிகளில் திருப்தி காண்பார்.
- அஷரதுல் முபஷ்ஷராக்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி வாழ்வார்.
- அஷரதுல் முபஷ்ஷராக்களின் வாழ்வியல் முறையினை மற்றவர்களுக்கும் எடுத்துக் காட்டுவார்.

**இணைப்பு 7.3.1**

**கஸீதா**

ثُمَّ الرِّضَاعَنْ اَبِيْ بَكْرٍ وَعَنْ عُمَرٍ

وَعَنْ عَلِيٍّ وَعَنْ عُثْمَانَ ذِي الكَرَمِ

سَعْدٍ سَعِيْدٍ زُبَيْرٍ طَلْحَةَ وَاَبِيْ

عُبَيْدَةٍ وَابْنُ عَوْفٍ عَاشِرِ الكَرَمِ

(கஸீததுல் புர்தா)

**இணைப்பு 7.3.2**

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**'அஷரதுல் முபஷ்ஷராக்களை பின்பற்றி வாழ்வோம்'**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- உங்கள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள இணைப்பு 7.3.1.3 இலுள்ள பகுதியை வாசித்து அதனூடாக தகவல்களைப் பெற முயற்சி செய்யுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்ப்படுத்துங்கள்
- நீங்கள் தயார்ப்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 அபூபக்ர் (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள். அப்துர் ரஹ்மான் (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள்.

குழு-2 உமர் (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள். அபூ உபைதா (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள்.

குழு-3 உஸ்மான் (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள். ஸஈத் (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள்.

குழு-4 அலி (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள். ஸஅத் (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள்.

குழு-5 தல்ஹா (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள். ஸுபைர் (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள்.

இணைப்பு 7.3.3

| | வழங்கும் பெயர் | பிறந்த ஆண்டு கி.பி. | பெற்றோர் | இஸ்லாத்தை ஏற்ற | | | தொழில் | தனிச் சிறப்பு | வபாத் ஆண்டு ஹிஜ்ரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண்டு நுபுவ்வத் | வயது | ஒழுங்கு வரிசை | | | |
| 1. | அபூபக்ர் (ரழி) | 572 | அபூகுஹாபா - உம்முல் கைர் | 01 | 38 | 2 | வணிகம் | வள்ளல் | 13 |
| 2. | உமர் (ரழி) | 583 | கத்தாப் - கந்தமா | 06 | 33 | 40 | மந்தை மேய்த்தல் | வீரர் | 23 |
| 3. | உஸ்மான் (ரழி) | 575 | அப்பான் - அர்வா | 01 | 35 | 7 | வியாபாரம் | வள்ளல் | 35 |
| 4. | அலி (ரழி) | 599 | அபூதாலிப் - பாத்திமா | 01 | 10 | 3 | கூலிவேலை | வீரர் | 40 |
| 5. | ஸஅத் (ரழி) | 576 | அபீவக்காஸ் - ஹம்னா | 01 | 17 | 6 | -- | வீரர் | 55 |
| 6. | ஸஈத் (ரழி) | 571 | ஸைத் | 01 | 14 | 8 | விவசாயம் | வீரர் | 51 |
| 7. | தல்ஹா (ரழி) | 571 | உபைதுல்லா - ஷஅபா | 01 | 27 | 13 | வணிகர் | வீரர் | 36 |
| 8. | ஸுபைர் (ரழி) | 586 | அவ்வாம் - ஸபிய்யா | 01 | 16 | 5 | விவசாயம், வியாபாரம் | வீரர் | 36 |
| 9. | அபூஉபைதா (ரழி) | 584 | அப்துல்லா - உமைமா | 01 | -- | 9 | வியாபாரம் | வீரர் | 18 |
| 10. | அப்துர் ரஹ்மான் (ரழி) | 579 | அவ்ப் - ஷிபாஆ | 01 | 27 | 14 | வியாபாரரம் | வீரர், வள்ளல் | 32 |

தேர்ச்சி 7.0 : **வாழ்க்கைக்குத் தேவையான அடையாள புருஷர்களை இனங்கண்டு அவர்களைப் பின்பற்றி ஒழுகுவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.4** : அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் வரலாற்றைப் படித்து அவர்களின் நெறிமுறைகளைப் பின்பற்றுவார்.

செயற்பாடு 7.4 : **'அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் முன்மாதிரிகளைக் கடைப்பிடிப்போம்.**

நேரம் : 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இணைப்பு 7.4.1 இலுள்ள பாடல்
- இணைப்பு 7.4.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- இணைப்பு 7.4.3 இலுள்ள தகவல் கோவை.
- அன்னை ஆயிஷா (ரழி) - எஸ். முஹம்மத் பஷீர்
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி **7.4.1** :
- இணைப்பு 7.4.1 இல் உள்ள பாடலைப் பாடிக் காட்டுங்கள். அல்லது பாடத் தெரிந்த மாணவர் மூலம் பாட வையுங்கள்.
- அன்னை ஆயிஷா (ரழி) அவர்களைப் பற்றி மாணவருடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - ஆயிஷா (ரழி) அவர்கள் அபூபக்கர் (ரழி) அவர்களின் மகளாவார்.
> - அவர் பிறக்கும்போதே அன்னையும், தந்தையும் முஸ்லிம்களாக இருந்தனர்.
> - நபி (ஸல்) அவர்கள் மணமுடித்த கன்னிப் பெண் ஆயிஷா (ரழி) மட்டுமே. ஏனையோர் விதவைகளாவர்.
> - இவர் நபி (ஸல்) அவர்களின் மனைவியருள் பல சிறப்புக்களைக் கொண்டிருந்தார்.

(15 நிமிடங்கள்)

படி **7.4.2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 7.4.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - ஆயிஷா (ரழி) அவர்கள் நுபுவ்வத் 2ஆம் ஆண்டு மக்காவில் அபூபக்ர்-உம்மு ரும்மான் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார்கள்.
> - அவர் அழகும் விவேகமும் உடையவர்.
> - அல் ஹுமைரா, ஸித்தீக்கா என்ற சிறப்புப் பெயர்களைக் கொண்டிருந்தார்.
> - நபி (ஸல்) அவர்களின் மனைவியர் அனைவரும் விதவையாக இருக்க ஆயிஷா (ரழி) அவர்கள் மட்டுமே கன்னியாக இருந்தபோது மணமுடிக்கப்பட்டவராவார்.
> - அவர் பெண்களில் மிக அதிகமான ஹதீஸ்களை (2210) ரிவாயத் செய்தவராவார்.
> - பெண்கள் தொடர்பான அனேக விடயங்களை நபி (ஸல்) அவர்களிடம் கேட்டு விளக்கம் கொடுத்தவரும் இவரே யாவார்.
> - அவரிடம் பதிபக்தி, தக்வா, துணிவு, வள்ளண்மை முதலிய பண்புகள் நிறைந்து காணப்பட்டன.
> - நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னரும் நீண்டகாலம் வாழ்ந்து இஸ்லாத்தைக் கற்பித்தல், தீர்ப்புக் கூறல் (பத்வா) போன்ற பணிகளில் ஈடுபட்டு ஹிஜ்ரி58ல் வபாத்தானார்.

(25 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- ஆயிஷா (ரழி) அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவார்.
- உம்மஹாத்துல் மு.'.மினீன்களில் ஆயிஷா (ரழி) சிறப்புக்குரியவர் என்பதை (ஆதாரங்களுடன்) நிரூபித்துக் காட்டுவார்.
- உம்மஹாத்துல் மு.'.மினீன்களை மதித்து நடப்பார்.
- ஆயிஷா (ரழி) அவர்களின் முன்மாதிரிகளை கடைப்பிடித்து நடப்பார்.
- ஆயிஷா (ரழி) அவர்களின் முன்மாதிரியான வாழ்க்கையை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.

**இணைப்பு 7.4.1**

ஆயிஷா (ரழி)
ஒட்டுப்போட்ட ஆடையுடன்
உலகை ஆண்ட மன்னவரோ(டு)
உரிய இளமைப் பருவத்திலே
உள்ளம் அடக்கி வாழ்ந்தவரே
கட்டும் ஆடை பழசதிலும்
கந்தையாக இருந்தாலும்
கணவ ருடனே சண்டையின்றி
காலம் எல்லாம் வாழ்ந்தவரே

(ஆயிஷா நாச்சியார் பிள்ளைத் தமிழ்)

**இணைப்பு 7.4.2**

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் முன்மாதிரிகளைக் கடைப்பிடிப்போம்"**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 ஆயிஷா (ரழி) அவர்கள் கற்றுக் கொள்வதில் மிகுந்த ஆர்வங் கொண்டிருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்களை முன்வையுங்கள். (நூல்: பக்கம் 32-35)

குழு-2 நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களை மணமுடித்ததற்கான காரணங்களைக் கண்டறிந்து எழுதுங்கள். (பக்கம் 51-52)

குழு-3 ஆயிஷா (ரழி) அவர்களின் வணக்க வழிபாடுகளைக் கண்டறிந்து எழுதுங்கள். (பக்.56-57)

குழு-4 ஆயிஷா (ரழி) அவர்களின் அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தும் ஆதாரங்களைத் தேடி எழுதுங்கள். (பக்கம் 116-117)

**இணைப்பு 7.4.3**

குழு-1

இயற்கையிலேயே ஆயிஷா (ரழி) அவர்கள் கல்வியில் நன்கு ஈடுபாடு உள்ளவர்களாகத் திகழ்ந்தபோதிலும் அவர்களின் உயர் கல்வியனைத்தும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மூலமாகவே கிடைத்தது. உன்னதமான ஓர் உயர்ந்த குறிக்கோளின் அடிப்படையிலேயேதான் ஆயிஷா (ரழி) அவர்களை அண்ணலார் சிறந்த கல்விமானாக உருவாக்கினார்கள்.

ஆயிஷா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் பல்வேறு வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விளக்கம் பெறுவதில் ஆர்வமிக்கவர்களாக விளங்கினார்.

அவர்கள் தங்கியிருந்த அறையின் கதவு வழியாக நோக்கினால் பள்ளிவாயிலின் முற்றம் தெளிவாகத் தெரியும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கதவைத் திறந்து கொண்டு அவர்களின் அறைக்குள் பிரவேசித்தால் ஆயிஷா (ரழி) அவர்கள் தங்கள் அறையின் கதவருகே அமர்ந்து மிக்க கவனத்துடன் கேட்பார்கள். அதன் விளைவாக நாளுக்கு நாள் மார்க்க ஞானம் அவர்களிடம் சுடர் விட்டு ஒளி வீசியது.

ஆயிஷா (ரழி) அவர்கள் பெற்ற மார்க்க விளக்கத்தைப் போல் ஒரு சில உத்தம ஸஹாபாக்களும் பெற்றிருந்தார்கள். மற்றவர்கள் இவ்விஷயத்தில் இவர்களுக்கு ஈடாக இருக்கவில்லை. திருக்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றில் மிக்க விளக்கமுடையவர்களாகவும், நினைவாற்றல் மிக்கவர்களாகவும் ஆயிஷா (ரழி) அவர்கள் திகழ்ந்தார்கள்.

அண்ணலாரிடம் ஆயிஷா (ரழி) அவர்கள் எழுப்பிய ஐயங்களும், வினாக்களும் அவற்றிற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்க்ள தந்த விடைகளும், விளக்கங்களும் இஸ்லாம் மார்க்கத்திற்கு பேருதவியாக அமைந்தன. ஆயிஷா (ரழி) அவர்களின் அறிவுத் தாகம் மார்க்கத்தில் எழக் கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு அணைக்கட்டாக அமைந்தது.

இப்பொழுது அவர்கள் எழுப்பிய வினாக்கள் சிலவற்றைக் காண்போம்:-

ஜிஹாத் ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும்.

ஒரு நாள் அன்னை அயிஷா (ரழி) அவர்கள் அண்ணலாரிடம்,

"அல்லாஹ்வின் தூதரே! ஆண்களைப் போன்று பெண்களுக்கும் ஜிஹாத் தேவையா?"

"தேவையில்லை! ஹஜ்ஜு செய்வது பெண்களுக்கு போதுமானது" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விடையளித்தனர்.

மற்றொரு நாள் ஆயிஷா (ரழி) அவர்கள், அண்ணலாரை நோக்கி,

"அல்லாஹ்வின் தூதரே! திருமணத்திற்கு முன்பு பெண்ணின் சம்மதத்தைப் பெறுவது அவசியமா?" என்று கேட்க,

"ஆம்" என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

"ஆனால் பெண்கள் இயற்கையிலேயே வெட்கமுள்ளவர்களாக இருப்பதால், தங்கள் சம்மதத்தை வெளியிட கூச்சப்படுவார்களே?" என்று ஆயிஷா (ரழி) அவர்கள் கூற,

"அவர்கள் கூச்சப்பட்டு அமைதியுடன் இருப்பதே சம்மதத்திற்கு அறிகுறிதான்" என்று விளக்கம் கூறினார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்.

ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"தன்னைச் சந்திக்க விரும்பும் மனிதனை அல்லாஹ்வும் சந்திக்க விரும்புகிறான். தன்னைச் சந்திக்க விரும்பாதவனை அல்லாஹ் வெறுக்கிறான்"

உடனே ஆயிஷா (ரழி) அவர்கள்,

"அல்லாஹ்வின் திருத்தூதரே! நாம் எவரும் மரணிக்க விரும்புவதில்லையே! என்று கூற,

அதற்கு நபி (ஸல்) அவர்கள், உண்மைதான். என்னுடைய கருத்து என்னவென்றால், அல்லாஹ்வின் பேருளையும், அவனது மன்னிக்கும் மாண்பினையும், சுவனத்தைப் பற்றியும் அறிந்து கொண்ட ஒரு மு∴மின் (இறை நம்பிக்கையாளர்) அல்லாஹ்வின் மீது அதிகமதிகம் நேசம் கொள்கிறார். அல்லாஹ்வும் அவர் மீதும் அன்பு கொள்கிறான். ஆனால் இறை மறுப்பாளனோ (காபிர்) தனக்காகக் காத்திருக்கும் தண்டனைகளை நினைத்து இறைவனைச் சந்திக்க அஞ்சுகிறான். அல்லாஹ்வும் அவனை வெறுக்கத் துவங்குகிறான்" என்றார்கள்.

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களிடம் கூறினார்கள்:

"நீங்கள் நடுநிலையைப் பின்பற்றுங்கள். மக்களுடன் நெருங்கிப் பழகுங்கள். அவர்களுக்குச் சொல்லுங்கள். 'அல்லாஹ்வின் பேருளாலன்றி, ஒருவர் தம்முடைய அமல்களின் (நற்செயல்களின்) வாயிலான சுவனம் புகுந்து விட முடியாது' என்று"

அண்ணலாரின் இவ்வுபதேசம் தங்கள் இல்லத்தில் இருந்து ஆயிஷா (ரழி) அவர்களின் செவிகளில் பட்டது. இது அவர்களுக்கு ஒரு புதிய உபதேசமாகவும், ஐயத்திற்குரியதாகவும் இருந்தது. எனவே, அவர்கள் அண்ணலாரை நோக்கி,

"அல்லாஹ்வின் திருத்தூதரே! இது தங்களுக்கும் பொருந்துமா? என்று வினவ,

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "ஆம்! நானும் அல்லாஹ்வின் பேரருளுக்காகவும், அவனுடைய மன்னிப்பிற்காகவும் பிரார்த்தித்துக் கொண்டுதான் இருக்கின்றேன்" என்று கூறினார்கள்.

**உண்மையான காரணங்கள்**

குழு-2

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரழி) அவர்களின் அழகுக்காக அவர்களை மிகவும் விரும்பியதாக சிலர் எண்ணினர். அது மிகவும் தவறு, அண்ணலாரின் மற்ற மனைவியருள் ஸைனப் (ரழி), ஜுவைரிய்யா (ரழி), ஸபிய்யா (ரழி) ஆகியோர் ஆயிஷா (ரழி) அவர்களை விட மிக்க அழகுள்ளவர்களாவர். எனினும், ஆயிஷா (ரழி) அவர்கள் மீது அண்ணலாருக்கு இருந்த அன்பிற்கு முழுக் காரணம், அவர்களின் சிறப்புகளே ஆகும்.

ஆயிஷா (ரழி) அவர்கள் சிறந்த நினைவாற்றல் மிக்கவர்களாவர். அவர்கள் மூலம் நமக்கு 2210 நபிமொழிகள் கிடைத்துள்ளன. அவை அனைத்தும் மார்க்க சட்ட திட்டங்கள் பற்றியவையாகும். எனவேதான் அண்ணல் நபி (ஸல்) அவர்களும், "நீங்கள் ஹுமைரா (ஆயிஷா)விடமிருந்து மார்க்கத்தின் மூன்றில் ஒரு பங்கைப் பெற்றுக் கொள்ளுங்கள்" எனக் கூறியுள்ளார்கள். அறபி மொழியில் சிறந்த புலவரான அவர்களுக்கு பல அறபிப் பாடல்கள் நினைவிலிருந்தன. அவர்கள் மருத்துவத் துறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். ஏழைகளுக்கு இலவசமாக மருந்துகளை வழங்கினார்.

மேலும் ஆயிஷா (ரழி) அவர்களுடைய பேச்சு தெளிவாகவும் கணீர் கணீரென்றும் இருக்கும். மேலும் மிக்க இறையச்சம் உடையவர்களாகவும் இருந்தனர்.

இவற்றைத் தவிர்த்து அண்ணலார், அவர்களை விரும்பியதற்கு மேலும் சில காரணங்களைக் கூறலாம்.

1. **நபி (ஸல்)** மணந்த ஒரே கன்னிப் பெண் அவர்கள் தாம். மேலும் அத்திருமணம் இறைவனின் உத்தரவுப்படி நடந்தது.
2. **நபி (ஸல்) இவர்களின்** பரிசுத்த மனைவியருள் அவர்கள் ஒருவர்தாம். பிறவியிலேயே முஸ்லிம். மற்றவர்கள் மதம் மாறி இஸ்லாத்தை ஏற்றவர்கள்!
3. அவர்களுடைய பெற்றோர்கள் இஸ்லாத்திற்காக சகலவற்றையும் துறந்த முஹாஜிரீன்களாக இருந்தனர்.
4. தெய்வ வெளிப்பாடு என்னும் வஹீ அதிகமாக வெளியானதும், ஜிப்ரீல் (அலை) அவர்கள் அதிகத் தடவை வந்ததும் ஆயிஷா (ரழி) அவர்கள் இல்லத்தில்தான்.
5. வானவர் கோமான் ஜிப்ரீல் (அலை) கூட ஆயிஷா (ரழி) அவர்களுக்கு ஸலாம் கூறி மரியாதை செய்து வந்தார்கள்.

குழு-3

ஆயிஷா (ரழி) அவர்கள் அண்ணலாரின் மீது மிகவும் அன்பு பூண்டிருந்தார்கள். எனினும், அனைத்திற்கும் மேலாக அவர்கள் அதிகமதிகம் அல்லாஹ்வை நேசித்தார்கள். அவர்கள் முற்றிலும் அண்ணலாரைப் பின்பற்றினார்கள்.

நபி (ஸல்) அவர்கள், அனைவரையும் விட ஆயிஷா (ரழி) அவர்களையே மிகவும் நேசித்தார்கள். எனினும், அல்லாஹ்வின் மீது அவர்கள் கொண்ட நேசமோ ஈடு இணையற்றதாக இருந்தது.

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவித்தார்கள்: தொழுகைக்கு அழைப்பொலி வந்ததும் நபி (ஸல்) அவர்கள் எழுந்து என்னிடம் ஏதும் நடந்து கொள்ளாதவர்கள் போன்று வெளியேறுவார்கள். இல்லத்தினுள் வந்து நுழையும்பொழுது பின்வரும் வாசகத்தை மீண்டும் மீண்டும் மொழிவார்கள்:- 'ஒருவனுக்கு இரண்டு பள்ளத்தாக்கு நிறையத் தங்கம் இருப்பினும், அவன் நிச்சயமாக மூன்றாவதையும் யாசித்து அடையவே ஆசைப்படுவான். குப்பை தான் அவன் வயிற்றை நிரப்பும். அல்லாஹுதஆலா வித விதமான செல்வங்களைப் படைத்துள்ளான். அவற்றிற்காக நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டியவர்களாகவும் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். எவன் அல்லாஹ்வை சார்ந்திருக்கிறானோ, அவனை அல்லாஹ்வும் சார்ந்திருக்கின்றான்."

அண்ணலாரின் இத்தகைய உறுதியான அறிவிப்புகள் அவர்களின் பரிசுத்த குடும்பத்தினருக்கு உலக ஆசைகளை விட்டு அப்புறப்படுத்தி இறைவணக்கத்தின் பால் நெருக்கிவைக்கும் பேருபதேசங்களாக அமைந்தன.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இல்லத்தில் இருக்கும் பொழுது கூட பெரும்பாலான நேரங்களை இறை தியானத்திலேயே கழிப்பர்.

இஷாத் தொழுகையினை முடித்து அவர்கள் வீட்டிற்கு வந்தவுடன், மிஸ்வாக் கொண்டு பல்துலக்கிக் கொண்டு படுக்கைக்குச் செல்வார்கள்.

நள்ளிரவில் எழுந்து தொழுகையில் ஈடுபடுவார்கள். வைகறைக்கு முன்னர் அவர்கள் அயிஷா (ரழி) அவர்களை எழுப்பி விடுவார்கள். பின்னர் ஆயிஷா (ரழி) அவர்களும் எழுந்து தொழத் துவங்கிவிடுவார்கள். வைகறைக்குப் பின்னர் நபி (ஸல்) அவர்கள் பஜ்ருத் தொழுகையின் இரண்டு ரக்அத் சுன்னத்தான தொழுகையினைத் தொழுது கொண்டு சில நிமிடங்கள் ஆயிஷா (ரழி) அவர்கள் அருகில் படுப்பார்கள். பின்னர் பஜ்ரு, பர்ளுத் தொழுகைக்காக ஜமாஅத்துடன் தொழப் பள்ளிக்குச் செல்வார்கள்.

பெரும்பாலும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இரவில் தொழும்போது அன்னை ஆயிஷா (ரழி) அவர்களும் கண்விழித்து தொழுது அல்லாஹ்விடம் அழுதழுது பாவமன்னிப்புக் கோருவதுண்டு. இப்படிப்பட்ட சமயங்களில் நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனிலிருந்து நீண்ட சூராக்களை எடுத்து ஓதுவார்கள். சந்திர கிரகணத்தின் பொழுது, அண்ணலார் விசேஷமாக தொழுவார்கள். அதில் அன்னையவர்களும் இணைந்து தொழுவார்கள்.

நபி (ஸல்) அவர்கள், அதிகம் நோன்பு நோற்கக் கூடியவர்களாக இருந்தார்கள். சில சமயங்களில் அவர்கள் தொடர்ந்து பல நாட்கள் வரை நோன்பு நோற்பதுண்டு. ஆயிஷா (ரழி) அவர்களும், நபியவர்களுடன் சேர்ந்து நோன்பு நோற்பார்கள்.

ரமழான் மாதத்து இறுதிப் பத்து நாட்களில் நபி (ஸல்) அவர்கள் இ.்.திகாப் இருப்பது வழக்கம். மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலின் தாழ்வாரத்தில் ஒரு கூடாரம் அமைக்கப்பட்டு அதில் நபியவர்கள் தங்கியிருப்பார்கள். சில சமயங்களில் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களும் இ.்.திகாப் இருப்பதுண்டு. அவர்களுக்காக தனியாக வேறொரு கூடாரமும் அமைக்கப்படும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மூலம் நேரடியாகக் கிடைத்த இறை வணக்கப் பயிற்சிகள் நாளடைவில் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களை ஓர் சிறந்த இறை பக்தையாக மாற்றின. அண்ணலார் இவ்வுலகு நீத்த பின்னரும் அன்னையவர்கள் தொழுகை, நோன்பு விஷயங்களில் மிக்க உறுதியாகவும் அச்சமுள்ளவராகவும் இருந்து வந்தார்கள்.

ஒரு முறை தியாகத் திருநாளுக்கு முன்தினம் ஆயிஷா (ரழி) அவர்கள் நோன்பு நோற்றிருந்தார்கள். அன்று தட்பவெப்ப நிலை மிக மோசமாகவும், உஷ்ணமாகவும் இருந்ததால், அன்னையவர்களுக்கு தாகம் மிகைத்து மயக்க முற்றார். மக்கள் அவர்களின் தலையில் தண்ணீர் தெளித்தனர். 'அன்னையவர்கள் நோன்பை' முறித்து விடுவார்கள்' என்று சிலர் பேசிக் கொண்டது அவர்களின் செவியில் விழவே, "நான் எவ்வாறு நோன்பை முறிப்பேன். இன்றைய தினம் நோன்பு நோற்பது முந்தைய ஆண்டுகளில் செய்த பாவங்ளைக் கழுவக் கூடியதாக இருக்கும் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கின்றேன்" என்று கூறினார்கள்.

ஆயிஷா (ரழி) அவர்கள் கடமையான ஐங்காலத் தொழுகையுடன், தஹஜ்ஜுத் தொழுகையும் இஷ்ராக் தொழுகையும் தொழுது வந்தார்கள். மிக்கப் பேணுதலுடனும், விடாமலும் இத்தொழுகைகளைத் தொழுது வந்த அன்னையவர்கள் ஒரு முறை அறிவித்தார்கள்:-

"என் தாய் தந்தையார் தங்கள் கப்றுகளிலிருந்து எழுந்து வந்து இவ்வழிபாடுகளை விட்டு விடுமாறு என்னிடம் கூறினாலும், நான் விடமாட்டேன்" என்று.

ஆயிஷா (ரழி) அவர்கள் ஆண்டு தோறும் தவறாமல் ஹஜ்ஜு செய்து வந்தார்கள். "ஜிஹாத் என்னும் புனிதப் போர் செய்யும் ஆண்களுக்கு எத்தகைய நன்மை கிடைக்குமோ அத்தகைய நன்மை பெண்களுக்கு ஹஜ்ஜு யாத்திரை மேற்கொள்வதால் கிடைக்கும்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டிருந்த அன்னையவர்கள் ஓர் ஆண்டு கூடத் தவறாமல் ஹஜ்ஜுப் பயணம் மேற்கொண்டார்கள்.

குழு-4

திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்த பெண்மணிகளுள் அன்னையவர்களும் ஒருவராவார். எஞ்சியுள்ளோர் ஹஜ்ரத் ஹப்ஸா (ரழி), ஹஜ்ரத் உம்மு ஸலமா (ரழி), ஹஜ்ரத் வரக்கா (ரழி) ஆகியோராவர்.

அதிகமான ஹதீஸ்களை அறிவித்த ஆறு பேர்களுள் அன்னையவர்களும் ஒருவராவார். அவர்கள் அறிவித்த ஹதீஸ்கள 2210 ஆகும்.

மார்க்கத் தீர்ப்பு வழங்குவதிலும், பாகப்பிரிவினைக் கலையிலும் அன்னையவர்கள் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார்.

“எங்களுக்கு ஏதேனும் சங்கடமான பிரச்சினைகள் வந்து விடுமாயின் அதனைப் பற்றி ஆயிஷா அவர்களிடம் கேட்போம், உடனே அதற்குத் தேவையான ஆதாரம் அவர்களிடமிருந்து எங்களுக்குக் கிடைத்துவிடும்” என்று அபூ மூஸா அஷ்அரீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

இமாம் ஜொஹ்ரீ (ரஹ்) அவர்களோ, “ஆயிஷா (ரழி) அவர்கள் மக்காவில் மிகவும் அறிவு படைத்தவர்களாக இருந்தார்கள். நபித்தோழர்கள் பலர், பல விஷயங்கள் குறித்து ஆயிஷா (ரழி) அவர்களிடம் விளக்கம் தேடி நின்றார்கள்” என்று மிக்க சிறப்பித்துக் கூறுகின்றார்கள்.

அன்னையவர்களிடம் திருக்குர்ஆன், ஹதீஸ் அறிவிற்கு அடுத்த படியாக மொழித்திறன் அமைந்திருந்தது. அவர்களின் சொற்பொழிவுகளும், கடிதங்களும், அறிவும், நயமும் வாய்ந்தவைகளாகும்.

ஹஜ்ரத் ஹாபிஸ் இப்னு அப்துல் பர்(ரஹ்) அவர்கள் ஒரு ஹதீஸை அறிவிக்கின்றார்கள். அது பின்வருமாறு:

“ஆயிஷா (ரழி) பிற பெண்களைவிட எந்த அளவில் சிறப்பிற்குரியவர் என்றால், இதர உணவுகளின் முன்னால் குழம்பு கலந்த ரொட்டி உணவைப் போன்றவர்களாவர்”.

ஹஜ்ரத் அஹ்ன.்.ப் இப்னு கைஸ் (ரழி) ஹஜ்ரத் மூஸா இப்னு தல்ஹா (ரழி) ஆகியோர் கூறுகின்றார்கள்: “வாக்கு சாதுரியத்திலும், திறமையாக உரையாடுவதிலும் ஆயிஷா அவர்களை விடச் சிறந்தவர்களை நாங்கள் காணவில்லை” என்று கூறுகின்றார்கள்.

ஹஜ்ரத் உர்வா இப்னு ஜுபைர் (ரழி) அவர்கள், “திருக்குர்ஆன், நபிமொழி, சட்டம், சரித்திரம், பொது அறிவு ஆகியவற்றில் ஆயிஷா அவர்களை விட வேறெவரும் அதிகமாக அறிந்திருக்க நான் காணவில்லை” என்று கூறுகின்றார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள், “நீங்கள் ஹுமைராவிடமிருந்து மார்க்கத்தின் மூன்றில் ஒரு பங்கைப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்று கூறியுள்ளார்கள்.

ஹுமைரா என்றால் செந்திற மேனியர் என்று பொருள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களை செந்நிற மேனியர் என்று அழைத்து வந்தார்கள். மேற்கண்ட ஹதீஸுக்கொப்ப அன்னையவர்கள் மூலம் கிடைத்த ஹதீஸ்கள் யாவும் மார்க்க சட்ட திட்டங்கள் பற்றியவையாகும்.

தேர்ச்சி 8.0 : அல்-மபாஹிமுல் இஸ்லாமிய்யா நடைமுறை விவகாரங்கள் பற்றி இஸ்லாமிய நோக்கினை அறிந்து கடைப்பிடிப்பார்.

தேர்ச்சி மட்டம் 8.1 : பொதுச் சொத்து பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டத்தை விளக்குவார்.

செயற்பாடு 8.1 : 'பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம், பயன் பெறுவோம்'.

நேரம் : 80 நிமிடங்கள்

தரவிருத்தி உள்ளீடுகள் :
- இணைப்பு 8.1.1 இலுள்ள வரலாற்றுச் சம்பவம்
- இணைப்பு 8.1.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- இணைப்பு 8.1.3 இலுள்ள தகவல் கோவை.
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு

படி 8.1.1 :
- இணைப்பு 8.1.1 இல் உள்ள வரலாற்றுச் சம்பவத்தை வாசித்துக் காட்டுங்கள். அல்லது சுயமாக முன்வந்து வாசிக்கக் கூடிய ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- இந்த வரலாற்றுச் சம்பவம் உணர்த்தும் படிப்பினையை எடுத்துக் காட்டுங்கள்.
- பொதுச் சொத்துக்கள் பற்றியும் அவற்றைப் பயன்படுத்த வேண்டிய முறைகள் பற்றியும் மாணவர்களிடம் வினவுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| • பொதுமக்களுக்குரியதாக மாற்றப்படும் சொத்துக்களும் பொது மக்களுக்காக விடப்பட்டுள்ள அரச சொத்துக்களும் பொதுச் சொத்துக்களாகும். |
| • பொதுச் சொத்துக்கள் பற்றிய சட்டங்களை இஸ்லாமிய ஷரீஆ எடுத்துக் கூறியுள்ளது. |
| • பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்துவோர் அதற்குரிய ஒழுங்கு விதிகளை முறையாகப் பேணி நடக்க வேண்டும். |
| • பொதுச் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வது பாவமாகும். |
| • இஸ்லாம் எதிர்பார்க்கும் ஒழுங்கில் முறையாகப் பொதுச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்ட வேண்டும். |

(10 நிமிடங்கள்)

படி 8.1.2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- இணைப்பு 8.1.3 இலுள்ள தகவல் கோவையினைப் பிரதி செய்து ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.

- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 8.1.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - தனி மனிதர்களினால் அல்லது குழுக்களினால் வக்பு செய்யப்படும் சொத்துக்களும், அரசுக்கு சொந்தமான எல்லாச் சொத்துக்களும் பொதுச் சொத்துக்களாகவே கணிக்கப்படுகின்றன.
> - "நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளுங்கள்." (5:2)
> - "நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றியமை பற்றி நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்".
> - "யார் ரூமாவின் கிணற்றை வாங்கி பொதுமக்களின் பாவனைக்கு விடுகிறாரோ அவருக்கு சுவனம் கிடைக்கும்" எனவும் "ரூமாவின் கிணற்றை தோண்டிச் சுத்தம் செய்வோருக்கு சுவர்க்கம் கிடைக்கும்" எனவும் நபி (ஸல்) அவர்கள் பிரகடனப்படுத்தினார்கள்.
> - பாடசாலை, நூல் நிலையம், பல்கலைக்கழகம், மத்ரஸாக்கள், மஸ்ஜிதுகள், மதவழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் என பல பொதுச் சொத்துக்களுண்டு.
> - பாதைகள், கிணறுகள், கடற்கரை, நீர்வீழ்ச்சி, பூங்கா, பஸ்தரிப்பிடம், ஆறுகள், அரச சொத்துக்கள், ஒதுக்கப்கழிவறைகள், போக்குவரத்து சாதனங்கள், மையவாடிகள் என்பவும் பொதுச் சொத்துக்களில் அடங்கும்.
> - பொதுச் சொத்துக்கள் சமூகத்தின் சொத்துக்களாக இருப்பதனால் அவை துஷ்பிரயோகம் செய்யப்படும்போது அடுத்த சந்ததிக்கு அவற்றின் பயனையோ, நன்மையையோ அனுபவிக்க முடியாமற் போய்விடும்.
> - பொதுச் சொத்துக்களுக்கு குறிப்பான உரிமையாளர்கள் இல்லாமையால் அவற்றை முறையாகப் பயன்படுத்துவதும் பாதுகாப்பதும், சேதமடைந்தால் புனர்நிர்மாணம் செய்வதும் யாவரினதும் பொதுக் கடமையாக அமையும்.
> - பொதுச் சொத்துக்களை உருவாக்குதல் அவற்றைக் காத்தல் போன்ற பணிகளுக்கு அல்லாஹ்வின் திருப்தியும் நற்கூலியும் கிடைப்பதோடு மக்களின் பிரார்த்தனையும் கிட்டும் உட்படும்.

- பொதுச் சொத்துக்களை முறையாகப் பயன்படுத்தாது அவற்றை சேதப்படுத்தல், அசிங்கப்படுத்தல் போன்ற தவறுகளுக்காக அல்லாஹ்வின் கோபமும், தண்டனையும் கிடைப்பதோடு சமூகத்தின் சாபமும் கிட்டும்.
- பொதுச் சொத்தக்களைப் பாதுகாத்தலும் வளப்படுத்தலும் மாபெரும் சமூக சேவையாகும். அவற்றை சேதப்படுத்துவதும் அசிங்கப்படுத்துவதும் சமூக விரோதச் செயலாகும்.
- பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தக் கூடாது என அறிவுறுத்துவதும், சேதப்படுத்துவோருக்கு எச்சரிக்கை செய்வதும் சமூகத்தின் கடமையாகும்.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- பொதுச் சொத்துக்கள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளக்குவார்.
- பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது எமது பொறுப்பு என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பொதுச் சொத்துக்களை வகைப்படுத்திக் காட்டுவார்.
- பொதுச் சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்துவார்.
- பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதிலும் வளப்படுத்துவதிலும் தனியாகவும் கூட்டாகவும் ஈடுபடுவார்.

**இணைப்பு 8.1.1**

**வரலாற்றுச் சம்பவம்**

முதல் கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களுக்கு ஊதியமாக வருடத்திற்கு கோடையில் இரு சோடி அத்தோடுத் துணிகளும் குளிர் காலத்தில் இரு போர்வைகளும் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் குடும்பத்தாருக்கு தேவையான உணவு அனுதினமும் தரப்பட வேண்டும் எனவும் முஸ்லிம் சமூகத்தின் முக்கிய தலைவர்கள் ஆலோசனை செய்து முடிவெடுத்தனர்.

அபூபக்ர் (ரழி) அவர்களும் இந்த முடிவை சந்தோசத்துடன் ஏற்றார்கள். அத்துடன் தன்னுடைய சொத்துக்கள் அத்தனையையும் பைத்துல் மால் நிர்வாகியிடம் ஒப்படைத்தார்கள். அப்படிச் செய்ய வேண்டிய கட்டாய நிலை இல்லாவிட்டாலும் கூட தமக்கு சொத்து சுகங்களிருக்க மக்களது பணத்தை பயன்படுத்துவது தமது நேர்மையை குலைக்கும் செயலாகும் என்பதால் அவ்வாறு முடிவெடுத்தார்கள். தம்முடைய வியாபாரத்தையம் நிறுத்திக் கொண்டார்கள். அரசாங்கம் அளித்திருந்த சிறிய வீட்டினுள் குடிபுகுந்தார்கள். அரசு வழங்கிய சம்பளமோ மிக எளிமையாக வாழ்வதற்கே போதுமானதாயிருந்தது. எனினும் அதை அவர்கள் அமைதியுடனும் திருப்தியுடனும் சந்தோசத்துடனும் ஏற்று வாழ்ந்தார்கள்.

ஒரு நாள், உணவு நேரத்தில் தம் முன் வைக்கப்பட்ட இனிப்புப் பலகாரத்தைக் கண்டு அபூபக்கர் (ரழி) அவர்கள் வியப்பால் புருவங்களை உயர்த்தினார்கள். அதைக் குறித்து மனைவியிடம் விசாரித்தார்கள்.

"இனிப்பு செய்வதற்கான பணம் எப்படிக் கிடைத்தது". "குடும்ப செலவுக்காக அளவுக்காக அளிக்கப்பட்ட பணத்திலிருந்து சிறுக... சிறுக... சேமித்து அதைக் கொண்டு இந்த இனிப்பைச் செய்தேன்" என்றார் அவ்வம்மையார் நாணத்துடன். கணவர் தம்மைப் பாராட்டுவார், தம் செயலைப் போற்றுவார் என்ற இயல்பான பெண்மையின் நாணமே அது.

ஆனால் அங்கு நடந்ததோ வேறு.

மனைவியின் பதிலை கேட்டு அபூபக்ர் (ரழி) அவர்கள் திடுக்கிட்டார்கள். பதற்றத்துடன் சொன்னார்கள்: "என்ன...? நமக்கு அளிக்கப்படும் மக்களின் பணத்திலிருந்து மிச்சப்படுத்தி செய்ததா? நாம் இன்னும்

வசதியுடன் வாழ்ந்து வருகிறோம் போலிக்கிறது. நமது தேவைக்கு அதிகமாக அரச பணம் செலவழிவதையே இது புலப்படுத்துகிறது."

உடனே திறைசேரி அதிகாரிக்கு உத்தரவு பறக்கிறது.

ஊதியத்திலிருந்து குறித்த தொகை கழிக்கப்பட்டு விடுகிறது. இதனால் அபூபக்ர் (ரழி) அவர்கள் அமைதியடைகிறார்கள். இரண்டு ஆண்டுகள் வரை மிகவும் எளிமையாக வாழ்ந்து மக்களுக்கு சுபீட்சத்தை அளித்த கலீபா நோயுறுகிறார்கள். மரண தறுவாயில் தம் மனைவி மக்களை அழைத்த அபூபக்ர் (ரழி),

"இதுவரையும் நாம் பயன்படுத்திய பைதுல்மால் பணம் எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்" என்றார்கள். பிள்ளைகள் தொகையைக் கணக்கிட்டுக் கூறினார்கள்.

"பிள்ளைகளே...! நான் இறந்த பின் என்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிடுங்கள். நாம் பயன்படுத்திய மக்கள் பணத்தை அதிலிருந்து எடுத்து பைதுல் மாலுக்குத் திருப்பி விடுங்கள். ஒவ்வொரு நாணயமும் இதன் மூலம் திருப்பி செலுத்தப்பட்டுவிடும்" என்று கோரிக்கை விடுத்தார்கள். அவர்களின் விருப்பம் பூர்த்தி செய்யப்பட்டது.

அபூபக்ர் (ரழி) வபாத்தின் பின் கலீபாவாகப் பொறுப்பேற்ற உமர் (ரழி) அவர்களிடம் அபூபக்ர் (ரழி) அவர்களின் கோரிக்கை தெரிவிக்கப்பட்டது.

அதைக் கேட்டு உமர் (ரழி) அவர்கள் தேம்பிங்களும் தேம்பி அழலானார்கள். அழுகையுடன்,

"ஓ...! அபூபக்ரே...! உங்களுக்குப் பின்னால் வரும் எவரும் பின்பற்ற ஒரு நல்ல முன்மாதிரியை உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கிறீரகளே...! எனக் கூறினார்கள்.

**இணைப்பு 8.1.2**

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**'பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்போம், பயன் பெறுவோம்.'**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- இணைப்பு 8.1.3 இலுள்ள தகவல் கோவையின் பிரதியினைப் பெற்று உசாவுங்கள்
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 பொதுச் சொத்துக்கள் தொடர்பான இரண்டு குர்ஆன் வசனங்களை கண்டறிந்து பொருளுடன் எழுதுங்கள்.

குழு-2 பொதுச் சொத்துக்கள் வழங்குதல், பாதுகாத்தல் என்பவற்றைத் தூண்டும் இரண்டு ஹதீஸ்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-3 பாடசாலையிலுள்ள பொதுச் சொத்துக்களைப் பட்டியற்படுத்தி அவற்றை பயன்படுத்துவது, பாதுகாப்பது பற்றி உங்கள் கருத்தை முன்வையுங்கள்.

குழு-4 பாடசாலைக்கு வெளியில் உள்ள பொதுச் சொத்துக்களைப் பட்டியற்படுத்தி அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது, பாதுகாப்பது பற்றி கண்டறிந்து எழுதுங்கள்.

இணைப்பு 8.1.3

## பொதுச் சொத்துக்கள்

தனிநபர்களினால் அமைப்புக்களினால் வக்பு அடிப்படையில் பொது மக்களுக்குரியதாக மாற்றப்படும் சொத்துக்களும், அரசினால் பொதுமக்களின் பாவனைக்காக அனுமதித்துள்ள சொத்துக்களும் பொதுச் சொத்துக்களாகக் கணிக்கப்படுகின்றன.

பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தல், பாதுகாத்தல் தொடர்பான பல குர்ஆன் வசனங்களும் பல நபிமொழிகளும் உள்ளன. "நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்" (குர்ஆன் 5:2)

"அவன் (உங்களிலிருந்து) திரும்பி விட்டால், பூமியில் குழப்பம் விளைவிக்கவும், விவசாயத்தையும், சந்ததியையும் (அழித்து) நாசமாக்கி விடவும் அதில் முயற்சி செய்கின்றான். இன்னும் அல்லாஹ் குழப்பத்தை விரும்ப மாட்டான்" (குர்ஆன் 2:205)

"ஸஃத் (ரழி) அவர்கள் தனது தாயார் வபாத்தானபோது அவர் சார்பாக ஓர் நிலையான தர்மம் செய்வதற்கு விரும்பினார். நபி (ஸல்) அவர்களிடம் வந்து எந்த தர்மம் மிகவும் சிறந்தது எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "கிணறு வெட்டி பொது மக்களுக்கு விடுவீராக" என்றார்கள். அவ்வாறு கிணறு வெட்டுவதற்காக ஸஃத் (ரழி) அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். (ஆதாரம்: அபூ தாவூத், நஸாஈ)

இமாம் அபூதாவூத் (ரஹ்) அவர்கள் நிழல் பெறும் மரங்களை வெட்டுவது தொடர்பாக ஒரு ஹதீஸுக்கு பின்வரும் விளக்கத்தை வழங்கியுள்ளார்கள். "திறந்த வெளியில், பயணிகளும் விலங்குகளும் நிழல் பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய வகையில் உள்ள இலந்தை மரத்தை வீணாகவும், அநியாயமாகவும் முறையின்றியும் வெட்டுகின்றவர் எவரோ அவரது தலையை அல்லாஹ் நரகத்தில் போடுவான்" (நூல் அபூதாவூத்)

கற்றல்-கற்பித்தலுக்காக அரசு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள ஒரு களமே பாடசாலையாகும். ஒரு களமே பாடசாலைலையை கற்றலுக்கும், கற்பித்தலுக்குமாக அங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள பொதுச் சொத்துக்களை உரிய முறையில் உச்ச பயனை அடையக் கூடிய வகையில் பயன்படுத்துவது அதில் சம்பந்தப்படுகின்றவர்கள் அனைவர் மீதும் கடமையாகும். மாறாக அதனைத் துஷ்பிரயோகம் செய்வதும், சேதப்படுத்துவதும் சமூக அநீதியாகும். அதன் விளைவுகள் பாரதூரமானவை. உதாரணமாக பாடசாலைக் கட்டடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள், பாடநூல்கள், சேதப்படுத்தப்படுவதைக் குறிப்பிடலாம்.

பொதுச் சொத்துக்களில் அடங்குகின்ற கட்டடங்கள், கல்வி நிலையங்கள், நீர் நிலைகள், போக்குவரத்து சாதனங்கள், இயற்கை வளங்கள், அரச சொத்துக்கள், பொதுக் கழிப்பறைகள், மதவழிபாட்டுத் தலங்கள், நூல் நிலையங்கள் என்பவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டும். அவற்றுக்கு சேதம் விளைவிப்பதும் அசிங்கப்படுத்துவதும் சமூக அநீதியாகும். இதன் விளைவாக அடுத்த சந்ததியினர் அல்லது ஏனையோர் பாதிக்கப்படுவார்கள். ஆகவே பொதுச் சொத்துக்களை முறையாகப் பயன்படுத்துவதும் அவற்றைப் பாதுகாப்பதும் அவற்றுக்கு சேதம் விளைவிப்போரை நல்வழிப்படுத்துவதும் சமூகக் கடமைகளாகும்.

| | | | |
|---|---|---|---|
| தேர்ச்சி | 8.0 | : | **நடைமுறை விவகாரங்கள் பற்றி இஸ்லாமிய நோக்கினை அறிந்து கடைப்பிடிப்பார்.** |
| தேர்ச்சி மட்டம் | 8.2 | : | பொழுதுபோக்குச் சாதனங்கள் பற்றியும் அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தை விளங்கி அதன்படி செயற்படுவார். |
| செயற்பாடு | 8.2 | : | **"பொழுதுபோக்குச் சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவோம்.'** |
| நேரம் | | : | 80 நிமிடங்கள் |

தரவிருத்தி உள்ளீடுகள் :

- இணைப்பு 8.2.1 இலுள்ள பொழுதுபோக்குச் சாதனங்களின் பயன்பாட்டை விளக்கும் வரிப்படம்.
- இணைப்பு 8.2.2 இலுள்ள குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்.
- இணைப்பு 8.2.3 இலுள்ள தகவல் கோவை - நான்கு பிரதிகள்.
- டிமை கடதாசிகள், நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு**

படி 8.2.1 :

- இணைப்பு 8.2.1 இல் உள்ள வரிப்படத்தை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.
- ஒரு பயனை மாத்திரம் தரும் பொழுதுபோக்குகளையும், பல பயன் தரும் பொழுதுபோக்குகளையும் எவ்வாறு வகைப்படுத்தலாம் என்பதை மாணவரிடம் வினவுங்கள்.
- மாணவர்கள் மேற்கொள்ளும் பொழுதுபோக்குகள் பற்றி விசாரியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

> - உழைப்பால் சோர்வடைந்த உடலையும் உள்ளத்தையும் உற்சாகப்படுத்தவும் ஓய்வு நேரத்தைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தவும் உதவும் சாதனங்களே பொழுதுபோக்குச் சாதனங்களாகும்.
> - பயனுள்ள பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதை இஸ்லாம் வரவேற்கின்றது.
> - பொழுதுபோக்கு பற்றிய வரையறைகளை இஸ்லாம் எடுத்துக் கூறியுள்ளது.
> - நவீன பொழுதுபோக்குச் சாதனங்களை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.
> - பொழுதுபோக்குச் சாதனங்கள் தனக்கும் ஏனையோருக்கும் பயனுள்ளதாக அமைதல் வேண்டும்.

(10 நிமிடங்கள்)

படி 8.2.2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு பத்திரத்தை வழங்குங்கள்.
- இணைப்பு 8.2.1.3 இலுள்ள தகவல் கோவைப் பிரதிகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், பேனாக்கள், கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

(40 நிமிடங்கள்)

படி 8.2.3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்.

> - உள்ளத்திற்கும், உடலிற்கும் தெம்பு தரும் பொழுதுபோக்குகளில் ஈடுபடுவதற்கு இஸ்லாம் அனுமதியளித்துள்ளது.
> - உழைப்பால் சோர்வடைந்த உடலுக்கும் கலங்கிப் போன உள்ளங்களுக்கும் பொழுதுபோக்கு இன்றியமையாததாகும்.
> - "உடல் சோர்வடைவதுபோல் உள்ளமும் சோர்வடைகின்றது. எனவே உங்கள் உள்ளங்களுக்கு பயனளிக்கும் பொழுதுபோக்குகளை வழங்கி அவற்றுக்கு ஆறுதல் அளியுங்கள்" என அலி (ரழி) அவர்கள் குறிப்பிட்டார்கள்.
> - நபி (ஸல்) அவர்களும் பயனுள்ள பொழுதுபோக்குகளில் ஈடுபட்டுள்ளார்கள்.
> - நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரழி)யுடன் போட்டியாக ஓடியுள்ளார்கள். 'ருகானா' எனும் மல்யுத்த வீரனுடன் மல்யுத்தம் புரிந்துள்ளார்கள்.
> - "நீங்கள் அம்பெறிந்து பழகுங்கள், குதிரைச்சவாரி செய்யுங்கள்" (முஸ்லிம்) என்று நபி (ஸல்) அவர்கள் வீரதீரச் செயல்களில் ஈடுபடுமாறு உற்சாகப்படுத்தியுள்ளார்கள்.
> - பலசாலியான ஒரு மு.்.மின் பலவீனமான மு.்.மினைவிட சிறந்தவனும் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமுடையவனுமாவான்" (முஸ்லிம்)
> - "அடிக்கடி உங்கள் உள்ளங்களுக்கு ஓய்வைக் கொடுங்கள். ஏனெனில், சோர்வுள்ள உள்ளம் இருளடைந்து விடும்" என அலி (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

- இன்றைய நவீன பொழுதுபோக்குச் சாதனங்களை நாம் முறையாகக் கையாளாவிட்டால், அவற்றால் தீமைகளும் அதிகமாக நேரலாம்.
- தமது உடலுக்கும், உள்ளத்திற்கும் ஏனையோருக்கும் பயனளிக்கக் கூடிய விதத்தில், பொழுதுபோக்கு களையும் பொழுதுபோக்குச் சாதனங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.
- பொழுதுபோக்குகளும் பொழுதுபோக்குச் சாதனங்களும் வெறுமனே சிரிப்பூட்டும் கேளிக்கைகளாகவும், இறை சிந்தனையை மறக்கடிக்கும் சாதனங்களாகவும் அமையக் கூடாது.
- "நீங்கள் அதிகம் சிரிக்க வேண்டாம். அதிகமாக சிரிப்பது உள்ளத்தை மரிக்கச் செய்யும்" (புஹாரி).
- "மனிதர்களில் சிலர் இருக்கின்றனர். அவர்கள் வீண் கேளிக்கைகளை விலைக்கு வாங்கி அல்லாஹ்வுடைய வழியிலிருந்து அறிவின்றி மக்களை வழிகெடுத்து, அதனை (அல்லாஹ்வின் வழியை) பரிகாசமாகவும் எடுத்துக் கொள்கின்றனர். இத்தகையோருக்கு இழிவு தரும் வேதனை நிச்சயமாக உண்டு" (31:06).

(30 நிமிடங்கள்)


கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

**"பொழுதுபோக்கு சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவோம்"**

- இஸ்லாம் அனுமதித்துள்ள சில பொழுதுபோக்கு நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுவார்.
- நபி (ஸல்) அவர்கள் உற்சாகப்படுத்திய சில பொழுதுபோக்குகளை விளக்குவார்.
- நவீன பொழுதுபோக்குச் சாதனங்களை இஸ்லாமிய வரையறைக்குள் முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- நற்பயன்கள் பெறும் விதத்தில் நவீன பொழுதுபோக்குச் சாதனங்களைக் கையாள்வார்.
- நவீன பொழுதுபோக்குச் சாதனங்களைப் பயனுள்ள வழியில் கையாள்வதற்கு ஏனையோருக்கும் வழிகாட்டுவார்.

இணைப்பு 8.2.1

பொழுது போக்குகள்




இணைப்பு 8.2.2

குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்

**"நவீன பொதுழுபோக்குச் சாதங்களை முறையாகப் பயன்படுத்துவோம்."**

- உங்களது குழுவுக்குக் வழங்கப்பட்ட தலைப்பில் கவனம் செலுத்துங்கள்.
- இணைப்பு 8.2.3 இலுள்ள தகவல் கோவையின் பிரதியினைப் பெற்று நன்கு உசாவுங்கள்.
- நன்கு கலந்துரையாடி உங்களது அறிக்கையைத் தயார்படுத்துங்கள்
- நீங்கள் தயார்படுத்திய அறிக்கையை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுங்கள்.

குழு-1 பொழுதுபோக்கு பற்றிய இரண்டு குர்ஆன் வசனங்களையும், இரண்டு ஹதீஸ்களையும் எழுதி அவற்றில் உள்ளடங்கியுள்ள கருத்துக்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-2 நபி (ஸல்) அவர்களது வாழ்வில் இடம்பெற்ற பொழுதுபோக்குகள் இரண்டை எழுதி அவற்றை எவ்வாறு நமது வாழ்வுடன் தொடர்புபடுத்தலாம் என்று கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-3 நவீன பொழுதுபோக்குச் சாதனங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பயன்பாடுகளை அட்டவணைப்படுத்தி எழுதுங்கள்.

குழு-4 முறையற்ற வழியில் பயன்படுத்தப்படும் நவீன பொழுதுபோக்குச் சாதனங்களை எவ்வாறு முறையாகப் பயன்படுத்தலாம் என்று உங்களது ஆலோசனைகளை முன்வையுங்கள்.

**பொழுதுபோக்கு பற்றிய இஸ்லாமியக் கருத்து**

உழைப்பால் சோர்வடைந்த உடலையும் உள்ளத்தையும் உற்சாகப்படுத்துவதற்காகவும் ஓய்வு நேரத்தைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துவதற்காகவும் இஸ்லாம் பொழுதுபோக்குச் சாதனங்களைப் பயன்படுத்த அனுமதித்திருக்கின்றது.

பொழுதுபோக்குகள் வரையறைக்குட்படும்போது எமது உள்ளத்திற்கும் உடலுக்கும் மட்டுமன்றி ஏனைய மக்களுக்கும் இறைவனின் படைப்புக்களுக்கும் சிறந்த பயனைப் பெற்றுக் கொடுக்கும்.

“இன்னும் தன்னருளால் இரவையும், பகலையும் உங்களுக்கு அவனே ஆக்கினான். (இரவை) அதில் நீங்கள் இளைப்பாறுவதற்கும், பகலை நீங்கள் (அதில்) அவனுடைய அருளைத் தேடிக் கொள்வதற்கும் இன்னும் நீங்கள் (அவனுக்கு) நன்றி செலுத்துவதற்காகவும் (அவ்வாறு ஆக்கியுள்ளான்)” (28:73).

“மக்கள் மறந்திருக்கக் கூடிய இரண்டு அருள்கள் உள்ளன. அவை ஆரோக்கியமும் ஓய்வும் ஆகும்” (புஹாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (ரழி) அவர்களுடன் ஓட்டப் போட்டியில் ஈடுபட்டார்கள். ‘ருகானா எனும் மல்யுத்த வீரனுடன் போட்டியிட்டுள்ளார்கள்.

“நீங்கள் அம்பெறிந்து பழகுங்கள், குதிரைச் சவாரி செய்யுங்கள்’ ((முஸ்லிம்).

ஒரு முறை வயோதிபப் பெண்ணொருத்தி தனக்கு சுவர்க்கம் கிடைக்குமா எனக் கேட்டபோது “வயோதிபர் சுவர்க்கம் செல்ல மாட்டார்கள்” என்று நபியவர்கள் விகடமாகச் சொன்னார்கள். அப்பெண் அழத் துவங்கியபோது “இல்லை எல்லோரும் குமரிப் பருவமுடையவர்களாகவே சுவர்க்கம் நுழைவார்கள்” என ஹாஷ்யமாகக் கூறினார்கள்.

நவீன பொழுதுபோக்குச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, கணினி, இணையம், கையடக்கத் தொலைபேசி, நூல்கள் என்பவற்றை முறையாகப் பயன்படுத்தினால் அவை மனித முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். மாறாக அவற்றைத் துஷ்பிரயோகம் செய்தால் சமூக அழிவிற்கும் நாசத்திற்கும் காரணமாக அமையும்.

## 8.11 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்-கற்பித்தல் செயன்முறையினூடாக உத்தேச கற்றற் பேறுகளை மாணவர் அடைந்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்துவதற்கும், மாணவர் அடைந்துள்ள பாண்டித்திய மட்டத்தை இனங் காண்பதற்குமாக வகுப்பறையில் எளிமையாக நடைமுறைப்படுத்தத் தக்க இடைத்தொடர்புகளுடன் கூடிய இரண்டு வேலைத் திட்டங்களாக கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் குறிப்பிடலாம். கணிப்பீடு சீராக நடத்தப்படுமாயின், வகுப்பறையில் கற்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் குறித்த தேர்ச்சி தொடர்பாக அண்ணளவான பாண்டித்திய மட்டத்தையேனும் எட்டுவது கடினமாக அமைய மாட்டாது. மேலும் மாணவர் எட்டியுள்ள பாண்டித்திய மட்டத்தை இனங்காண்பதே மதிப்பீட்டின் நோக்கமாகும்.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்களுக்குத் தமது மாணவர்களுக்கு இரு வழிகளில் துணை புரியலாம். அவை பின்னூட்டலும் (Feed Back) முன்முகவூட்டலும் (Feed Forward) ஆகும். மாணவரது நலிவுகளையும் இயலாமைகளையும் இனங்கண்டவுடன் அவர்களது கற்றல் இடர்ப்பாடுகளைக் களைவதற்காகப் பின்னூட்டல் வழங்குதல் வேண்டும். மேலும் அவர்களது வலிவுகளையும் இயலுமைகளையும் இனங்கண்டவுடன் அவ்வாற்றல்களை விருத்தி செய்து கொள்ளத்தக்க வகையில் முன்முகவூட்டலையும் ஆசிரியர் வழங்குதல் வேண்டும்.

கற்றல்-கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக, கற்கைநெறியின் தேர்ச்சிகளுள் எந்தெந்தத் தேர்ச்சிகளை எந்தெந்த மட்டங்களில் அடைய முடிந்தது என்பதை மாணவர்கள் இனங்காணல் வேண்டும். மாணவர் அடைந்துள்ள பாண்டித்திய மட்டத்தை மதிப்பீட்டு வேலைத் திட்டத்தின் ஊடாக ஆசிரியர் இனங்காணுதல் வேண்டும். மேலும் மாணவரது முன்னேற்றம் தொடர்பாக மாணவருக்கும் பெற்றோருக்கும் உரிய ஏனைய தரப்பினருக்கும் அறிவித்தலும் ஆசிரியரின் பொறுப்புக்களுள் அடங்கும்.

இக்கலைத்திட்டம் மாணவர் மைய (Student Centred) தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட (Competency Based) செயற்பாடு சார்ந்த (Activity Oriented) அணுகுமுறையைக் கொண்டதாகும். மாணவர் தமது வாழ்க்கையைப் பொருளுடையதாக ஆக்கிக் கொள்வதற்காக செயல் மூலம் கற்றலே ஆசிரியரது நிலைமாற்ற வகிபாகத்தின் (Transformation Role) தாரக மந்திரமாகும்.

முன்கூட்டியே விருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் தொடரகத்தின் வழியே நடைமுறைப்படுத்தப் படும் இக்கலைத்திட்டத்தினூடாக கற்றல்-கற்பித்தலை கணிப்பீடு மதிப்பீட்டோடு ஒன்றிணைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தந்தச் செயற்பாட்டின் இரண்டாம் படிமுறையில் மாணவர்கள், குழுநிலையில் கண்டறிகையில் ஈடுபடும்போது கணிப்பீட்டையும் செயற்பாட்டின் மூன்றாவது படிமுறையில் தாம் கண்டறிந்தவற்றை முன்வைக்கும்போதும் விரிவாக்கும்போதும் மதிப்பீட்டையும் ஆசிரியர் நடத்தலாம். மாணவர் தேடியறியும்போது அருகே சென்று மாணவரிடையே சஞ்சரித்து அவர்கள் ஆற்றும் பணிகளை அவதானித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வகுப்பறையிலேயே தீர்த்துக் கொள்வதற்கான வசதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதே ஆசிரியரின் பணியாக அமையும்.

கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் எளிதாக நடத்தத்தக்க வகையில் உச்ச அளவாக ஐந்து நியதிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று நியதிகள் அந்தந்தத் தேர்ச்சியை உருவாக்குவதில் பங்களிக்கும் அறிவு, மனப்பாங்கு, திறன்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன. மீதி இரண்டு நியதிகளும், வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக அமையும் இரண்டு ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்கு மாணவர்க்கு உதவத் தக்கனவாகும். இந்தப் பிரமாணங்களுடன் இணைந்த நான்கு, ஐந்து நடத்தை மாற்றங்களையும் மாணவர்கள் வகுப்பறையில் செயற்படும்போது இனங்காண ஆசிரியர் முயற்சித்தல் வேண்டும். அவ்வாற்றல்கள் விருத்தியடைவதைக் கணிப்பீட்டின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு விருத்தி செய்து கொண்ட நடத்தையை அளவிடும் பணி மதிப்பீட்டினூடாக நடத்தப்பட வேண்டும்.

கணிப்பீடு-மதிப்பீடு வேலைத்திட்டத்தை மேம்படுத்துவதால் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை விரிவுபடுத்தலாம். இவ்வாறாக கற்றல்-கற்பித்தலை விரிவுபடுத்துவதற்காக முதலில் செயற்பாட்டுத் தொடரகத்தில் அடங்கியுள்ள செயற்பாடுகளை சில கூறுகளாகப் பிரித்துக் கொள்ளல் வேண்டும். பின்னர் மாணவரது கற்றலை விருத்தி செய்யத்தக்க வெவ்வேறுபட்ட வழிவகைகள் சிலவற்றையும் அந்தந்தச் செயற்பாட்டுப் பிரிவுடன் தொடர்புறும் பாட உள்ளடக்கத்தையும் இனங்காண வேண்டும். தெரிவு செய்யப்பட்ட வெவ்வேறுபட்ட வழிவகைகளை அடிப்படையாகக் கொண்டு மாணவருக்கும் ஆசிரியருக்கும் வேண்டிய அறிவுறுத்தல்களை உள்ளடக்கி கற்றல் கற்பித்தல் செயன்முறையை விரிவுபடுத்தும் கருவிகளைத் தயாரித்தல் அடுத்த கட்ட நடவடிக்கையாகும்.

ஒவ்வொரு செயற்பாட்டுப் பிரிவின் தொடக்கத்திலும் இக்கருவிகளை மாணவருக்கு அறிமுகஞ் செய்தல் ஆசிரியரின் பொறுப்பாகும். கற்றல்-கற்பித்தலை விரிவுபடுத்துவதற்காக ஆசிரியர் கையாளத்தக்க சில வழிவகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- எண்ணக்கருப் படங்கள் (Concept Maps)
- சுவரேடுகள் (Wall News Papers)
- புதிர் நிகழ்ச்சிகள் (Quizzes)
- வினா - விடைப் புத்தகங்கள் (Question and answer books)
- மாணவர் செயலடைவுக் கோவைகள் (Portfolio)
- மாணவர் ஆக்கக் கண்காட்சிகள் (Exhibitions)
- விவாதங்கள் (Debates)
- குழுக் கலந்துரையாடல்கள் (Panel Discussions)
- கருத்தரங்குகள் (Seminars)
- ஆயத்தமின்றிய உடனடி உரையாற்றல்கள் (Impromptu Speeches)
- போலச் செய்தல்கள் (Role plays)
- இலக்கிய உசாவுகை முன்வைப்புகள் (Presentation of Literary Review)
- களப் பதிவேடுகள்/ இயற்கை ஆய்வு நாட்குறிப்பேடுகள்/ நற்பணிப் பதிவேடுகள் (Field books/ Nature diaries)
- செயன்முறைச் சோதனைகள் (Practical Tests)

உத்தேச கற்றல்-கற்பித்தலை விரிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பங்களும் அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கருவிகளும், ஆவணத்தின் மூன்றாம் பகுதியில் தரப்படும். இவ்வாறாக செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபடும் வேளைகளிலும் செயற்பாடுகளுக்கு இடையிலும் கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் இரு விதங்களில் நடத்துவதனூடாக கற்றல்-கற்பித்தல் செயன்முறை மேலும் விரிவடையும். இது மாணவர் ஆர்வத்துடனும், களிப்புடனும் கற்றலில் ஈடுபட வழிகோலும்.

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

கருவி இலக்கம் 1

1. பாடசாலைத் தவணை : முதலாம் தவணை

2. உள்ளடங்கும் தேர்ச்சிகள் : 2.3, 2.4, 2.5

3. உள்ளடங்கும் பாடப்பகுதி : ஸகாத், நோன்பு ஹஜ்

4. கருவியின் தன்மை : கையேடு

5. கருவியின் நோக்கம் :
   - ஸகாத், நோன்பு, ஹஜ் என்பன சமூகநலன் சார்ந்தவை என்பதை விளங்கிக் கொள்வார்.
   - எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்வார்.
   - கையேடு தயாரிக்கும் திறனைப் பெற்றுக் கொள்வார்.
   - கூட்டாக செயற்படும் பயிற்சியைப் பெற்றுக் கொள்வார்.

6. கருவியைச் செயற்படுத்துவற்கான ஆலோசனைகள்:

   (i) ஆசிரியருக்கானவை:
   - செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தப்படும் முறையினை சுருக்கமாக விளக்குங்கள்.
   - மாணவரை ஏழு குழுக்களாகப் பிரியுங்கள்.
   - கையெழுத்துச் சஞ்சிகை தயாரிப்பில் மொழிச் செம்மை எழுத்துப் பொறிமுறை, கோவைப்படுத்தல், பத்திரிகை வெளியிடல் போன்ற பணிகளுக்கென சஞ்சிகைக் குழுவொன்றைத் தெரிவுசெய்யுங்கள்.
   - ஏனைய குழுக்களுக்குத் தலைப்புக்கள் தெரிவு செய்து வழங்குங்கள்.
   - தகவல்களைத் திரட்டக் கூடிய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றைப் பயன்படுத்த வழிப்படுத்துங்கள்.
   - திரட்டிய தகவல்களை தர்க்க ரீதியாக ஒழுங்குபடுத்தி கட்டுரைகளாகவோ, கவிதைகளாகவோ, இரண்டும் இணைந்த நிலையிலோ உரையாடல் பாணியிலோ எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
   - தேவையான உபகரணங்களைப் பெற வழிப்படுத்துங்கள்.
   - செயற்பாட்டினை பூர்த்தி செய்வதற்கான காலத்தைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

- நூல்களையோ, பிற ஆக்கங்களையோ மொத்தமாகப் பிரதி செய்யாதிருக்க வழிகாட்டுங்கள்.
- உரிய நியதிப்படி புள்ளி வழங்குங்கள்.
- தேவையான பின்னூட்டல்களை வழங்குங்கள்.

**(ii) மாணவருக்கானவை:**

- அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுங்கள்
- பாடநூல்களிலோ, வேறு நூல்களிலோ, சஞ்சிகைகளிலோ இருந்து ஆதாரபூர்வமான தகவல்களைத் திரட்டிக் கொள்ளுங்கள்.
- அண்மையில் வாழும் நிபுணத்துவ அறிஞர்கள், உலமாக்கள் போன்றோருடன் உரையாடியோ செவ்வி கண்டோ தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- நூல், சஞ்சிகைகளைப் பிரதிபண்ணுவதை விடுத்து உங்கள் சொந்த மொழிநடையில் ஆக்கங்களை தயாரியுங்கள்.
- கவரக் கூடிய வடிவமைப்பில் கையேட்டைத் தயாரித்து, வெளியிட்டு, அறிமுகஞ் செய்து உங்கள் பாடசாலை நூலகத்தில் அதனை வைப்பதற்காக ஏற்பாடு செய்யுங்கள்.

### குழுக்களுக்கான செயற்பாடுகள்

குழு-1 ஸகாத்தின் மூலம் தனிநபர் அடைகின்ற பயனை இனங்கண்டு தொகுத்து கட்டுரையாகவோ, கவிதையாகவோ, பத்திரிகைக்கான கடிதமாகவோ 100 சொற்களில் எழுதுங்கள்.

குழு-2 ஸகாத் மூலம் சமூகம் அடைகின்ற பயனை இனங்கண்டு தொகுத்து கட்டுரையாக எழுதுங்கள்.

குழு-3 நோன்பு நோற்பதன் மூலம் தனிநபர் ஆன்மீக ரீதியாகவும், உலகியல் ரீதியாகவும் அடைகின்ற பயன்களை கட்டுரையாகவோ, கவிதையாகவோ, சிறு நாடகமாகவோ எழுதுங்கள்.

குழு-4 நோன்பு நோற்பதன் மூலம் சமூகம் அடைகின்ற பயன்களை கட்டுரையாகவோ, உரைச் சித்திரமாகவோ எழுதுங்கள்.

குழு-5 ஹஜ்ஜை நிறைவேற்றுவதன் மூலம் தனிநபர் அடைகின்ற பயன்களை கட்டுரையாகவோ, கவிதையாகவோ எழுதுங்கள்.

குழு-6 ஹஜ்ஜை நிறைவேற்றுவதன் மூலம் சமூகம் அடைகின்ற பயன்களை கட்டுரையாகத் தொகுத்து எழுதுங்கள்.

குழு-7 ஆறு குழுவினரதும் தொகுத்தவற்றை வாசித்து எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை, கருத்து மயக்கம் போன்றவற்றை கண்டறிந்து மொழியை செம்மைப்படுத்தி அழகாக எழுதி நூலாகக் கட்டி அட்டைப் படத்துடன் வெளியிடுங்கள்.

7. புள்ளி வழங்கும் நியதிகள்

| குழு இலக்கம் / பெயர் | நியதிகள் | குறிக்கோளுடன் தொடர்புறும் தன்மை | தகவல் திரட்டலில் மேற்கொள்ளப்பட்ட உபாயங்கள் | தகவல்கள் அமைக்கப்பட்டுள்ள வடிவங்களின் பொருத்தப்பாடு (கதை, கட்டுரை, கவிதை, உரையாடல்) | மொழிச் செம்மையும் அழகும் | அட்ட உட்பட கையேட்டின் முழுமைத்துவம் | குழு ஒருமைப்பாடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |
| 4. | | | | | | | |
| 5. | | | | | | | |
| 6. | | | | | | | |
| 7. | | | | | | | |

8. புள்ளித் திட்டம்

- மிக நன்று 4
- நன்று 3
- சாதாரணம் 2
- மேலும் விருத்தியடைய வேண்டும் 1

## கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

கருவி இலக்கம் 2

1. பாடசாலைத் தவணை : இரண்டாம் தவணை

2. உள்ளடங்கும் தேர்ச்சிகள் : 4.1, 5.1

3. உள்ளடங்கும் பாடப்பகுதி : குடும்ப உறுப்பினர் ஹலால், ஹராம் பேணிய உழைப்பு

4. கருவியின் தன்மை : கருத்தரங்கு

5. கருவியின் நோக்கம் :
   - ஹலால், ஹராம் பேணி உழைப்பதில் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரினதும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை விளங்கி நடப்பார்.
   - ஒவ்வொருவரும் ஹராமான உணவு, பானம், உடை, பொழுதுபோக்கு போன்றவற்றிலிருந்து தவிர்ந்து நடப்பர்.
   - கருத்தரங்கு பற்றிய அனுபவ அறிவைப் பெற்றுக் கொள்வர்.

6. கருவியைச் செயற்படுத்துவற்கான ஆலோசனைகள்:

   (i) ஆசிரியருக்கானவை:
   - செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தப்படும் முறையினை சுருக்கமாக விளக்குங்கள்.
   - காலத்தையும், நேரத்தையும் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
   - ஏனைய ஆசிரியர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
   - தகவல்களைத் திரட்டிக் கொள்வதற்காக மாணவரை வழிப்படுத்துங்கள்.
   - போதியளவு நூல்கள், சஞ்சிகைகள், வளவாளர் தொடர்புகள் போன்றவற்றைச் செய்து கொடுங்கள்.
   - கருத்தரங்குக்கான இடத்தைத் தெரிவுசெய்து ஒதுக்கிக் கொள்ளுங்கள்.
   - வகுப்பை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
   - தலைப்புக்களை ஏற்கனவே வழங்கி விடுங்கள்.
   - தயாராவதற்குப் போதிய கால அவகாசம் கொடுங்கள்.
   - முடியுமாயின் கருத்தரங்கு நிகழ்வொன்றைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பமளியுங்கள்.

(ii) மாணவருக்கானவை:

- அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுங்கள்
- பாடநூல்களிலோ, வேறு நூல்களிலோ, ஆட்களிடமோ தகவல் பெறுங்கள்.
- கருத்தரங்கு பற்றி உங்களுக்குள் கலந்துரையாடுங்கள்.
- தகவல் திரட்டல், ஒன்றிணைந்து தொகுத்தல், சபையில் சமர்ப்பித்தல், கருத்து வழங்கல் என்பவற்றுக்காக பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.
- சபையில் சமர்ப்பிப்பதற்காக ஒரு பிரதிநிதியை அமர்த்திக் கொள்ளுங்கள்.

### குழுக்களுக்கான செயற்பாடுகள்

குழு-1 தந்தை, குடும்பத்தின் தலைவர், குடும்பத்துக்கு உழைத்துக் கொடுப்பவர் என்ற வகையில், அவர் ஹலால், ஹராம் பேணுவதை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது பற்றிய கருத்துக்கள்.

குழு-2 தந்தையின் உழைப்பில் குடும்பத்தை நிருவகிப்பவர் என்ற வகையில் ஹலால், ஹராம் பேணுவதில் தாயின் பங்களிப்பு எவ்வாறு அமைதல் வேண்டும்.

குழு-3 மூத்த பிள்ளை என்ற வகையில் குடும்பத்தில் ஹலால், ஹராம் பேணுவதில் உங்களது பங்கு என்ன என்பது பற்றிய விளக்கம்.

7. புள்ளி வழங்கும் நியதிகள்

| நியதிகள் / குழு இலக்கம் / பெயர் | | தலைப்புடனான பொருத்தப்பாடு | விடய ஆழமும் ஆதாரங்களும் | சமர்ப்பித்த முறை | சபையோரின் வினாக்களுக்கு விடையளித்த பாங்கு | குழுவினரின் ஒத்துழைப்பு (கருத்துப் பரிமாறலில்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |
| 4. | | | | | | | |
| 5. | | | | | | | |
| 6. | | | | | | | |
| 7. | | | | | | | |

8. புள்ளித் திட்டம்

- மிக நன்று 4
- நன்று 3
- சாதாரணம் 2
- மேலும் விருத்தியடைய வேண்டும் 1

# கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான கருவிகள்

கருவி இலக்கம் 3

1. **பாடசாலைத் தவணை** : மூன்றாம் தவணை

2. **உள்ளடங்கும் தேர்ச்சிகள்** : 8.2

3. **உள்ளடங்கும் பாடப்பகுதி** : பொழுதுபோக்குச் சாதனங்கள்

4. **கருவியின் தன்மை** : உரையாடல்

5. **கருவியின் நோக்கம்** :
   - பொழுதுபோக்குச் சாதனம் என்பதன் கருத்தை விளங்குவார்.
   - அச்சாதனங்களில் பயனுள்ளனவும் பயனற்றனவும் நிகழ்கின்றன என்பதை இனங்கண்டு பயனுள்ளதை மட்டும் நுகர்வார்.
   - பொழுதுபோக்கை பயன்படு நிலையில் எவ்வாறு மாற்றிக் கொள்ள முடியுமென விளங்குவார்.
   - சிறந்த பொழுதுபோக்கைத் தெரிவுசெய்வார்.
   - உரையாடல் எழுதும் பயிற்சியைப் பெற்றுக் கொள்வார்.

6. **கருவியைச் செயற்படுத்துவற்கான ஆலோசனைகள்:**

   **(i) ஆசிரியருக்கானவை:**
   - செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படும் முறையினை சுருக்கமாக விளக்குங்கள்.
   - மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள்.
   - உரையாடலில் எல்லோரும் பங்கேற்கும் வகையில் உபதலைப்புகளை சிறு சிறு குழுக்களுக்கு வழங்கி தயாராகுமாறு வழிப்படுத்துங்கள். (உ-ம்: வானொலி, தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி, இணையதளம், நாவல்கள், சினமாப்படம், டெலி டிராமா)
   - தேவையான தகவல்களை நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள வழிப்படுத்துங்கள்.
   - பொழுதுபோக்குச் சாதனங்களின் நன்மைகள், தீமைகள் பற்றி உரையாடல் அமைய வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுங்கள்.

- உரையாடல் பேச்சாகவோ, எழுத்து வடிவிலோ அமைய முடியும் என்பதை தெரிவியுங்கள்.
- உரையாடலில் படிமுறையான வளர்ச்சி, தர்க்க ரீதியான விளக்கம், வாதப் பிரதிவாதம், மேற்கோள்கள் போன்றவை கருத்திற் கொள்ளப்படும் என்பதை எடுத்துக் கூறுங்கள்.
- காலம், நேரம், இடம் போன்றவற்றை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

(ii) மாணவருக்கானவை:

- அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுங்கள்
- பாடநூல்கள், ஏனைய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றிலிருந்து தகவல்களைத் திரட்டுங்கள்.
- சாதகமாகவோ, பாதகமாகவோ கருத்துக்களைப் படிமுறையாக ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள்.
- சபையில் சமர்ப்பிப்பதற்காக திருத்தமான அமைப்பில் உரையாடலை எழுதிக் கௌ்ளுங்கள்.
- எழுதப்பட்ட உரையாடல் பிரதியை பாடசாலை நூலகத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

### குழுக்களுக்கான செயற்பாடுகள்

குழு-1 நவீன பொழுதுபோக்குச் சாதனங்கள் தனிநபர்களுக்கும், சமூகத்துக்கும் நன்மையை விட தீமையை ஏற்படுத்துகின்றன என்பதை நிரூபிக்கும் வகையில் ஓர் உரையாடல் எழுதி வகுப்பில் சமர்ப்பியுங்கள்.

குழு-2 நவீன பொழுதுபோக்குச் சாதனங்கள் தனிநபர்களுக்கும் சமூகத்துக்கும் தீமையை விட நன்மையையே ஏற்படுத்துகின்றன என்பதை நிரூபிக்கும் வகையில் ஓர் உரையாடல் எழுதி வகுப்பிற் சமர்ப்பியுங்கள்.

7. புள்ளி வழங்கும் நியதிகள்

| நியதிகள் / குழு இலக்கம் / பெயர் | | மொழிச் செம்மை | படிமுறையான வளர்ச்சி | தர்க்க ரீதியான கருத்து விளக்கம் | தகவல்களின் திரட்சி | சமர்ப்பித்த பாங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |
| 4. | | | | | | | |
| 5. | | | | | | | |
| 6. | | | | | | | |
| 7. | | | | | | | |

8. புள்ளித் திட்டம்

- மிக நன்று 4
- நன்று 3
- சாதாரணம் 2
- மேலும் விருத்தியடைய வேண்டும் 1

ඉස්ලාම් ධර්මය (T) - 8 ශ්‍රේණිය
ගුරු මාර්ගෝපදේශ සංග්‍රහය

ISBN 978-955-654-232-5

2010/T/08/TIM/3000